
# தேனகம்

முத்தமிழ் விழாச் சிறப்புமலர் - 2015



பிரதேச கலாசாரப்பேரவை,

பிரதேச செயலகம் -மண்முனை வடக்கு

# தேனகம்

**இருபத்தி இரண்டாவது ஆண்டு முத்தமிழ் விழாச் சிறப்புமலர்**

வெளியீடு

**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**

**மண்முனை வடக்கு - மட்டக்களப்பு**

**2015**

# தேனகம்

## மண்ணில் எம் கலைகளைக் கண்ணென மதிப்போம்

### மண்ணில் எம் கலைகளைக் கண்ணென மதிப்போம்


இருபத்தி இரண்டாவது ஆண்டு
முத்தமிழ் விழாச் சிறப்புமலர்

கணனி வடிவமைப்பு
**த.சங்கர்**

அச்சுப்பதிப்பு
**வணசிங்கா பிறிண்டர்ஸ்**
126/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு

**வெளியீடு**
**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**
**மண்முனைவடக்கு - மட்டக்களப்பு**
**2015**



தலைவர்
**திரு. வெ. தவராஜா**
பிரதேச செயலாளர்

செயலாளர்
**திருமதி.த.ஜெயமாறன்**
கலாசார உத்தியோகத்தர்

பேரவை உறுப்பினர்கள்
**திருமதி.சு.சக்கரவர்த்தி**
**திரு.க.கணேசானந்தம்**
**திரு.இ.பாக்கியராசா**
**திரு.கதிர்பாரதிதாசன்**
**திருமதி.தி.ஹரிதாஸ்**
**திரு.எஸ்.சந்திரகுமார்**
**திருமதி.ம.மகேந்திரன்**
**திருமதி.சு.வேதநாயகம்**
**திரு.நா.சிவலிங்கேஸ்வரன்**
**திருமதி.ம.சிவஞானசோதிகுரு**
**திரு.எ.பிரியகாந்தன்**
**திரு.எஸ்.பாக்கியநேசன்**
**திரு.வி.மைக்கல்கொலின்**
**திருமதி.சா.மதனகுமார்**
**திருமதி.த.ஜெயந்**



# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் இவ்வருடம் நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழாவின் பொருட்டு வெளிவரும் "தேனகம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனநிறைவடைகின்றேன்.

இப்பிரதேச மக்களின் வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் சார்ந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்படும் இப்பணியுடன் நிலைபேறான கலாசார விழுமியங்கள் பேணும் நடவடிக்கைகளினூடாக மாறிவரும் உலக நடப்புகளிற்கேற்ப பொருளாதார முன்னேற்றத்தையும் இணைத்ததான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தேவைப்பாடுகளையும் கருத்திலெடுத்தல் சாலச்சிறந்தது.

எனவே பல்வேறு தனித்திறமைகளைக் கொண்ட கலைஞர்களின் கலை இலக்கிய பணிகளையும் அவர்களின் சுய ஆற்றல்களையும் உள்ளக் கிடக்கைகளையும் ஆவணப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புகளைத் தாங்கிவரும் "தேனகம்" எனும் மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும் ஒன்றியத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இம்மலர் வெளியீடு சிறந்த ஒரு மலராக மிளிர வேண்டும் என்று எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

எமது மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் இருபத்தி இரண்டாவது தேனகம் மலர் சிறப்பாக மலர்வதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். கடந்த காலங்களில் பல்வேறு கலை, கலாசாரம், பண்பாடு சார்ந்த விடயங்களை இம்மலர் தாங்கி வந்துள்ளபோதிலும், இவ்வருடம் சற்று வித்தியாசமாக எமது மட்டக்களப்பு மண்ணின் பாரம்பரியக் கலையான கூத்துக் கலை தொடர்பாக இதுவரை பேசப்படாத விடயங்கள் இம்மலரில் இடம்பிடித்துள்ளது சிறப்பானதாகும். இதுதவிர பாடசாலை மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட சிறுகதைப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி திறமையாக தங்களது ஆற்றலை வெளிப்படுத்திய சில மாணவர்களின் சிறுகதைகளும் இம்மலரில் இடம்பெறுகின்றது.

அத்துடன் தற்காலத்திற்குரிய முக்கிய தொனிப்பொருள்களான "பாரம்பரியக் கலையைப் பேணுதல்", "மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவித்தல்" என்ற இருவிடயங்களும் ஒன்றுசேர இம்மலரில் இடம்பெறுவது இம்மலருக்கு மேலும் மெருகூட்டுகின்றது என்றே கூற வேண்டும்.

அந்தவகையில் இம்மலர் வெளிவர உழைத்த அனைவருக்கும் மற்றும் கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதுடன், காலத்தின் தேவை கருதி எதிர்காலத்தில் தொடர்ந்தும் இம்மலர் மலர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வெ.தவராஜா,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு.



# வெளியீட்டுரை

மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் இருபத்தி இரண்டாவது தேனகம் மலர் வெளியீட்டில் எனக்கும் பங்குண்டு என்பது பெருமிதத்தைத் தருகின்றது. கடந்த காலங்களில் வெளிவந்த மலர்களில் பல ஆக்கபூர்வமான விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது யாவரும் அறிந்த விடயமே.


அந்தவகையில் காலத்தின் தேவை கருதி இம்முறை சற்று வித்தியாசமாக, மட்டக்களப்பின் பாரம்பரியக் கலையான கூத்து தொடர்பாக இதுவரை பெரிதாகப் பேசப்படாத விடயங்கள் இம்மலரில் இடம்பெறுகின்றது. அதுமட்டுமன்றி, மாணவர்களின் சிறுகதை எழுதும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட சிறுகதைப் பயிற்சிப்பட்டறையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில சிறுகதைகளும் இம்மலரில் இடம்பெறுகின்றது.

அந்தவகையில் இம்மலர் வெளிவர எமக்கு சிறந்த ஆசானாகவிருந்து ஆலோசனைகள் பல வழங்கிய எமது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் அவர்களுக்கும், வாழ்த்துச்செய்தி வழங்கிய அரசாங்க அதிபருக்கும், சிறுகதைப் பயிற்சிப் பட்டறைக்கும் இம்மலர் வெளியீட்டிற்கும் தங்களது பங்களிப்பினை நல்கிய கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும், பயிற்சிப் பட்டறையை சிறப்பாக நடாத்தி சிறந்த அறுவடையை எமக்குப் பெற்றுத்தந்த பேராசிரியர் செ. யோகராசா மற்றும் திரு.த.மலர்ச்செல்வன் அவர்களுக்கும், கலாசாரப்பேரவை உறுப்பினர்களுக்கும், அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பனையில் பங்காற்றிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கும், அதிஷ்ட இலாபச் சீட்டினை வாங்கி எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும், இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத் தந்த வணசிங்கா அச்சகத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


**திருமதி.த.ஜெயமாறன்,**

கலாசார உத்தியோகத்தர்,

பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.



# பொருளடக்கம்


- தமிழினத்தின் பாரம்பரிய கலையிருப்பு கூத்து
- களரியில் கோமாளியும் ஈழக்கூத்தின் மீளுருவாக்கமும்
- பண்டைத்தமிழர் பழக்கவழக்க ஆசாரங்களும் அவற்றில் சுகாதாரமும்
- மட்டக்களப்பு வடமோடி தென்மோடி கூத்துப்பிரதிகள்
- பூத சக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர் சரித்திரங்கள்
- கூத்தில் ஒப்பனை
- ஓய்வு
- அனுபவம்
- தெளிவு
- மனிதன் என்றால் மனசாட்சி ஏற்குமா?
- சிறுவர் இன்பச்சிந்தனைப்பாக்கள்
- மட்டக்களப்பு கிராமியச்சொற்கள்
- கலைஞர் கௌரவம்

சிறுகதைகளின் கதை

- மூத்தம்மா
- கனவுகள்
- மினி
- மறந்திடுமா உன் நினைவுகள்
- மறையாதவை
- பிரிவின் தேடல்
- இலக்கு

# தமிழினத்தின் பாரம்பரிய கலையிருப்பு

# கூத்து

"பா டுபடுபவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா" என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் சொற் பாவிற்கமைய காடும் மலையும் சேர்ந்தும் படகும் துறையும் இணைந் தும் வயலும் கடலும் சூழ்ந்தும் பாட்டும் கூத்தும் பரவ அழகிய அன்னை நிலத்தில் வசந்தம் தழுவிய அழகிய வாழ்விற்கு சொந்தக்காரர் களாக இருந்தோம் நாம். இன்று எல்லாமே நினைவுக்குரியதாக, நெடுமூச்சுக்குரிய தாக கைநழுவிப்போன வடுக்களாக ஆகிவிட்டன. இவ்வாறு கைநழுவிப் போனவற்றுள் எமது பாரம்பரிய பண்பாட்டு கலைவடிவமான கூத்தும் ஒன்றாகும். உலகமயமாக்கலும், நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் பாரம்பரியகலைகளின் இருப் பிடத்தை சிதைவடையச் செய்துள்ளன. பொரு ளாதார தாராளமயமாக்கல், தென்னிந்திய சினிமா வின் வருகை என்பன எம்மினத்தின் கலையிருப்பை நீண்டதூரம் பயணிக்கவைத்துள்ளன. எது எப்படி இருப்பினும் எமது பண்பாட்டு விழுமியங்களை கலை அம்சங்களை எம்மருகே வரவழைத்து கலைகளுக்கு இடையிலான இருப்பை நெருக்க மாக்கி அவற்றின் மீது காதல் கொள்ளவேண்டிய கட்டாயத் தேவை இன்று எல்லோராலும் உணரப்பட்டுள்ளது.

மனித சமூகத்தையும் விலங்கினத்தையும் பிரித்து இனங்காணும் கருவிகளில் கலையும் ஒன்றாகும். இக்கலைகளில் கூத்துக்கலை மனித சமுதாயத்தின் உழைப்பு நெறியில் பிறந்த தனித்துவக் கலையாகும். நாட்டார் கலைவடிவங்களில் ஓர் ஆடற்கலை





வடமோடிக் கூத்துக்கள் புராண இதிகாசக் கதைகளை கூறுபவையாகவும் தென் மோடிக் கூத்துக்கள் தனிமனிதனின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து விருப்பு வெறுப்புக்களை எதுகை மோனையுடன் கூடிய நயப்புத் தன்மையுடன் புலவனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப புனையப்பட்ட காதல் வீரக்கதைகளை கூறுபவையாக அமையப்பெற்றுள்ளன.

வடிவமாக கிழக்கிலங்கையில் ஒளிபெற்று ஒளிரும் கலையாக கூத்து சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. நாட்டார் கலைகள் சமயப் பின்னணி கொண்டிருக்கும் அதேநேரம் சமூக பல்நோக்கம் கொண்டவை என்பதற்கு கூத்து சான்றாகும். இசையும், நடனமும் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதலாக மனித உணர்வுகளின் வெளிப்படுத்துகையாகவும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் புலப் படுத்தும் கருவி களாகவும் நிலவி வந்துள்ளன.

"ஆடலும் பாடலும் ஈழ நாட்டிலே இன்றும் நின்றுநிலவுகின்றன" என்ற விபுலானந் தரின் கூற்றுக்கிணங்க கூத்துக்கலை இன்று உயிரூட்டம் பெற்றுவருகின்றது.

"மீன்மகள் பாடுகிறாள் வாவிமகள் ஆடுகிறாள்
மட்டுநகர் அழகான மேடையம்மா - இங்கு
எட்டுத்திசையும் கலையின் வாடையம்மா"


என்ற விபுலானந்த அடிகளாரின் கவிவரிகளை நோக்கும் போது கூத்தின் அமைவிடமாக மட்டக்களப்பு இருந்துள்ளமை நிருபணமாகின்றது.


வடமோடிக் கூத்துக்கள் புராண இதிகாச கதைகளை கூறுபவையாகவும், தென் மோடிக் கூத்துக்கள் தனிமனிதனின் உணர்வு களுக்கு மதிப்பளித்து விருப்பு வெறுப்புக்களை எதுகைமோனையுடன் கூடிய நயப்புத் தன்மையுடன் புலவனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப புனையப்பட்ட காதல், வீரக்கதைகளை கூறுபவையாக அமையப்பெற்றுள்ளன. கூத்துக் கலைகளில் மத்தளம், சல்லரி ஆகிய இரு இசைக் கருவிகளே பயன்படுத்தப்படுவது சிறப்பம்சம் ஆகும்.

கூத்துக்கள் நவீன நாடகங்களில் இருந்து பாத்திரங்களிலும், மேடை அமைப்புக் களிலும், கதைப்போக்கிலும், உடை அமைப்புக்களிலும் வேறுபடுகின்றது. இவை கூத்துக்களின் தனித்துவமான தன்மையை உணர்த்துகின்றது. ஆடல்களும், பாடல்களும், வசனக்கதைகளும் கூத்தில் காணப்படுகின்றன.


கூத்துக்கள் வட்டக்களரியில் ஆடப் படுவது சிறப்பானதொன்றாகும். வட்டக்களரி கூத்துகட்கு திரையில்லை. நான்குபக்கங்களிலும் சுற்றிப்பார்வையாளர்கள் இருப்பர். பார்வை யாளர்கள் தாமே கதை நிகழும் இடத்தை கற்பனையில் அறிவர். கூத்து பழக்குபவர்கள் அண்ணாவிமார்கள் என அழைக்கப்படுவர். இவர்கள்தான் மத்தளம் வாசிப்பவர்களாகவும் காணப்படுவர்.மேலும் களரியில் தாளக்காரர், பாட்டுக்காரர், ஏட்டு அண்ணாவியார் ஆகியோர் காணப்படுவர்.

கூத்துக்கள் பழக்கப்பட்டு அரங்கேற்றம் செய் யும் வரை பலநிகழ்வுகள் இடம்பெறும். முதலில் சட்டம் கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும். அதாவது அண்ணாவியார் இரண்டு களரிகள் பழக்கிவிட்டு குரல் வளம், கூத்தர்களின் தோற்றம், ஆடல்முறை என்பவற்றிக்கு ஏற்ப அவர்கட்கு ஏற்ற பாத்திரத்தை பனை ஓலையில் எழுதி கூத்தரிடம் கொடுப்பர். இதன் பின்னர் அந்தந்த பாத்திரங்களையே ஆடவேண்டும். இது நியதி. இதுவே சட்டம் கொடுத்தல் ஆகும்.











அதற்குப்பின் சதங்கை அணி விழா நடாத்தப்படும். இதனை சலங்கை கட்டுதல் எனக்கூறுவார்கள். அதாவது கூத்துக்கு மிக முக்கியமானது சலங்கை. சலங்கை இன்றி ஆடிப்பழகியபின் சலங்கையை கட்டி ஆடிப் பழகுவார்கள். இதற்குப் பின்னர் அடுக்குப் பார்க்கும் நிகழ்வு இடம்பெறும். இந் நிகழ்வு இரவு நேரத்திலேயே இடம்பெறும். இந்நிகழ்வானது நேரத்தை முகாமைசெய்யும் நிகழ்வாக அமையும். இவையெல்லாம் நிறைவுற்றதும் இறுதியாக அரங்கேற்றம் இடம் பெறும். ஊர்ப் பெரியோர்கள், சொந்த பந்தங்களுக்கு எல்லாம் அறிவித்து ஆலயவீதியில் அல்லது பொதுவான ஓர் இடத்தில் அரகேற்றம் செய்யப்படும். அறைக்குள் ஆடி அம்பலத்தில் அரங்கேற்றம் செய்யப்படும். இதன்போது பட்டாசுகொழுத்துதல், சால்வை போடுதல், பூமாலை அணிவித்தல், விருந்தளித்தல் என பலநிகழ்வுகள் இடம்பெறும். இவை சமூக ஒற்றுமையையும் கூட்டுணர்வையும் வெளிப் படுத்துபவையாக காணப்படும்.

இக்கூத்துக்கலைகளில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா போன்ற பாவைகளும் தரு, சிந்து ஆகிய இசைப்பாவைகளும் உலா, பொடியடி, பாய்ச்சல், வீசாணம், நாலடி, எட்டடி போன்ற ஆட்ட முறைகளும் காணப்படுகின்றன. வடமோடி, தென்மோடி ஆகிய இரண்டு கூத்துகட்கும் இடையே ஆடல், பாடல், உடை அலங்காரம், கதைகள் என்பன ஆற்றுகை முறையில் இருந்து வேறுபட்டு காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும். வடமோடிக் கூத்துக்கள் புராண இதிகாச கதைகளை மையமாக கொண்டமைந்தமையால் இதில் வரும் பாத்திர அமைப்புக்களும், உடை அமைப்புக்களும் புராண, இதிகாச பாத்திரங்களை ஒத்ததாகக் காணப்படும். ராஜ கிரீடம், சடாமுடி, ராஜ கொடுக்கு என்பன முக்கியம் பெறும். அணிகலங்களை பொறுத்த வரையில் ஆபரணங்கள் கடவுள் பாத்திரங்கட்கு ஏற்ப பூமாலைகள், தாபடக்க மாலைகள் என்பன அணியப் படும். வில், அம்பு, தண்டாயுதம் என்பன ஆயுதங்களாக காணப் படும். தென்மோடிக் கூத்தில் கரப்புடுப்பு முக்கியம் பெறுவதுடன் நீள் கொடுக்கு (நெட்டுடை) அரைக்கொடுக்கு (வட்டுடை) முறையும் காணப்படும். பாத்திரங்கட்கு ஏற்ப இக்கொடுக்கு முறைமாறுபடும். அதாவது ராஜாவும் மந்திரியுமாயின் ராஜாவுக்கு நீள்கொடுக்கும், மந்திரிக்கு அரைக்கொடுக்கும் அணிவிக்கப்படுவதுடன், வாள் வீச்சு இங்கு முக்கியம்பெறும். கிரீடம் அணியப்படாமல் லேட்டஸ் எனப்படும் கண்ணாடித் துண்டுகளினால் அலங்கரிக் கப்பட்ட முடி கட்டப்படும்.

இவ்வாறான கூத்துக் களில் பாடல்களும், ஆடல் களும், தருக்களும் முக்கியம் பெறுகின்றன. வடமோடி கூத்தில் கூத்தருக்கே அதிகமான பாடல்கள் இருக்கும். அவை கற்பனைத்திறன் கொண்டதாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் அமைவதுடன் பாடல்கள் அதிகமாக இரண்டடி தருக்களாக

அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். உதாரணமாக பவளக்கொடி எனும் வடமோடிக் கூத்தில் பவளக்கொடி மீதுமோகம் கொண்ட அருச்சுன பகவான் கிருஷ்ணரின் உதவியுடன் அண்டப்சி வடிவம் கொண்டு பவளக் கொடியின் அறைக்குள்ளே சென்று அவள் அழகில் மயங்கி பின்வருமாறு கூறுகின்றான்.

"மூன்றாம் பிறைநுதலோ
இவள் முகம் பூரணசந்திரனோ
மோகம் மிஞ்சுதையோ
இவள் முகம் தனைக் காண"

இவ்வாறு வடமோடிக் கூத்துக்கள் அமைய, தென்மோடிக் கூத்துக்களில் தரு முக்கியம் பெறுவதைக் காணலாம். இங்கு அண்ணாவியாரே தருபாடுவார். இவை பாத்திரங்களுக்கு அமைய வேறுபடும்.

"நன்னன்ன நானேநன்னா நானநன்ன
நானன்ன நானேநன்னா.....
ஆசைதிருமகனே
எனது அருந்தவப்புத்திரனே
நேசம்தான் அன்னை உனக்கொரு
வாசம்தான் பெண்ணை......"

இங்கு தருவிற்கு ஏற்ப பாடல் அமையும். இவை இனிமையும் காதல் சுவையும் கொண்டவை. அடுத்து வரும் பாடல் அலங்கார ரூபன் கூத்தில் உள்ளது. அலங்கார ரூபியும், தோழிகளும் பொய்கையில் நீராடிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது குளத்திலிருந்த மீன்கள் மேலே பாய்ந்து அலங்கார ரூபியின் மேல் விழுகின்றன. இதைக் கண்டதும் அலங்கார ரூபி தோழிமார்களிடம் பின்வருமாறு கூறுகின்றாள்.

"வேலன்றி வாளன்றி
வேறொன்றில்லாமல்
விழி கொல்லும் பெண்ணாரே
காலுக்கும் மேலுக்கும் மேலுக்கொருமீன்
கதித்துக்குதிப்பதென்ன என்தோழி"

இந்த வினாவிற்கு தோழிகள் கூறும் பதில் வருமாறு.

"கோலக் குழையில் பொன்னோலையில்
மாலையில் கூடித்திரும்பு கண்ணை
இனமென்று வாலப்பருவத்து
வேல்கண்டு மேல் கொண்டு
வந்து குதித்த தம்மா என் அம்மா...."

என்று தோழி பதில் கூறுகின்றாள். இனி இவற்றின் நயங்களைப் பார்ப்போம். வேலாயுதத்தாலும், வாளாயுதத்தாலும் வேறு எந்த விதமான ஆயுதத்தாலும் கொல்ல முடியாத வாலிபர்களின் உள்ளத்தமைதியை உங்களது விழியாகிய ஆயுதத்தாலே பார்த்தவுடன் கொல்லுகின்ற பெண்களே என்று கூறியிருப்பது கற்பனையின் உச்சக்கட்டத்தை கொடுக்கின்றது. இந்தக் கேள்விக்கு தோழிகள் கூறும் பதில் கற்பனையின் சிகரத்தைத் தொடுகின்றது. அம்மா பொற்கட்டினாலே இழைக்கப்பட்ட உங்களது தோடுகளோடும் அணிந்துள்ள மாலைகளோடும் கயல் மீன் போன்ற உங்களது கண்கள் இரு பக்கங்களிலும் அசைந்து சென்று பார்த்து கூடித்திரும்புவதை குளத்திலே உள்ள வாலிப பருவத்து கயல் மீன்கள் தங்களுடைய இனமென்றெண்ணி உங்களது கண்களோடு கூடிக்குலாவுவதற்கு உங்கள் மேல் பாய்கின்றன. இவை போன்று காதல் சுவைமிக்க பாடல்கள் அமைந்திருப்பதாலும் காதல் கதைகளையே தென்மோடிக் கூத்துக்கள் கருவாக கொண்டிருப்பதாலும் தென்மோடிக் கூத்துக்கள் எல்லாம் காமரசம் ததும்பும் அகப்பொருள் கூத்துக்கள் என்றும், வடமோடிக் கூத்துக்கள் எல்லாம் வீரம் செறிந்த புறப்பொருள் கூத்துக்கள் எனவும் கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான சிறப்பு வாய்ந்த கூத்துக்கலையின் சிறப்புக்களை பேணிக்காப்பது மட்டுமன்றி, அதனை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுத்து அழியாச் சொத்தாக மெருகூட்டி வளர்ப்பதும் தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் கடமையுமாகும்.

**மு.நமசிவாயம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
மண்முனை வடக்கு.

# களரியில் கோமாளியும் ஈழக் கூத்தின் மீளுருவாக்கமும் : சமூக நீதிக்கும் சமூக ஒன்றிணைவிற்குமான கூத்தரங்கின் இயக்கம்

**கலாநிதி. சி. ஜெயசங்கர்**

இன்றைய நிலையில் கத்தோலிக்க கூத்துக்கள் மேடையில் படிக்கப்படுவதாகவே அறியப்பட்டும், அறியப்படுத்தப் பட்டும் வருகின்றன. பாட்டைப் பிரதானமாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்படுவதாலேயே "கூத்துப் படிப்பது" என்றழைப்பது பழக்கத்திலிருந்து வருகின்றது.

சமயத்தை மக்கள் மயப் படுத்துவதற்கு வலுவான ஊடகங்களாக கூத்துக்கள் அடையாளம் காணப்பட்டு அவை பயன்படுத்தப்பட்டு வந்திருக் கின்றன. இந்தவகையில் அவை வெற்றிகரமாகவும் அமைந்திருக் கின்றன என்பது வரலாறும், நடைமுறையுமாகும்.

ஆயினும் சமயக் காரணங்களால் களரியில் ஆடப் பட்டு வந்த கூத்துக்கள் படச் சட்ட மேடைக்குள் ஏறிப் புகுந்து கொள்வதுடன் பின்னர் அதன் ஆடல் அம்சத்தையும் கழற்றி விட்டிருக்கின்றது.

ஆடலை இழந்த ஆற்றுகைப் பாடலில் கவனத்தை குவிக்கத் தொடங்கிவிட்டிருக்கிறது. இது பாடலில் மெருகேற்றத்தைக் கொண்டுவந்து ஆட்டக் கூத்தை "கூத்துப் படிப்பது" அல்லது "கூத்து படிக்கிறது" எனப் பெயரையும் வரித்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணியில் மட்டக்களப்பில் இன்னமும் களரியில் ஆடப்பட்டு வரும் கத்தோலிக்கக் கூத்துக்கள் பற்றி உரையாடுவது புதிய திறப்புக்களுக்கு உதவுவதாக இருக்கும் எனக் கருதமுடிகிறது.

மட்டக்களப்பில் பரவலாக ஆடப்பட்டு வரும் கூத்துக்களின் பாடுபொருள் புராண, இதிகாசங்கள், வரலாறுகள், கற்பனைக் கதைகள் என்பவையாக இருக்கின்றது. இவற்றிற்குச் சமமமாக இல்லாவிட்டாலும் சமாந்தரமாக சிறுவர் கூத்துக்கள், மீளுருவாக்கக் கூத்துக்கள், உள்ளூர் தெய்வ வரலாறுகள், வழக்காறுகள் என்பவை கூத்தாக ஆடப்பட்டு வருகின்றன. இச்சமாந்தர முன்னெடுப்புக்கள் எல்லாம் அண்ணாவிமாரின் வழிநடத்தலிலும், மூத்த கூத்தர், கூத்து ஆர்வலரின் முகாமைத்துவத்திலும் நவீன அரங்க கலைப் புலமையாளரின் பங்கேற்பிலும், கருத்தாக்கத்திலும் நிகழ்ந்து வருகின்றன.



மேற்குறிப்பிட்ட கூத்தரங்க செயற்பாடுகளின் அளவிற்கு இல்லாவிடினும் கத்தோலிக்க கூத்தை களரியில் காணும் வாய்ப்பும் இன்னமும் இருந்துகொண்டிருப்பது அரங்க முக்கியத்துவமும், சமூக முக்கியத்துவமுடைய விடயமாகும்.

இந்தவகையில் தன்னாமுனையில் 2011இல் ஆடப்பட்ட முழு இரவுக் கூத்தும், 2015இல் ஆடத் தொடங்கப்படும் முறக்கொட்டாஞ்சேனை ஞானபுத்திரன் கூத்தும் கவனத்திற்குரியதாக அமைகின்றன. இது நிகழ்வதற்கு ஆதாரமாக இருந்துகொண்டிருக்கின்ற அண்ணாவியார் சீனித்தம்பி அலெக்ஸ்சாண்டர் அவர்கள் மதிப்பிற்குரியவராகின்றார். எந்த வகையிலான ஆதாரமும், அங்கீகாரமும் இல்லாவிட்டாலும் இக்கலையினைத் தன்னுள் அடைகாத்து வைத்திருக்கும் அவரது அர்ப்பணிப்பு கற்றலுக்குரியது. இது கிராமியக் கலை ஆளுமைகளாக இருப்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய முக்கியவிடயமாகும். ஒவ்வோரு செயலிலும் இலாப நட்டக் கணக்குப் பார்க்கும் சமூகச் சூழலில் இத்தகைய ஆளுமைகளின் இருப்பு வெறும் மாதிரிகள் அல்ல. மிகப் பெரும் உதாரணங்களே ஆகும்.

கடுங்கோடை எல்லாம் உயிர்காத்து நீர் விழும் பொழுதுகளில் துளிர் விட்டு உயிர் காக்கும் வேர்களும் வித்துக்களுமான மனிதர்கள் இவர்கள்.

கூத்தரங்கின் மற்றுமொரு அழகு – புலவர்கள். பல்வேறு மதக் கூத்துக்களையும் பாடி இருக்கிறார்கள் அண்ணாவிமார்கள். அவ்வாறே பல்வேறு மதக் கூத்துக்களை ஆட்டுவித்திருக்கிறார்கள். கூத்தர்களும் அவ்வாறே ஆடி இருக்கிறார்கள். இதேவேளை சமய மோதல்கள், முரண்பாடுகள் என்பவையும் இருந்திருக்கின்றன என்பதும் மறைப்புக்குரியதல்ல. ஆயினும் முரண்பாடுகள், பேதங்கள் கடந்து இயங்கும் பண்பாட்டைக் கொண்டதாக கூத்தரங்கு விளங்கி வந்திருக்கின்றது.

மனிதர்களிடமிருந்து பிரிக்க முடியாதவையாக சமயங்கள் காணப்படுவதுடன், மனிதர்களைப் பிரித்து நிற்பவையாகவும் 21ம் நூற்றாண்டிலும் வளர்ச்சி கண்டிருப்பது நவீனத் துயரம் ஆகும். இத்துயரை நீக்க வழிமுறையாக கூத்தரங்கின் பண்பாடு புரிந்து கொள்ளப்படுவதுடன் முன்னெடுக்கப்படுவதும் தேவையானதாகின்றது.

கத்தோலிக்கக் கூத்துக்களில் காணப்படுகின்ற ஆனால் இந்து மதக் கூத்துக்களில் காணக்கிடைக்காததும் ஆனால் இப்போழுது “நாகரிகக் குறைவு” எனக் கருதி கைவிடப்பட்டும் வருகின்ற கோமாளிப் பாத்திரம் கூர்ந்த கவனிப்பிற்குரியதாகின்றது.

கூத்தில் வரும் கோமாளி “அநாகரிகமாக நடந்துகொள்கிறான்” என “நாகரிக மனிதர்கள்” அவனைக் கழித்து விட்டிருக்கின்றனர். ஆனால் சமூக நீதியின் குரலாக ஒடுக்கப்பட்ட மக்களின், குரலற்ற மக்களின் குரலாக கூத்தின் கோமாளி இயங்கி வந்திருப்பதனை ஈழக் கூத்தரங்கை அறிந்தவர் அறிவர். தற்பொழுதும் புழக்கத்திலுள்ள தமிழ் நாட்டுக் கூத்தில் வரும் கட்டியக்காரனுடன் ஒப்பிடக்கூடியவன் ஈழக் கோமாளி. சராசரி கிராமத்தின் மனிதனாக வாழ்ந்து கொண்டு சமூக நீதிக்கான அங்கதக் குரல் எழுப்பும் ஆளுமையான கோமாளியின் உருவாக்கமும் அத்தகைய கலை ஆளுமையை ஏற்றுக்கொள்ளும் சமூகச் சூழலும் இன்றைய நிலையில் அதிக கவனத்திற்கும் உரையாடலுக்கும் உரியவை. சமூக நீதிக்காக அங்கதக் குரலெழுப்பும் கோமாளிக்குத் தீங்கிழைப்பது வெட்கக்கேடானதும், கீழ்த்தரமானதுமாக கொள்ளப்படும் பண்பாடு சமூகத்திற்குரியதாக இருந்திருக்கிறது. பெயர் பெற்ற கோமாளி கீழ்த்தரமான நகைச்சுவையில் உயிர்வாழ்பவனல்லன். சமூகத்தில் கூத்தரங்கின் கோமாளியின் இடம் சமூக, அரசியல், பண்பாட்டு முக்கியத்துவமுடையது.

கூத்தரங்கில் கோமாளியின் நீக்கம் அல்லது கோமாளியற்ற கூத்தரங்கு உயிரற்ற உடல் என்பதை ஈழக்கூத்தரங்கில் கோமாளியை அறிந்தவர் மறுக்கார்.

சமூகங்களில் மனித உரிமை நிலைநாட்டுவதில் மனித உரிமைப் பாதுகாவலர்களை (*Human Rights Defenders*) உருவாக்க அல்லது வளர்த்தெடுக்க முனையும் சமூகச் செயற்பாட்டில் ஈழக் கூத்தரங்கின் கோமாளியின் இருப்பையும், இயக்கத்தையும் கவனத்திற்கொண்டு இயங்குவது இயல்பானதாகவும் வலுவானதாகவும் அமையக்கூடியது என்பது விளங்கிக் கொள்ளப்படவேண்டி இருக்கின்றது.

பாரம்பரிய சமூகத்தில் இயல்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற அல்லது இயங்கி வந்திருக்கின்ற சமூகப் பொறிமுறைகளில் சமகால பிரயோகத் தேவைகளில் கூத்தரங்கில் கோமாளியின் மீள்வருகை சமூக நீதிக்கான சமூகத்தின் குரலாகவும், கூத்தரங்கின் உயிர் இருப்பாகவும் அமையும் என்பது வெளிப்படை. ஆனால் இத்தகையதொரு கோமாளியை நிர்வாக நடைமுறையூடாகவன்றி சமூக நடைமுறைக்கூடாகவே உருவாக்க முடியும் என்பது யதார்த்தம். அத்தகைய சமூக நடைமுறையை கூத்தரங்கின் வழி உருவாக்குவது சமூக ஜனநாயகப்படுத்தலுடன் தொடர்புறுகின்றது.

ஈழக் கூத்தரங்கில் கோமாளியின் மீள்வருகை சமூக ஜனநாயகத்தின் அடையாளப் படுத்தலாக அமையும் என்பதும், வட்டக்களரியில் கூத்தின் இயக்கம் என்பது சமூக ஒன்றிணைவைச் சாத்தியப்படுத்துவது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

"மனிதர்களை மனிதர் கொல்லும்
வாழ்க்கை தன்னை வெற்றியென்றோம்
மனிதருடன் மனிதர் வாழும்
வாழ்க்கையல்லோ வெற்றியாகும்."
(சிம்மாசன போர் கூத்து மீளுருவாக்கல் பாடல்)


கூத்தரங்கில் அடியோடிக் கிடக்கும் பேதங்கள் கடந்த மனிதர்களது ஊடாட்டங்களையும், உருவாக்கங்களையும் கூத்தாடுவோம், கொண்டாடுவோம்.

## பிரதேச மட்ட தேசிய இலக்கிய விழா – 2015

பாலர் பிரிவு

| போட்டியின் தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| கவிதை பாடல் | 1ம் இடம் | அல்பிறின் யேசுசகாயம் ஹரிஸ்கர் | மட்/கல்லடி வேலூர் சக்திவித்தியாலயம் |
| | 2ம் இடம் | செல்வி வி.நிலாமதி | மட்/கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் |
| | 3ம் இடம் | செல்வி பொ.சதேஸக்கா | மட்/கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் |
| | 3ம் இடம் | பிரேமகுமார் அக்ஷயா | மட்/இராமகிருஷ்ணமிஷன் கல்லடி |
| கையெழுத்துப் போட்டி | 1ம் இடம் | நே.ரபேக்கானி | மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் |
| | 2ம் இடம் | சி.கிஷோமி | மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் |
| | 3ம் இடம் | தருமலிங்கம் ஜயமிதா | மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் |
| | 3ம் இடம் | புவனேந்திரன் அம்ருதா | மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் |


# பண்டைத்தமிழர் பழக்கவழக்க ஆசாரங்களும் அவற்றில் சுகாதாரமும்



**திருமதி திருமணிதேவி சுவீகரன்**
நொச்சிமுனை

உலகில் வழங்கும் செம்மொழிகளில் ஒன்றான நம் தமிழ் மொழி பண்டைக் காலந்தொட்டு வளர்ச்சியுற்று வருகின்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த கவிவளம் உடையதாகவும் பலவித கலைகளிலும் நாகரீகத்திலும் முதிர்வுற்று வாழ்ந்து வந்த நம் பழந்தமிழ் குடிமக்கள் சிறந்த பண்புடையவர்களாய் வாழ்ந்தனர் என்பது தெளிவாக அறியக்கிடைக்கின்றது.

இவர்களது செய்தொழில் வேற்றுமைகளால் பல குடிகளாகவும் பல சாதிகளாகவும் பிரிந்து வாழ்ந்தாலும் ஒரே வித பழக்க வழக்க ஆசாரங் களை உடையவர்களாக வாழ்ந்தார்கள். மட்டக்களப்பு தமிழர் பழக்க ஆசாரங்களை எடுத்து நோக்குவோமானால் அவை சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதை நாம் அறியக்கூடியதாகவிருக்கின்றது. அன்றாட வாழ்க்கையிலும், வீட்டில் நடைபெறும் சடங்குகளிலும் சுகாதாரம் பின்னிப் பிணைந்ததாக



> வாய் கட்டி பூசை செய்வது, நிவேதனப் பொருட்கள் தயாரிப்பது என்பதும் கரைக்கும் போது எச்சில் படாமலும் சுவாசத்தின் மூலம் கிருமிகள் தொற்றாவண்ணமும் இவ்வாறு நடந்து கொண்டார்கள். மஞ்சள் நீரில் கழுவுவது அதில் உள்ள கிருமிகளை அகற்றுவதற்காக, இங்கேயும் சுகாதாரம் நிலை நாட்டப்படுகின்றது.

நடைமுறைபடுவதாயிற்று. இவை யாவும் கடவுள் நம்பிக்கை, சாஸ்திரம், சுகாதாரம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டவைகளே.

பண்டைத் தமிழ் மக்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் உடைய வர்களாக நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்ற நோக்கோடு பழக்க வழக்க ஆசாரங்க ளுடன் சுகாதார முறையினையும் கடவுளோடும் கோயிலோடும் தொடர்புபடுத்தி வைத்திருந் தார்கள். ஆலயம் என்பது ஓர் தூய்மையான இடம். அங்கே செல்லும் போது மிகவும் தூய் மையாகச் செல்ல வேண்டும். மனிதன் உயிர் வாழ்வதற்கு பஞ்சபூதங்களில் இருந்து சக்தி யைப் பெறுகின்றான். மனிதனுடைய உடல் அமைப்பு வாதம், பித்தம், சிலேற்பனம் (கபம்) என்று பிரித்துக் கூறப்படுகின்றது. இவை சம நிலையில் இல்லாத போது நோய் ஏற்படுகின்றது. வாதம் - உடலிலே நீர்த்தன்மை அதிகமாக இருக்கும். பித்தம் - உடலிலே வெப்பம் அதிகமாக இருக்கும். கபம் - வாதமும் பித்தமும் சேர்ந்து காணப்படுகின்றது. சிலேற் பனம் (கபம்) - மண்ணுடன் தொடர்புடைய தாகவும், வாதம் - நீருடன் தொடர்புடையதாகவும், இவை மூன்றும் மூன்று கடவுளை சேர்ந்ததா கவும் சொல்லப்பட்டிருக்கின்றது. வாதம் - விஸ்ணுவுக்கும் - (துளசி), பித்தம் - சிவனுக்கும் (வில்வம்), கபம் - விநாயகருக்கும் (அறுகம்புல்) உடையதாக இவை தொடர்புபடுத்தப்பட்டி ருக்கின்றன. அம்மன் கோயில்களில் மூன்று கும்பங்கள் இவை மூன்று கடவுளுக்குரியதாக காணப்பட்டாலும் உடலமைப்புடனும், சுகாதாரத் துடனும் தொடர்புபடுத்தி உடல் சமநிலை பேணுவதற்காக வாதம், பித்தம், சிலேற்பனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இக்கும்பங்கள் முன்னோர்களால் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டுள்ளது. கடவுள் வைத் துள்ள அன்பையும் குணாதிசயங்களையும் அழகாக கையாண்டிருக்கின்றனர். சித்த வைத்தியத்திலே நாடி பிடித்து நோய் அறிவது என்பது வாத, பித்த, சிலேற்பனம் நாடியிலே இரத்தம் ஓடுகின்ற விதத்திலே அவர்கள் அறிந்து அதைச் சமநிலைப்படுத்துவதற்கான மருந்தாக மூலிகைகளைப் பாவித்தார்கள்.

கோயிலுக்குச் செல்லும் போது தூய்மை யாகச் செல்வதும் கால் கழுவி தலையிலே நீர் தெளித்து உள்ளே செல்வதும் கோயில்களில் கதைக்கக் கூடாது , வாய்கட்டி பூசை செய்வது, நிவேதனப் பொருட்களை மஞ்சள் நீர் கொண்டு கழுவி சுத்தம் செய்வது என்பவை நம் பழந் தமிழர் பழக்க வழக்கங்கள். இவற்றை சுகாதாரத்துடன் தொடர்புடையதாக பழக்கப் படுத்தியுள்ளார்கள். வெளியிலிருந்து வரும் போது கிருமிகள் காலில் ஒட்டிக்கொள்ளும். காற்றிலே பரவியிருக்கின்ற நுண்கிருமிகள் உடலில் ஒட்டிக்கொள்ளும் என்பதனால் கால் கழுவி, நீர் தெளித்து உள்ளே செல்வதை பழக்கப்படுத்தியிருந்தார்கள். வாய் கட்டி பூசை செய்வது, நிவேதனப் பொருட்கள் தயாரிக்கும்

போது எச்சில் படாமலும் சுவாசத்தின் மூலம் கிருமிகள் தொற்றா வண்ணமும் இருப்பதற்காகவே. மஞ்சள் நீரில் கழுவுவது அதில் உள்ள கிருமிகளை அகற்றுவதற்காக. இங்கேயும் சுகாதாரம் நிலை நாட்டப்படுகின்றது. அம்மன் சடங்குகளில் மஞ்சள் கூடுதலாகப் பாவிக்கப்படுகின்றது. மஞ்சளின் மகத்துவம் சுகதாரத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது. அவை உடல் சமநிலை பேணவும், நச்சுக் கிருமிகளை அழிக்கவும் மங்களகரமான பொருளாகவும் பாவிக்கப்படுகின்றது. அம்மனுக்கு அடையாளப் பெட்டி கொடுக் கப்படும் போது வெள்ளை சீலையால் மூடிக்கொடுக்கிறார்கள். அதில் கிருமிகள் தொற்றுவது தடுக்கப்படுகின்றது. மஞ்சள் நீர் தெளித்துத்தான் உள்ளே எடுப்பார்கள். பல இடங்களிலும் இருந்து வருகின்ற மக்களிடமி ருந்து நோய்க்கிருமிகள் தொற்றா வண்ணம் கோயில்களிலே மஞ்சள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அம்மனுக்கு விருப்பமான பொருளாக மஞ்சள் பயன்படுத்தப் படுவதை நடைமுறைப்படுத்தினார்கள்.

அன்றாட வாழ்வில் வீட்டிலே தினமும் இறைவழிபாடு சிறப்புப்பெறின் இன்பம் பெருகும். எக்காரியங்களைச் செய்யும் போதும் இறைவனை வழிபட்டுச் செய்தால் சித்தி பெறும் என்பது தமிழர் பண்பாடு. இறை வழிபாட்டிலே இடத்தூய்மை, உடற்தூய்மை, மனத்தூய்மை பேணப்பட வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தி வாழ்ந்தார்கள். காலையில் நித்திரை விட்டெழும்பும் போது மனதில் இறைவனை நினைத்து வழிபட்டு எழுந்து, காலைக் கடன் முடித்து, கடவுளை வணங்கி, உணவு உண்ணும் பழக்கத்தை கையாண்டனர். உண்ணும் உணவுகள் யாவும் இயற்கை தந்த கொடையே ஆகும் அந்த உணவினை வாழையி லையிலே வைத்து இறைவனுக்கு வேதனமாக்கி உணவைச் சுற்றி நீர் தெளித்து இறைவனுக்கு நன்றி கூறி உணவின் ஓர் பகுதியை வேறு உயிர்களுக்கு வழங்கி உண்ணுவது சிறந்தது என்பதை உணர்ந்து நடந்துகொண்டார்கள்.

காலையிலே முற்றம் பெருக்கி, வீடு கூட்டி, மஞ்சள் நீர் தெளித்து, கோலமிட்டு, விளக்கேற்றி வைக்கின்றார்கள். இவை இறைவனோடும் இயற்கையோடும் தொடர்பு பட்டிருக்கின்றது. வெளியிலிருந்தும், வீட்டி லிருந்தும் கிருமிகள் பரவாதிருக்கவும், தொடக்குகள் அற்றுப்போவதற்காகவும் மஞ்சள் நீரை தெளித்தார்கள். இடம் தூய்மையாக இருக்கும் பொழுதுதான் அங்கே இறைவன் குடியிருப்பான். மாலையிலே மஞ்சள் நீர் தெளித்து விளக்கேற்ற வேண்டும். லக்ஷ்மி வரும் நேரம் வீடு கூட்டி வெளியில் தள்ளுதல், பேன்பார்த்தல், உடுப்புத்தோய்த்தல், முழுகுதல் என்பன செய்யக்கூடாது என்பவற்றை கட்டாயப்படுத்தியிருந்தார்கள். இதனால் செல் வம் வராமல் போய்விடும் என்றும் புதன் கிழமை, சனிக்கிழமைகளில் வீட்டிலிருந்து பொருட்கள் கொண்டு செல்லக் கூடாது என்றும் பாய், தலையணை, விளக்குமாறு போன்ற வைகள் இந்த நாட்களில் வாங் கக்கூடாது என்றும், அப்படி வாங்கினால் அசம்பாவிதங்கள் நேரிடும் என பல பழக்கங் களைக் கடைப்பிடித்தார்கள். மாலைவேளையில் உணவு உண்ணக் கூடாது, "இரணிய நேரம்" என்று அழைப்பார்கள். ஆவிகளுக்கு உணவு படைக் கின்ற நேரம் இரணியனைக் கொன்ற நேரம் என்றெல்லாம் கூறுவார்கள். இதனால்



உடலுக்குக் கேடு விளையும் என்ற கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டார்கள். அன்றாடம் மஞ்சள் சேர்த்து சமைக்கிறார்கள். "மஞ்சள் இல்லாக்கறி மாயக் கறி" என்று பண்டைய தமிழர்கள் கூறியிருக்கிறார்கள். நாளாந்தம் அவர்கள் உட்கொள்ளுகின்ற உணவு உடற்தொழிற்பாடுகளுக்கு தேவையான சக்தியை பூர்த்தி செய்வதற்கும் நோய்களி லிருந்து பாதுகாப்புப் பெறவும் மூலிகைகளை யும், பழங்களையும், உட்கொண்டார்கள். உடல் ஆரோக்கியமாக இருப்பதற்காக வியர்வை சிந்தி வேலை செய்தார்கள். உடற்பயிற்சிகளில் ஈடுபட்டார்கள். இவ்வாறாக அன்றாட வாழ்விலும் சுகாதார முறையையொட்டி பழக்க வழக்க ஆசாரங்களை கையாண்டார்கள்.

வீட்டில் நடைபெறும் சடங்கு வைபவங் களை நோக்கும் போது இதில் சுகாதாரம் எவ்வாறு பிணையப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. ஒரு பெண் பிள்ளை பருவம் அடையும் போது பூப்பெய்தல், வயதுக்கு வருதல், சாமத்தியப்படுதல், பத்தியறிதல் என்றெல்லாம் கூறுவார்கள். ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்கின்ற போது கருப்பையானது மொட்டுப் போன்று இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து காலம் வந்ததும் மலர் விரிவதைப் போல் விரிகின்றது. அதனகத்தே சேர்ந்துள்ள சூலக நீரானது முதன் முதலாக வெளிப்படத் தோன்றும். இந்நிகழ்வே பூப்பெய்தல் நிகழ்வாகும். இதன் பின்புதான் சந்தான விருத்தியைச் செய்யக்கூடிய பக்குவ நிலையினையும் உடலுறுதியையும், இயற்கை நிறைவுகளையும் பெற்று ஒரு குடும்பப் பெண்ணாக மாறுகிறாள்.

கருப்பையில் இருந்து வெளிப்படும் கழிவு நீரைத் "தூமை" என்று கூறுவார்கள். இக்கழிவு நீரானது ஒருவித விஷத்தன்மை கொண்டிருக்கும். முதன் முதலாக வெளிப்படும் தூமையில் அதிகளவிலான விஷக்கிருமிகள் உண்டென்பதை "கன்னித் தொடக்கு" என்பார் கள். பூப்பெய்தலின் போது முதன் முதலாக பிள்ளையை தனியே வைத்துவிட்டு அயலவர்களை அழைத்து முற்றத்திலே சீலை சுற்றிப்பிடிக்க அதனுள் பிள்ளையைக் கொண்டுவந்து இருத்தி குரவை சொல்லி நீரை ஊற்றுவார்கள். இதைக் "கண்ட தண்ணீர் ஊற்றுதல்" என்று கூறுவார்கள். வீட்டு வாசலிலே வேப்பிலை கட்டித் தொங்கவிடு வார்கள். இதைப் பார்ப்பவர்கள் வீட்டிலே தொடக்கு உள்ளது என்று அறிந்துகொள் வார்கள். வெளியிலே மலசலம் கழிக்க வரும் போது சீலையால் மூடி வேப்பிலை, இரும்புத்துண்டு ஆகியவற்றை கையிலே கொடுத்து வெளியில் கூட்டிவந்து திரும்பவும் கூட்டிச்செல்வார்கள். இந்த நேரத்திலே பார்வையாகிவிடும் என்று கூறுவார்கள். வெளியிலே ஆவிகள், கிருமித் தொற்றுகள் போன்றவைகள் தொற்றிக்கொள்ளாதிருக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் அவ்வாறு நடந்து கொள்ளாவிட்டால் நோய் ஏற்பட்டு பிள்ளையின் சுகம் பாதிப்புக்குள்ளாகும் என்ப தையும் கருத்திற்கொண்டு அவ்வாறு நடந்து கொண்டார்கள். இந்தப் பூப்பெய்தல் நிகழ்விலே அதிகமாக மஞ்சள் பாவிக்கப்படுகின்றது. மஞ்சளானது கிருமிகளை அழிக்கக்கூடியதும், புலால் மணங்களை அகற்றக்கூடியதும், உடல் நிலையை சீர் செய்து அழகை மெருகூட்டி வளர்ச்சியுறச் செய்கின்றதுமாகும். பூப்பெய்த பிள்ளைக்கு மஞ்சளை அரைத்து உடல் முழுவ தும் பூசுகிறார்கள். முழங்கால், முழங்கைகளில் அதிகம் பூசுவார்கள். சிலவேளைகளில் சில பிள்ளைகளுக்கு உடல் சூட்டினால் முழங்கை, முழங்கால்களில் முள்ளுப் போன்ற பருக்கள் தோன்றுவதுண்டு. இதை "அக்கரை முள்ளு" என்று கூறுவார்கள். மஞ்சள் பூசுவதனால் அக்கரைமுள்ளு தோன்றுவது தடுக்கப்படுகின்றது. இதில் முக்கியமாக பூப்படைந்த பெண் அனுபவமில்லாதவளாக இருப்பதனால் அவளுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் பெண்களே செய்கின்றபடியால் இவர்கள் மூலம் பெண்ணிற்கும், வீட்டிலும், வளவு முழுவதும் கிருமிகள் பரவியிருக்கும். இதைத் தொடக்கு என்று கூறுவார்கள். இதனால்த்தான் முன்னோர்கள் மஞ்சள் கலந்த நீரை ஒருவருக் கொருவர் ஊற்றி விளையாடும் போது

அவர்களில் மட்டுமல்ல வீடு வளவு எல்லாம் சுத்திகரிப்பு அவர்களையறியாமல் நடைபெறு கின்றது. மஞ்சளானது மிகவும் முக்கியமான பொருளாக பயன்படுத்தப்படுகின்றது. முதல் நாள் பிள்ளைக்கு கொடுக்கப்படும் வேப்பெண் ணையும், முட்டையும் உடலுக்கு வளர்ச்சியையும் வலுவையும் கொடுப்பதுடன் எதிர்காலத்தில் கருச்சிதைவை ஏற்படுத்தக் கூடிய கிரந்தி நோயையும் மற்றும் பல விதமான நோய்களை யும் அகற்றி பிள்ளைக்கு பாதுகாப்பைக் கொடுக்கும். அரிசிமாப் பிட்டில் நல்லெண்ணெய் விட்டு உடல் முழுவதும் ஒத்தணம் போடப் படுகின்றது. இடுப்புப் பகுதி மிகவும் முக்கிய மானது என்பதால் கூடுதலாக உருவ வேண்டும். மற்றும் முள்ளந்தண்டு, அடிவயிற்றுப் பகுதி, மார்பு என்பவற்றிற்கு ஒத்தணம் கொடுப்பதனால் உடலிலுள்ள நோவைப் போக்கி உடலை வளர்ப்பதுடன் உள்ளுறுப்புகளுக்கு வலுவையும் கொடுக்கின்றது.

பொதுவாக வேப்பெண்ணெய், முட்டை, கத்தரிப்பிஞ்சு போன்றவற்றை கூடுதலாக உணவில் சேர்க்கக் காரணம் கர்ப்பப்பையில் இருந்து வெளியேறுகின்ற கழிவு நீரை தேங்க விடாது அகற்றக்கூடியது. ஒத்தணம் போடும் போதும் அடிவயிற்றில் உருவும் போதும் நீரானது கூடுதலாக வெளியேற்றப்படுகின்றது. இந்தப் பருவத்தில் பார்க்கப்படுகின்ற பாவனைதான் பெண்ணின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமான வாழ்விற்கு உரம் ஊட்டுவது போன்றதாகும். சிலவேளைகளில் சரியான பாவனை இல்லாத பெண்பிள்ளைகளுக்கு கழிவு நீரானது அகற்றப்படாமல் கர்ப்பப்பையில் தேங்கி நிற்கும் போது சூலவாய்வு ஏற்படு கின்றது. ஒவ்வொரு மாதவிடாய் காலத்திலும் மிகவும் வேதனைக் குள்ளாக்கப்படுகின்றனர். வயிற்று வலியால் அவதிப்படுகின்றனர். இந்த சூலகவாய்வு ஏற்பட்டால் பிள்ளை வளர்ந்து திருமணமாகி குழந்தை பிறக்கும் வரை நீடிக்கும் என்பது கண்டறியப்பட்ட உண்மை. இதனால்தான் இவ்வேளையில் பாவனை மிக முக்கியமாக கடைப்பிடிக்கப்பட்டது. சாப்பாட்டுடன் சேர்க்கப்படுகின்ற எண்ணெய்,



எள்ளு என்பன கருப்பையைச் சுத்தம் செய்வதோடு கண்ணுக்கு பிரகாசத்தையும், உடலுக்கு உறுதியையும் கொடுக்கின்றது. பெண்களுக்கு பிள்ளை பிறக்கும் காலத்தில் அதிக வாதையைக் கொடுக்கும் பகுதி இடுப்பாகும் இதை உணர்ந்தோ பழந்தமிழர் பூப்படையும் காலத்தில் அப்பாகத்திற்கு உரம் ஊட்ட வேண்டும் என்பதற்காக உழுந்தை பிரதானமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆலயங்களில் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவாதிரைப் பூசையிலும் இவ்வுண்மை புலப்படும் .

ஒரு பெண் கர்ப்பவதியாகினால் நாளாந்தம் நெல் குத்துதல், குனிந்து நின்று முற்றம் பெருக்குதல், அம்மியிலரைத்தல், நடத்தல் போன்ற வேலைகளை கூடுதலாகச் செய்வார்கள். இவற்றை சுகாதாரத்தோடு நோக்கும் போது பெண் கர்ப்பவதியானது முதல் நாளாந்தம் வியர்வை சிந்த வேலை செய்வதனால் அவளது இரத்தவோட்டம் ஒழுங்காக நடைபெறும் போது இரத்தம் சுத்த மாகவும், இதயத்துடிப்பு நன்றாகவும் இருக்கும். இதனால் பிரசவம் மிகவும் இலகுவான முறையில் நடந்து விடும் என்று சான்றோர் கூறியதை இன்று உண்மையென நாம் காண் கின்றோம். கிரகண காலங்களிலும், இராக்

காலங்களிலும் வெளியில் நடமாடக்கூடாது என்பதில் மிகவும் கட்டுப்பாடாகவே நடந்து கொண்டார்கள். அவ்வாறு நடந்து கொள்ளா விட்டால் பிள்ளைக்குத் தோஷம் ஏற்படும் என்று அனுபவசாலிகளால் சொல்லப்பட்டதைக் கேட்டு நடந்துகொண்டார்கள். கிரகண காலத்தில் உணவு உண்பதைத் தவிர்த்து வீட்டிற்குள் இருப்பார்கள். கிரகணம் தொடங்கி விடுபடும் வரை எதுவித வேலைகளும் செய்யமாட்டார்கள். இதன் பின்னர் முழுகித்தான் உணவருந்துவார்கள். இதை நோக்கும் போது இங்கே கிரகணம் தொடங்கி விடுபடும் வரை அதிலிருந்து வெளிப்படும் கதிர்கள் ஊடுருவு வதால் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை உணர்ந்தனர். அதனால் பிள்ளையின் வளர்ச்சி யில் பாதிப்பு ஏற்படும். உணவுகளையும், கிண றையும் மூடிப்பாதுகாத்தனர். காரணம் நச்சுக் கதிர்கள் இவைகளில் படாமல் மிகவும் சுகாதார மான முறையில் வாழ்ந்தார்கள்.

பிள்ளை பிறந்தது முதல் தாயும், சேயும் நலமுடன் இருக்க வேண்டுமென்பதற்காக வேது வார்த்தல், மருங்கை போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பிள்ளையை வெளுத்தல் புகையில் பிடிக்கின்றார்கள். ஏனெனில் இப்புகை பிள்ளையை ஜலதோஷத்திலிருந்து காப்பதுடன் பிள்ளைக்கும் தாய்க்கும் இருக் கின்ற புண்பாடுகள் உலர்வதற்கும் உதவும். மேலும் இப்புகை மணம் சுற்றாடலில் சிறிது தூரத்திற்கு மணக்கக்கூடியது. இதனால் பிள்ளை பிறந்திருக்கின்றது என்ற செய்தி சொல்லாமலே அயலவர்கள் அறிந்துகொள் வார்கள். பிள்ளை பிறந்தால் முற்றத்தில் வேப்பங்கட்டை எரிப்பார்கள். அதிலிருந்து வரும் புகையானது பிரசவ வேதனையால் ஏற்படக்கூடிய சுரத்தையும், உடல் கடுப்பு முதலியவற்றையும் வரவிடாது தடுப்பதுடன் பிள்ளைக்கு ஏற்படக்கூடிய மாந்தம், கணம் வயிற்றுப் போக்கு முதலிய நோய்களிலிருந்து பாதுகாத்து நோய்க்கிருமிகளை அழிக்கின்றது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்தே இதை "காவல் கட்டை" என்கின்றனர்.

பிரசவத் தாய்க்கு மஞ்சள் பூசுவது தூமையில் உள்ள நோய்க்கிருமிகளை அழிந்து உடம்பைப் பாதுகாக்கும். புலால் மணம் போக்கும். ஏற்கனவே கூறியது போன்று உடம்பிற்கு பூரிப்பையும், வாத, பித்த, சிலேற்பனங்களையும் சமப்படுத்தி உரோமத் துவாரங்களை சுத்தப்படுத்தி இரத்தத்திலுள்ள நீர்த்தன்மையைப் போக்கி உடல் வலுவையும் வசீகரத்தையும் கொடுக்கும். மட்டக்களப்பு தமிழ் மக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய பங்கு கொள்ளும் பொருட்களில் மஞ்சள் முதன்மையானது.

வேது வார்க்கப்படும் போது பட்டை களைப் போட்டு அவித்த கசாயமானது பயன் படுத்தப்படுகின்றது. இதில் சேர்க்கப்படுகின்ற பட்டைகள் யாவும் துவர்த்தன்மையானதாகவும், கனமானதாகவும், பசைத்தன்மையுடையதாகவும் கிருமிகளை கொல்லக் கூடியதாகவுமிருப்ப தனால் பிரசவத்தால் ஏற்பட்ட புண்பாட்டை மாற்றுகின்றது. வேது நீரானது உடம்பிலுள்ள நோவைப் போக்கக் கூடியது. பிரசவித்த தாய்க்கு உணவிலும் கட்டுப்பாடு பேணப்படு கின்றது. இதனால் கருப்பையிலுள்ள அழுக்கு கள் யாவும் வெளிப்பட்டு கருப்பை ஒழுங்கான முறையில் சுருங்கி அவளை சுவாதத்தில் இருந்து காப்பதுடன் பிள்ளைக்கு கொடுக்கப் படும் பாலும் சுத்திகரிக்கப்படுகின்றது. மஞ்சள், உப்பு கலந்த சுடுநீரால் தாயை குளிப்பாட்டுவ தனால் உடல் நோவையும் , உடற் புண்பாடுக ளையும் சீராக்குகின்றது. இங்கேயும் பிரசவத் தாய்க்கு செய்கின்ற காரியங்கள் யாவும் சுகா தாரம், வைத்தியம் போன்றவற்றோடு தொடர்பு பட்டுள்ளது.

மேலும் ஒருவர் இறந்த பின் பிரேதத்தி லிருந்து கிருமிகள் அதிகமாக வெளியேறி காற்றுடன் கலக்கப்படும். இவற்றை தடுப்பதற்கா கவே மரணச்சடங்கில் மஞ்சள், சாணம், சாம் பிராணி முதலியன உபயோகிக்கப்படுகின்றன. மஞ்சள் நீரால் முழுகி மாற்றுடை உடுத்தல், காவற்கட்டையெரித்தல் என்பவற்றுடன் கிரியைகளும் நடைபெறுகின்றன. வீட்டில் பரந்துள்ள கிருமிகள் காற்று மூலம் உணவில் கலக்கப்படக்கூடாதென்பதற்காகவே எட்டு நாட்களும் வீட்டில் சமையல் வேலை நடை

பெறுவதில்லை. சுடலைக்கு போய்வரும் போதும் வாசலில் இருக்கும் மஞ்சள் நீரை எடுத்து தெளித்து விட்டுத்தான் உள்ளே போவார்கள். இது முன்னோர்களால் நடைமுறையாக வந்த சுகாதார முறையாகும்.

இதேபோன்று கல்யாண வீட்டிலும் மஞ்சள், தேங்காய்ப்பால் என்பவற்றை முக்கிய பொருட்களாக பயன்படுத்துகின்றனர். தேங்காய்ப்பால் ஒரு மங்களகரமான பொருளாக தலையிலே வைத்து நீராட்டப்படுகின்றது. இதனால் இல்லறவாழ்வு வாழப்போகும் மாப்பிள்ளை, பெண் ஆகியோருக்கு உடல் பூரிப்பும், தாதுவிருத்தியும், மனச்சந்தோஷமும், மிகுந்த ஜீரண சக்தியும் ஏற்படுவதுடன் பிரமச்சாரியாக வாழ்ந்த காளையினிடத்தில் ஒடுங்கிக் கிடந்த தேகஒலி, மனப்பூரிப்பு, காமம் ஆகியன அவன் இல்லற வாழ்க்கைக்கு அடியெடுத்து வைக்கும் போது முகச்சவரம் செய்தது போல் வெளிப்படும். கல்யாண வீட்டில் பெட்டி கொண்டு போகும்போது வெள்ளைச் சீலையால் மூடிக்கொண்டு போவார்கள். போகும் வழியில் கிருமிகள்பட்டு உணவு வகைகள், பலகாரங்கள் அசுத்தமடைவது தடுக்கப்படுகின்றது. பன்னீர் தெளித்து வரவேற்கின்றார்கள். பன்னீரானது இளைப்பு, அயர்ச்சி முதலியவைகளைப் போக்கி மனதிற்கு இதத்தையும், உடலுக்கு குளிர்ச்சியையும் உண்டாக்கி வாத, பித்த, சிலேற்பனங்களை சீர்செய்கின்றது. மாப்பிள்ளை, பெண் வெளியிலிருந்து வீட்டிற்கு வரும் போது மஞ்சள் நீரால் கால் கழுவித்தான் வீட்டிற்குள் வருவார்கள். மட்டக்களப்பு தமிழர்களின் கட்டாயமான பழக்கங்களில் இதுவும் ஒன்று. வெளியே செல்லும் போது எவ்வளவோ அசுத்தங்களும், நுண்கிருமிகளும் காலில் ஒட்டிக்கொள்ளும். கால் கழுவி வீட்டினுள் செல்வதால் சுகமனிதனின் அகம் பாதுகாக்கப்படுகிறது. இதேபோல் பால், பழம் கொடுத்தல், கலத்தில் போடுதல், தாம்பூலம் கொடுத்தல் எல்லாம் சுகாதாரத்தோடு தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றது.

தண்ணீர்ச் செம்பு வெள்ளைச்சீலையால் மூடிக்கொடுக்கப்படுகின்றது. மட்டக்களப்பு தமிழர்கள் செம்பிலுள்ள தண்ணீரை இடது கையால் எடுத்து வலது கையில் ஊற்றியே பருகுவார்கள். அவ்விதம் பருகும் போது பருகுபவரின் எச்சில் செம்பிலோ, செம்பிலுள்ள நீரிலோ படாது முகத்தின் முன் பிடித்துப் பருகும் போது அவரின் நாசியினால் வெளியாகும் சுவாசம் செம்பினுள் புகாமல் சீலையால் தடுக்கப்படுகின்றது. இவ்விடத்திலும் சுகாதாரம் பேணப்படுகின்றது. தண்ணீரை அண்ணாந்து பருகுவதனால் நோய் ஏற்படும் என பண்டைய தமிழ் வைத்தியம் கூறுகின்றது. வாழையிலையில் சாப்பிடுவதால் பல நன்மைகள் ஏற்படும் என்பதையும் எச்சில் படுத்தப் படாமல் இருக்கும் என்பதையும் மிகவும் சுகாதாரமான முறையில் பழக்கப்படுத்திக் கொண்டார்கள். இவ்விதமே நோய்த்தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக, எல்லா செயற்பாடுகளிலும் சுகாதாரத்தை தொடர்புபடுத்தி அன்றாட நடவடிக்கைகளிலும், வெவ்வேறு வைபவங்களிலும், சடங்குகளிலும் கடைப்பிடித்திருந்தனர்.

மிக முக்கியமாக மஞ்சள், வேப்பிலை கிருமிகளை அழிக்கக்கூடியது. இதனால்த்தான் நிகழ்வுகளிலும், சந்தர்ப்பங்களிலும் மஞ்சளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். இவ்விதமாக வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் நம்மிலும் பார்க்க திடகாத்திரம் உள்ளவர்களாகவும், சுகதேகிகளாகவும், நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் வாழ்ந்தார்கள்.

இவ்விதமான பழந்தமிழர் பழக்கவழக்கங்கள் பிற மொழிக்கல்வியாலும், பிறநாட்டு நாகரீகத்தாலும் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து கொண்டு வரும் இக்கால கட்டத்தில் நம்மிடையே மறைந்து கொண்டு போகின்றன. இவற்றை நாம் கடைப்பிடிக்காததால்த்தான் இன்று நோய், துன்பங்கள் அதிகரித்து மரணவயதும் குறைந்து கொண்டே போகின்றது. பண்டைத் தமிழர் பழக்க வழக்கங்களை மூடநம்பிக்கை என்று கூறுவதை விட்டு அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற பொன்னான சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து நாமும் நம் சந்ததியினரும் நோயற்ற வாழ்வும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ வேண்டும்.




# மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப்பிரதிகள்

புராணங்கள், சங்ககால இலக்கியங்களில் பேசப்படுகின்ற ஆடலும், பாடலும் கொண்ட கலை வடிவத்திற்கு "கூத்து" என்பது பழந்தமிழ்ப் பெயராகும். இறைவன் உலகை உய்விக்கும் பொருட்டு ஏழுவகைக் கூத்துக்களை ஆடியதால் தில்லைக் கூத்தன் என அழைக்கப்பட்டார். வடமோடி, தென்மோடிக் கூத்துக் கலைகளிலுள்ள தாளவமைதி, அவற்றின் வெளிப்பாடு, கலைச் சிறப்பு, நாடகப் பொருளமைவு மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலுடன் இணைந்து ஒற்றுமை, அன்பு, அடக்கம், பொறுமை, பணிவு, நேர்மை, சகோதரத்துவம், நீதி நெறிமுறைகளாகிய நற்பண்புகளை நிலவச் செய்து, நிம்மதியான வாழ்வை நிலைத்திருக்கச் செய்வதனால் அறிவு, விழுமியங்களைப் புகட்டும் கல்வி அரங்காகவும் கூத்துக்கலை செயற்படுகின்றதென்றால் அது மிகையாகாது என்பதனை விளக்க, மூலமாயமைவது கூத்துப் பிரதிகளாகும். மேற்குறித்த தலைப்பினாலான இக்கட்டுரைப் பார்வையானது, பின்வரும் தளங்களில் நின்றும் விரிய முனைகிறது.

- கூத்துக் கையெழுத்துப் பற்றிய தெளிவான விளக்கம்.
- கூத்துக் கையெழுத்துப் பிரதிகளைக் கையாளும் விதம்.
- வாய்மொழி, எழுத்துரு மரபில் தாளக் கட்டுக்கள்.
- இருவகைத்தான கூத்துப் பாணிகளும், கூத்துப் பிரதிகளும்.

- அச்சுவாகனத்தின் செல்வாக்கும், கூத்துப் பிரதிகளும்.
- சமூகச் சூழலின் போக்கும், கூத்துப் பிரதிகளும்.
- கூத்துப் பிரதிகளும், கதையோட்டச் சீராக்கமும்.

மட்டக்களப்பில் விடிய விடிய ஆடப்படும் வடமோடி, தென்மோடி கூத்துப் பிரதிகளாயினும் சரி, பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிக்கப்பட்டு அளிக்கை செய்யப்படும் குறித்த மணித்தியாலக் கூத்துப் பிரதிகளாயினும் சரி, பாடசாலைகளுக்கிடையிலே நடாத் தப்படும் தமிழ்த் தினப் போட்டிகளுக்கான வடமோடி, தென்மோடி கூத்துப் பிரதிகளாயினும் சரி அவ்வவ் மோடிகளுக்குட்பட்ட ஒழுங்க மைக்கப்பட்ட மரபு முறைகளுக்குட்பட்டவை களாகவே கூத்துப் பிரதிகள் காணப்படுகின்றன. வடமோடிக் கையெழுத்துப் பிரதிகளின் அமைப் பானது காப்பு வெண்பா, இறைதுதி, சபை விருத்தம், விருத்தம், பாட்டு (தரு), கொச்சகம், முத்திரைப் பல்லவி, தாழிசை, கலிப்பா, கந்தார்த்தம், அகவல், ஆனந்தக் களிப்பு, கும்மி, மங்களம் போன்ற அம்சங்கள் அக்கூத்துக்கள் ஆக்கப்பட்ட கால அளவைக் கொண்டு இவற்றுள் சில குறைந்தும் காணப்படுகின்றது. தென்மோடிக் கூத்துக் கையெழுத்துப் பிரதிகளில் காப்பு விருத்தம், சபைக்கட்டு, சபைவிருத்தம், விருத்தம், தரு, வண்ணத்தரு, கொச்சகத்தரு, தர்க்கத்தரு, உலாத்தரு, முத்திரைப் பல்லவித்தரு, கவி, கலிப்பா, வெண்பா, ஆசிரியம், தாழிசை, இன்னிசை, மங்களம் என்னும் அம்சங்கள் பரவிக் காணப் படுகின்றன. வடமோடிக் கூத்து கையெழுத்துப் பிரதியையும், தென்மோடிக் கூத்து கையெ ழுத்துப் பிரதியையும் ஒப்புநோக்கும் போது வடமோடிக் கூத்துக் கையெழுத்துப் பிரதியில் செறிந்து காணப்படும் முத்திரைப் பல்லவித்தரு, தென்மோடிக் கூத்துக் கையெழுத்துப் பிரதிகளில் விரவிக் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். பாரத இராமாயண (இதிகாச) கூத்துக் கையெழுத்துப் பிரதிகளா யினும்சரி, வரலாற்றுக் கூத்துக் கையெழுத்துப் பிரதிகளாயினும் சரி, சமகால சமூக நிகழ்வு களை ஒட்டியதான விடயங்களைப் பாடுபொருள் கொண்ட கூத்துக்களாயினும் சரி அந்தந்த கூத்துகளுக்குரிய பிரதிகள் கொண்டிருக்க வேண்டிய அம்சங்களை உள்ளடக்கிய வைகளாகவே காணப்படுகின்றன.

கூத்துப் பிரதிகளைக் கையாளும் போது வடமோடியிலுள்ள கூத்துப் பிரதியைத் தென்மோடிக் கூத்துப் பிரதியாக மாற்றும் போதும் உதாரணமாக அருச்சுணன் தவநிலை யைக் குறிப்பிடலாம். அதேபோன்று தென் மோடிக் கூத்துப் பிரதியை வடமோடிக் கூத்துப் பிரதியாக மாற்றும் போதும் உதாரணமாக புருவுருவச் சக்கரவர்த்தியைக் குறிப்பிடலாம். கூத்துப் பிரதிகள் கொண்டிருக்க வேண்டிய அம்சங்களில் விழுப்புக்கேற்ற மாற்றங்கள் நடைபெறுவது ஓர் ஆரோக்கிய செயலாகக் காணப்படவில்லை. கூத்தின் மூலப் பிரதியை எழுதியவர் பிரதியின் முடிவில் தன் பெயரை யும், முடித்த திகதியையும் குறிப்பிட்டிருப்பார். அப்பிரதியை வாங்கி எழுதும் வேறு ஊரவர் ஒருவர் தன் பெயரையும், தான் எழுதி முடித்த திகதியையும் குறிப்பிடுவது, உண்மையாக அக்கூத்தின் மூலப் பிரதியானது எவரால்? எக்காலத்தில் ஆக்கப்பட்டது என்பது குறித்தான இனங்காணல் ஆய்வுத் தேடலில் காணமுடியாத ஒரு துர்பாக்கிய நிலையாகவே காணப் படுகின்றது. விடிய விடிய ஆடப்படும் ஒரு முழுமையான கூத்துப் பிரதியைப் பார்த்து தங்களின் காலவளவுத் தேவைகளுக்கேற்ப சுருக்கி எழுதி அக்கூத்துப் பிரதியைக் கொண்டு கூத்தினைப் பழக்கி ஆற்றுகைப் படுத்தும் போது அதனைப் பார்க்கும் இளந்தலை முறையினர், அதுதான் அக்கூத்தின் முழுமை யான வரலாறு என்ற தவறான முடிவிற்கு வருவதற்கு வழிவகுக்கப்பட்டுவிடுவதையும் காணலாம்.

ஒவ்வோரு கூத்துக் கையெழுத்துப் பிரதியையும் எடுத்துப் பார்த்தால் அதில் கூத்தர்களின் (பாத்திரங்களின்) தாளக்கட்டு இதுதான் என்று எழுத்துருவில் வரையறை செய்யப்பட்டுக்காணப்படவில்லை. அக்கூத்தி னைப் பழக்கும் அண்ணாவியாரே அத்தாளக் கட்டினை வாய் மூலம்வைப்பதும், அது தொடர்ந்து அடுத்தடுத்த சந்ததியினருக்குச்

செவி வழியாக செவி மடுக்கப்பட்டு வாய் வழியாகக் கடத்தப்படுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. எழுத வாசிக்க முடியாத அந்தக் கால ஒருசில அண்ணாவிமார்கள், ஆனால் அவர்கள் ஆடும், பாடும், பழக்கும் மிக்க திறனுடையவர்களானதினால், தந்தை அல்லது மற்ற அண்ணாவிமார்கள் ஒரு கூத்தினை வழிநடத்திச்செல்வதினை மிக நுணுக்கமாக அவதானித்து அதன் படியே மத்தளம் அடிக்கும் வித்தகத்துடன் இம்மியும் பிழை இல்லாமல் வாய்மொழி மூலம் அக்கூத்தினை வழிநடத்திச் சென்றுள்ளதனை அறிய முடிகின்றது. இதே இயல்பு சில கூத்தர்களிடமும் காணப்படுகின்றது. இதில் நான் நேரில் பார்த்து உரையாடி யவற்றில் ஒன்றினைக் குறிப்பிடுகின்றேன். முனைக்காட்டில் "பவளக்கொடி" வடமோடிக் கூத்தில் "அல்லி" எனும் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் செவியேறலினூடாக வாய்மொழி மூலம் கூத்தின் பாடல்களை எவ்வித தங்குதடையுமின்றி அளிக்கை செய்தார். அவரே "நச்சுப்பொய்கை" கூத்தில் திரௌபதைக்கு ஆடி அளிக்கை செய்தார். ஆனால் அவ்விரு கூத்துக்களையும் முழுமையாக ஒவ்வோரு பாத்திரத்தினதும் தாளக்கட்டிலிருந்து அக்கூத்துப் பிரதிகளின் அம்சங்களனைத்தையும் ஒழுங்கு முறையாக வாய்மொழி மூலம் நடாத்திச் செல்லும் ஆளுமை தனக்குண்டு என்பதனை என் முன்னிலையிலும் செயல் வடிவம் கொடுத்துக்காட்டினார்.

ஒரு பாத்திரத்தின் தன்மைக்கேற்ப தாளக்கட்டுக்கள் மாற்றி மாற்றி அமைக்கப் படுவதும், ஒரு பாத்திரத்தின் அறிமுகப்பாடலின் மெட்டினை கருத்திற்கொண்டும் தாளக்கட்டுக்கள் நிர்ணயிக்கப்படுவதும், தாளக்கட்டுக்கள் எழுத்துரு பெறாமைக்குரிய ஒரு காரணமாகும். அதனாலேயே வாய்மொழி மூலம் எடுத்தாளப் படுகின்றது. இவைகளுக்கு எழுத்துரு கொடுத்தால் தேடல் என்பது இல்லாமல்ப் போய்விடும். அதாவது அந்தந்த பாத்திரங்களுக்குரிய பொருத்தமான தாளக் கட்டினை பழக்கும் அண்ணாவியார் பெறுவதற்கு தேடலில் ஈடுபட மாட்டார். அதனால் அதற்குப் பொருத்தமான தாளக்கட்டு காணப்பட்டாலும் காலப்போக்கில் அவை வழக்கொழிந்து விடுவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

மட்டக்களப்பு கூத்து கையெழுத்துப் பிரதிகளில் பாடுபொருளாக மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசக் கதைகளே பெரும்பாலும் வடமோடிக் கூத்துப் பிரதிகளாக வும், புராண இதிகாசக் கதைகள் தவிர்ந்த கற்பனைக் கதைகளாகவும், வரலாற்றுக் கதைகளாகவுமே தென்மோடிக் கூத்துக் கையெழுத்துப் பிரதிகளில் காணக் கூடியதாக உள்ளன. ஆனால் கடந்த சில சகாப்தங் களிலிருந்து கூத்து மீளுருவாக்கம், நவீன மயமாக்கல் உருவாக்கத்தின் போதி லிருந்து வரலாற்றுக் கதைகளையும் சமகால சம்பவங்களையும் பாடுபொருளாகக் கொண்ட கூத்துப் பிரதிகளும் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆக்கப்பட்டுள்ளது ஆரோக்கியமானதாகவே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு வடமோடிக் கூத்துப் பிரதிகள் அரசிளங்குமாரி, அயோத்திவர்மன், அபிமன்னன் சண்டை, அழகேந்திரன், அர்ச்சுனன் தவநிலை, அல்லி நாடகம், அசுவமேத யாகம், அரிச்சந்திரன், அல்லியின் எதிர்காலம், ஆடக சௌந்தரி, ஆஞ்சநேயர், ஆரவல்லி, இந்திரவல்லி, ஈடும்பன் போர், இராம நாடகம், இராவணேசன், இளவரசி உலகநாச்சி, உருப்பிணி கல்யாணம், உருத்திரசேனன், உலகநாச்சி, ஏலகன்னி சபதம், எல்லாளன் போர், என்றிக்கன் விறதர், எட்டாம் போர், ஏழு கன்னியர்கள், ஏணி ஏற்றம் நாடகம், கடோக்கயன் போர், கஞ்சன் போர், கற்பலங்காரி, கண்ணன் சண்டை, கங்கையம்மன், கண்ணகை யம்மன், கண்டி நாடகம், கனகசுந்தரன், கமலாவதி, கலிங்கப்போர், காந்தரூபன் காந்தரூபி, காமதேனு பருவதம், காத்தவராயன், கிருஷ்ணன் சண்டை, கிருஷ்ணன் தூது, கீசகன் வதை, குறவஞ்சி, கும்பகர்ணண் வதை, குருஷேத்திரம், குருதட்சணை, குசலவன், குருக்கேத்திரன் போர், கோலியாத்தை வென்ற குமரன், சத்தியசீலன், சராசந்தன், சந்தனோ மகாராசன், சந்திரகாசன், சதகண்ட இராவணண், சத்தியபாமா, சக்தியின் சபதம், சயிந்தவன், சத்தியவான் சாவித்திரி, சிலம்புச்செல்வி, சிம்மாசனப்போர், சித்திரபுத்திரர், சித்திரசேனன் சண்டை, சிசுபாலன் சண்டை, சிவராத்திரி, சிறுத்தொண்டர், சீதையின் துயரம், சுந்தரி

திருக்கல்லாணம், சுபத்திரை கல்யாணம், சூரசம்காரம், செங்கையம்மன், ஞானசௌந்தரி, ஞானபுத்திரன், தருமர் வைகுந்தம், தருமர் அஸ்வமேதயாகம், தக்கன் யாகம், தசக்கிறிவன் தவநிலை, தருமபுத்திரர், தமயந்தி, தமிழறியும் பெருமான், திருத்தொண்டர், துரோணர் யுத்தம், துரோணர் வில்வித்தை, திரௌபதை வில்வளைவு, தெய்வ பக்தி, நரகாசுரன் வதை, நல்லதங்காள், நாரதர் கலகம், நளச்சக்கரவர்த்தி, நாகலிங்கர் மகிமை, 13ம் 14ம் போர், 15ம் 16ம் போர், 17ம் 18ம் போர், பரிமளகாசன், பகதத்தன் போர், பரசுராமன், பப்பரவாகன், பவளக்கொடி, பகாசூரன் வதை, பவளேந்திரி, பத்மாவதி, பகையை வெல்லல், பாலன் பிறந்தநாள், பார்த்தீபன் கனவு, பாஞ்சாலி சபதம், பிரத்தியும்மன், பீஷ்மர் சண்டை, புவனேந்திரன், புரூருவச் சக்கரவர்த்தி, பூதத் தம்பி, மன்மத சம்சாரம், மல்லன் சண்டை, மணிமாறன் சண்டை, மழைப்பழம், மனிசன் இருக்கான் மனுசி எங்கே?, மார்க்கண்டேயர், மாரியம்மன் தவநிலை, மாடுபிடிச் சண்டை, மின்னொளி, வள்ளிதினப்புனம், வனராசன் சண்டை, வனவாசம், வள்ளியம்மன், வாணன் போர், வாளவீமன், விக்கிரமாதித்தன், விராட பர்வம், வீரகுமாரன், வைகுந்தம், லவகுசா, ஜெயசீலன் தீர்த்த யாத்திரை, ஜெனோவா, ஸ்ரீ கணேசர் கல்யாணம் ஆகிய 132 கூத்துக்கள்.

மட்டக்களப்பு தென்மோடிக் கூத்துப் பிரதிகள் அருச்சுணன்தவநிலை, அனுவுருத்திரன், அலங்காரரூபன், அங்கசுந்தரி, அல்லிநாடகம், அதிரூபசோழேந்திரன், ஆதிநாடகம், இரணியசம்காரம், இந்திரகுமாரன், உருத்திரசேனன், கந்தன் கருணை, கமலாவதி, கண்டிராசன், காஞ்சி நாடகம், சத்தியவான் சாவித்திரி, சுவேதனன் சண்டை, சூரசம்காரம், சித்திரசேனன், செட்டி வர்த்தகன், தக்கன் யாகம், தமிழறியும் பெருமான், தளுக்குச் சுந்தரி, திமிலைதீவு திருமணம், திரௌபதை திருமணம், நளச்சக்கரவர்த்தி, நந்தனார், நந்தியின் மகிமை, நொண்டி நாடகம், பரிமளகாசன், பவளவல்லி, பிரஸ்தூமன் நாடகம், புரூருவச் சக்கரவர்த்தி, புவனேந்திரன், பூலோக ரம்பை, பெருவேளாளன், மன்மத தகனம், மதுரவாசன், மதனரூபன், மதனதூரந்திரன், மயில் இராவணன், மங்கியூர் மகிமை, மார்க்கண்டேயர், மாமாங்கேஸ்வரர், மூசிகாசூரன் வதை, வயந்தபூவன், வாளவீமன், நளமகாராஜன், நளாயினி, நரேந்திரபூவன், நந்தனார் நாகம் ஆகிய 50 கூத்துக்கள்.


1962 ஐப்பசியில் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்களால் முதன்முதலாக "அலங்காரரூபன்" நாடகம் தென்மோடிக் கூத்தும், 1969ம் ஆண்டு வித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்களால் "அனுவுருத்திரன் நாடகம்" தென்மோடிக் கூத்தும், அதே ஆண்டே வித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்களால் முதன்முதலாக "இராமர் நாடகம்" வடமோடிக் கூத்தும், 2013ம் ஆண்டு பங்குனி மாதம் இளைப்பாறிய அதிபர் திரு.த.க.கனகநாயகம் அவர்களால் "இளவரசி உலகநாச்சி" வடமோடிக் கூத்தும் அச்சுவாகனமேறி அச்சுருப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சபையினால் கூத்துப் பெருவிழா – 2015இன் போது அபிமன்னன்வதம், நல்லதங்காள் சரித்திரம், கடோக்கசன் போர், கர்ணன் வதை, ஸ்ரீ முருகன் திருக்கல்யாணம், சுபத்திரை கல்யாணம் எனும் ஒவ்வோரு மணித்தியால ஆறு வடமோடிக் கூத்துக்கள் அடங்கிய நூலொன்றும் வெளியிடப்பட்டது. இவ்வாறு கூத்துக்களும் மூலப் பிரதிகளின் உட்பிரிவுகளாகவே காணப்படுகின்றன.

கூத்துப் பிரதிகள் அச்சுருவுக்குக் கொண்டுவரப்படாமைக்கு முக்கியமான காரணங்களில் தலையாயது பொருளாதாரப் பிரச்சனையாகும். சேர்ந்தே இருப்பது 'புலமையும் வறுமையும்' என்ற ஆன்றோர் கூற்றுக்கமைய கூத்துப் பிரதிகளை உருவாக்கிய புலவர்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்பவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றார்கள். அதனால் அவர்களால் அவற்றை நூலுருவில் வெளிக்கொண்டுவர முடியவில்லை.

அன்றியும் புத்தக வடிவில் கொண்டு வருவதற்கான போதிய தெளிவான அனுபவம், அறிவு இப்புலவர்களிடம் காணப்படாமல் இருப்பதும் மற்றுமொரு காரணமாக

மட்டக்களப்பு கூத்து கையெழுத்துப் பிரதிகளில் பாடுபொருளாக மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசக்கதைகளே பெரும்பாலும் வடமோடிக் கூத்துப் பிரதிகளாகவும், புராண இதிகாசக்கதைகள் தவிர்ந்த கற்பனைக் கதைகளாகவும், வரலாற்றுக் கதைகளாகவுமே தென்மோடிக்கூத்துக் கையெழுத்துப் பிரதிகளில் காணக்கூடியதாக உள்ளன



அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. இக் கூத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளிக்கொணர ஒருசிலருக்கு ஆர்வம் ஏற்படினும் அதற்கான அனுமதியினை உரிமையாளர் அல்லது அவர் குடும்பத்தினரது அனுமதி பெறவேண்டி இருப்பதனாலும் அது சாத்தியமற்றதாக இருக்கின்றது. இக்கூத்துப் பிரதிகள் எப்பொழுதும் எல்லோருக்கும் தேவைப்படுவதில்லை. கூத்தினை ஆடவிரும்பும் ஊரவர் அண்ணாவியாரை நாடி விருப்பத்தைக் கூற, அவ்வண்ணாவியார் தன்னிடமுள்ள அல்லது கூத்துப் பிரதியை வைத்திருக்கும் மற்றவரிடமிருந்து பெற்று அவற்றைக் கையெழுத்துப் பிரதியாக்கி பயன்படுத்துகின்றார். மற்றும் கூத்துக்கள் இரவு வேளைகளிலேயே நடத்தப்பட்டு வந்ததனால், கொப்பி அண்ணாவியார் உண்மைப் பிரதிகளைப் பார்த்துப் பார்த்து இசைவாக்கம் அடைந்ததனால் அச்சுருப்பெற்ற சிறிய எழுத்துக்களைப் பார்த்து கூத்தினை கொண்டு செல்வதற்குச் சிரமமாக இருப்பதனையும் அச்சுருப்பெறாமைக்கான காரணமாகக் கூறலாம். இத்தகைய கூத்துப் பிரதிகளை நூலுருப்படுத்த வேண்டுமென்ற அக்கறையின்மையும் காரணமாகின்றது. மேலும் இன்னோரன்ன வேறு சில காரணங்களும் அச்சுருப்பெறாமைக்கான காரணங்களாக அமைகின்றன.

அச்சுருவேற்றுவதற்கு மேற்போந்த தடைகளைப் புத்தி ஜீவிகள் சமூகம் அலசி ஆராய்ந்து பிரச்சனைகளைத் தீர்ப்பதனாலும், அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், செல்வந்தர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள் இத்தகைய பிரதிகளை தேடிப் பெற்று நூலுருவாக்க செயற்பாடுகளுக்கு உட்படுத்துங்கால் பிரதிகள் தொடர்பான சர்ச்சைகளுக்கு தீர்வு காண முடியுமென்பதோடு, இத்தகைய அருங்கலைகளைக் கட்டிக்காத்து எதிர்கால சந்ததியினருக்கு ஐயம் திரிவற்ற வகையில் கையளிக்க முடியுமான செயற்பாடானது ஆக்கபூர்வமான அரங்கியல் செயற்பாட்டுக்கான உயிர்ப்பு நிலையாகும்.

ஓர் இடத்தில் ஆடும் கூத்துப் பிரதிக்கும் அதே கூத்து வேறோர் ஊரில் அவர்களால் பழக்கப்பட்டு ஆடும் போது பயன்படுத்தப்படும் கூத்துப் பிரதிக்கும் இடையே வித்தியாசங்கள் காணப்படுகின்றன. துவாரகாபுரி வேந்தன் கிருஷ்ணரின் மகனே 'அனுவுருத்திரன்' என்றும் அவனே 'பிரஸ்தூமனன்' என்றும் அழைக்கப் படுகின்றான். பிரஸ்தூமனைத் தலைவனாகக் கொண்டு ஆக்கப்பட்ட தென்மோடிக் கூத்துப் பிரதி, அனுவுருத்திரன் நாடக தென்மோடிக் கூத்துப் பிரதியிலிருந்தும் கதையமைப்பு (பாடுபொருள்) என்பவற்றால் அனுவுருவ நாடகத்திலும் வேறுபட்டதாகக் காணப்படுவது கவனிக்கத்தக்கதாகின்றது. வள்ளியம்மன் நாடகம், வள்ளி திருமணம், வள்ளி தினைப்புனம் ஆகிய வடமோடிக் கூத்துப் பிரதிகள் ஒத்த கதையமைப்பாக இருந்த போதிலும், கூத்துப் பிரதியாக்க அமைப்பு முறையில் வேறுபாடு காணப்படுகின்றது. அதேபோல் ஒரே பாடு பொருளைக் கொண்ட உலகநாச்சி வடமோடிக் கூத்துக்களின் இரு பிரதிகளுக்கிடையேயும்

வேறுபாடு காணப்படுகின்றது. மற்றும் அச்சுருப் பெற்ற இராம நாடகப் புத்தகத்திற்கும் இராம நாடகக் கையெழுத்துப் பிரதிக்கிடையிலும் சில பாடல் அமைப்பு முறைகளிலும் வேறுபாடு காணப்படுகின்றது. அரிச்சந்திர மயான காண்டம், நல்லதங்காள் போன்ற வடமோடிக் கூத்துப் பிரதிகளிலும் இவ்விரண்டு பிரதிகள் காணப்படுவதோடு, அவைகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதைப்போன்று மேற்கூறிய அனைத்து கையெழுத்துப் பிரதிகளையும் நுணுக்கமாக ஆய்வு செய்யும் பொழுது இன்னும் சில ஒத்த கூத்துக் கையெழுத்துப் பிரதிகளுக்கிடையேயுள்ள வித்தியாசங்களை அடையாளம் காணமுடியும்.

நல்லதங்காள் கூத்தின் ஒரு பிரதியை பருத்திச்சேனையைச் சேர்ந்த ஒரு புலவரும், அதே போன்று நல்லதங்காள் வடமோடிப் பிரதியை வேறு ஓர் ஊரைச் சேர்ந்த புலவரும் எழுதியுள்ளனர். இவ்வாறு வேறு வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் ஒரே கூத்தின் பிரதிகளை எழுதும் போது அவ்வப்பிரதேசங்களின் மண்வாசனை, மொழிவழக்கு உள்ளிட்ட பண்பாட்டு அம்சக் கூறுகளின் தாக்கம் தலைதூக்கி நிற்கின்றது. அதாவது அந்தந்தப் பிரதேச மக்களின் மண்வாசைன மொழி வழக்கில் கூறும் போதுதான் பாத்திரத்தினூடாகக் கருத்தின் உயிரோட்டம் புலப்படுத்தப்படும். வகைமாதிரி பாத்திரங்களின் தாக்கமும் வித்தியாசங்களுக்கு வித்திடப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். வடமோடியிலுள்ள உதாரணமாக அருச்சுணன் தவநிலைப் பிரதியை தென்மோடிக் கூத்துப் பிரதியாக மாற்றும் பொழுதும், தென்மோடிக் கையெழுத்துப் பிரதியான புருருவச்சக்கரவாத்தி கூத்தினை வடமோடிக் கையெழுத்துப் பிரதி யாக மாற்றும் பொழுதும் பாடல்களில் வித்தியா சங்கள் காணப்படுகின்றது. அதாவது ஒரு மோடியிலிருந்து இன்னொரு மோடிக்கு கூத்துப் பிரதிகளை மாற்றும் போதும் மேற்கூறப்பட்ட பிரதேச வேறுபாடுகள் கூத்துக் கையெழுத்துப் பிரதியாக்கத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி யிருக்கின்றது.

பல்கலைக்கழக நுண்கலைத் துறை, பண்பாட்டு அலுவலகள் திணைக்களம், பாரம் பரிய கலைகள் சார்ந்த அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், மட்டக்களப்பு மாவட்ட அண்ணா விமார் சங்கங்கள் ஒருங்கிணைந்து கூத்துப் பிரதிகளை எழுதும் தற்போதுள்ள புலவர்க ளையும் சேர்த்துக் கலந்துரையாடி ஒரு காத்திர மான முடிவினை எடுத்து, இப்பிரதிகளை மறுபரிசீலணை செய்வதற்கான சரியான நிபுணத்துவம் வாய்ந்த ஒரு குழுவினை உருவாக்கி பரிசீலணை செய்து பயிற்சிப்பட்டறை களுக்கூடாக உத்தியோகபூர்வ அனுமதி பெற்ற பின்னர் அப்பிரதிகள் ஆற்றுகைக்கு உட்படுத்தப் படுமாயின் இவ்வாறான வித்தியாசங்களைக் களைந்துகொள்ள முடியும் என்பதோடு, பன்னெடுங்காலம் தொட்டு தமிழர்களின் வாழ் வியலோடு பயில்நிலையிலுள்ள இத்தகு கூத்துக்கலையினைக் கட்டுக்கோப்பான, ஆரோக்கியமானவொரு ஆற்றுகைக் கலையாக ஆவணப்படுத்தி அளிக்கை செயற்பாடுகளுக்கு ஆவன புரிதல் காலத்தின் தேவை கருதிய காத்திரமான செயலென்பது கவனத்திற்குரிய தாகின்றது.

உசாத்துணை


1. வித்துவான்,பண்டிதர் கந்தையா வி.சீ அனுவுருத்திர நாடகம், மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம் - 1969.
2. கலாநிதி வித்தியானந்தன் சு. அலங்காரரூப நாடகம், இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு-1962.
3. வித்துவான், பண்டிதர் கந்தையா வி.சீ. இராம நாடகம், மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம் - 1969.
4. கலாநிதி மௌனகுரு சி. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்.

01. கூத்துக் கலைஞன், பட்டதாரி வினோ.வ.
02. பட்டதாரி சுரேந்திரகுமார்.சி.
03. கலாசார உத்தியோகத்தர் சிவானந்தராசா.மூ.
04. கலைக்கோட்டன் இருதயநாதன்.அ.
05. அண்ணாவியார் கதிராமநாதன்.ப.
06. அண்ணாவியார் மயில்வாகனம்.க.


# பூதசக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர் சரித்திரங்கள்

கலாநிதி சி.ஜெயசங்கர்

நவீன அறிவுப் புலத்தில் ஈழத் தமிழரது கூத்தரங்கு பற்றிய எழுத்துக்களும் செயற்பாடுகளும் அறுபது வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டது. ஆயினும் இதில் கவனத்தை அதிகம் பெற்றுக்கொள்ள வேண்டியதொரு பகுதியாக கூத்தரங்கின் காண்பியங்கள் விளங்குகின்றன.

ஈழத்தமிழரது கூத்தரங்கின் களரியும் தோரணமும் ஆகிய கட்டடக்கலை தனிச் சிறப்புமிக்கது. இது கூத்தை அரங்கேற்றும் சமூகங்களது பங்கேற்பிலும் படைப்பாற்றலிலும் முகிழ்ந்து நிற்பது. தோரணத்துடன் கூடிய களரியில் அரங்கேற்றப்படும் கூத்துக்களின் காண்பியங்கள் பற்றிய கதைகள் நிறையவே கூத்துச் சமூகங்களிடம் புழக்கத்தில் இருந்து வருகின்றன. இது தனித்த ஆய்விற்குரியது. கூத்தரங்கின் காண்பியச் சிறப்புக்களை அறிவதற்கும் படைப்பாற்றல்களையும் கண்டுபிடிப்புத்திறன்களையும் தெரிந்து கொள்வதற்கும் மேற்படி ஆய்வுகள் வழிவகுப்பதாக இருக்கும். ஊர் மக்களது கண்டுபிடிப்புத் திறன்களுக்குக் களமாக கூத்தரங்குகள் எந்தவகையில் துணை புரிந்திருக்கின்றது என்பதை மேற்படி விடயங்கள் அறியத்தருவனவாக இருக்கின்றன. சமுதாய பல்கலைக்கழகமாக கூத்தரங்கை அடையாளப்படுத்தி முன்னெடுக்கப்படும் தற்காலத்தைய கூத்து மீளுவாக்கச் செயற்பாட்டிற்கு மேலும் வலுச்சேர்க்கும் அம்சமாக இது காணப்படுகின்றது.

இந்தவகையில் கூத்தரங்கின் உடை, ஒப்பனை, அணிகலன்கள், கைப்பொருட்கள் (ஆயுதங்கள்) என்பவை பற்றிய கவனிப்பு இங்கு



அவசியமாகின்றது. கூத்தர்களுக்கான ஒப்பனையை மேற்கொள்வதில் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களது பங்கு பற்றல் முக்கியமானது. எனினும் ஒப்பனையாளர் என்னும் கலைஞரது இருப்பும் வரலாறும் கூத்தரங்கில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. கூத்தாற்றுகைகளுக்கான உடைகள், அணி கலன்கள், ஆயுதங்கள் என்பவற்றை வாடகைக்கு வழங்குபவராக இருப்பதுடன் பிரதான ஒப்பனையாளராகவும் இயங்கி வருபவராக இவர் காணப்படுகின்றார். அண்ணாவிமார் போல கூத்தரங்கில் தொழில்முறைக் கலைஞ ராக விளங்குபவர் இந்த ஒப்பனைக் கலைஞர். கூத்தரங்கின் ஒப்பனைக் கலையை மதிப்பீடு செய்யும் அல்லது விமர்சனம் செய்யும் நவீன அறிவுப்புல எழுத்துக்கள் அதனுள் உள்நு ளைந்து அதன் இயக்கத்தையும் எதிர்கொள்ளும் சவால்களையும் ஆய்வுக்குட்படுத்தியதாக காணப்படவில்லை.

கூத்துக் கலையின் வரலாற்றை எழுதுவதில் மேற்படி ஒப்பனைக் கலைஞரது பதிவுகள் எழுத்தாதாரங்களாக இருப்பவை. வாடகைக்கு வழங்கப்படுபவை கூத்தரங்கேறும் காலம், இடம், வாடகைப் பெறுமதி என அவர் களது பதிவுகள் கூறும் வரலாறுகள் ஆய்வுக்குட் படுத்தப்பட்டு வருகின்றது.

கூத்தரங்கின் ஒப்பனைக் கலைஞர்கள் கூறும் கதைகள் சுவாரசியமானவை. கூத்தரங் கில் வெளிப்படும் மனித உளவியல்களை துலாம்பரப்படுத்தும் கதைகள் அவை. இதுவும் சமூகவியல் ஆய்வுக்குரிய ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

ஒப்பனைக் கலையில் வல்லவர்களான இவர்கள் கூத்துக் கலைஞர்களை, அவர்களது உறவினர்களை, நண்பர்களை மற்றும் ஆர்வலர் களைச் சமாளிக்கும் விதம் அலாதியானது. இவை எல்லாம் மனிதருக்குள் அடங்கிக் கிடக்கும் ஆசைகளை, அவாக்களை ஆற்றுப் படுத்தும் களங்களாக வெகு இயல்பாக இயங்கி வரும் பாங்கு கற்றலுக்குரியது.

தொழில்முறை ரீதியாக மேற்படி கலைஞர்களது இருப்பு சவால்கள் நிறைந்தது. ஆயினும் கலை மீதான ஆர்வமும் பாரம்பரியத் தொடர்ச்சி பேணும் மனப்பாங்கும் பொருளாதார வருவாயும் இக்கலைத்துறையின் தொடர்ச்சி யான இருப்பிற்குக் காரணங்களாகக் கூற முடியும்.

பிரதான தொழிலாக இல்லாவிட்டாலும் பகுதித் தொழிலாக ஈட்டப்படும் வருமானம் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். காரணம் ஒன்று மட்டுமே. ஆர்வத்திற்கும் அப்பால் இக்கலைத் துறையைத் தக்கவைப்பதற்குக் காரணமாக இருப்பதையும் காணமுடிகின்றது.

போர், இடம்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள் என அழிவுகளால் அலைக் கழிக்கப்பட்ட காலங்களில் எல்லாம் அழிவுகளை யும் நட்டங்களையும் தாராளமாகச் சந்தித்துக் கொண்ட இக்கலை மரபு மேற்படி கலைஞரதும் அவர்களது குடும்பங்களதும் முழுமுயற்சியி லுமே மீளுயிர்ப்புகளைப் பெற்றிருக்கின்றது என்பது சமகால வரலாறு.

இழப்புக்களுக்காக, உடைமை இழப்புக் களுக்காக வழங்கப்படும் நட்ட ஈடுகளுக்குள் ஒப்பனைக் கலைஞர்களது கலைத்தொழில் உடைமைகள் அடக்கப்படாதவை. பாரம்பரியக் கலைகளைப் பேணும் நிதிபெற்ற கலைப்பணி யாளர் பணிப்பரப்புள்ளும் அடங்காத, அடக்கப் படாத பகுதிகளுள் மிகவும் முக்கியமான பகுதியாக மேற்படி ஒப்பனைக் கலைஞர்தம் துறை காணப்பட்டு வருகின்றது.

மாறாக நகர்ப்புறங்களில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட மரபுத் தொடர்ச்சியற்ற குழுக்கள் பாரம்பரியக் கலைகளின் பேணுகை களுக்கான நிதி வழங்கலைப் பெற்றுக்கொண்டு நிதி வழங்கப்பட்ட காட்சிகளுக்கும் விழாக்களுக் கும் சில ஆற்றுகைகளைச் செய்துவிட்டு பிறிதொரு நிதிபெறும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நகர்ந்து விடுவதே நிகழ்ந்து வருகின்றது.

ஆனால் சவால்களையும், இழப்புக் களையும் எதிர்கொண்டு ஆற்றுகை மரபுத் தொடர்ச்சிக்குக் காலாக இருந்துவரும் சமூகங் கள், சமூகங்கள்சார் கலைஞர்கள் குறிப்பாகத் தொழில்முறைக் கலைஞர்களாக இயங்கும் ஒப்பனைக் கலைஞர்தம் இருப்பு மிகுந்த

முக்கியத்துவம் உடையது என்பது விளங்கப் பட்டு அரச அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டு ஆதரவு வழங்கப்படுவது இன்றி யமையாதது.

இந்தவகையில் பிரதேச செயலகங்கள் ஊடாகப் பல்வேறு துறைசார் கலைஞர்கள் மாண்பு செய்யப்படுவதும் பிரதேச செயலகங் கள் வெளியிடும் மலர்களில் மேற்படி கலைஞர் விபரங்கள் பதிவுகளுக்கு உள்ளாகுவதும் மிகுந்த முக்கியத்துவம் உடையது. இது சமூகங்களில் மதிப்பும் மாண்பும் பெற்ற கலை ஞர்களை அரசும் மாண்பு செய்வது ஆக்கபூர்வ மான சமூகப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் கைங்கரியம் ஆகும்.

இந்தப் பின்னணியில் கூத்தரங்கின் ஒப்பனைக் கலைஞர் பங்கும் பணியும் தனிச் சிறப்புமிக்கது என்பதை விளங்கிக்கொள்வது அவசியமாகின்றது. இக்கலைஞர்கள் கூத்தரங் கிற்கு மட்டுமன்றி பல்வகைப்பட்ட பாரம்பரியக் கலைகளுக்கும் ஒப்பனையாளர்களாக இருந்து வருகின்றார்கள்.

பெரும்பாலும் மேற்படி கலைஞர்தம் முழுக்குடும்பமுமே இக்லைத்தொழிற்துறையில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடியும். பல்வேறு தொழிற்பகுப்புகளைச் செய்துகொண்டு அவர் களது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகை யில் இயங்கி வருபவர்களாகக் காணப்படு கின்றார்கள்.

ஆடை, அணிகலங்கள், ஆயுதங்களை வடிவமைப்பது, உருவாக்குவது, மெருகேற்று வது, பராமரிப்பது எனப் பல பணிகள் ஒரு சிறுவீட்டுக்குள் அல்லது குடிசைக்குள் நிகழ்ந்து வருவதைக் காணமுடியும்.

உள்ளூர்க் கலைத்தொழில்துறையாக, சிறுகைத்தொழில்துறையாக மேற்படி கலைத் துறை அடையாளம் காணப்பட்டு அதற்குரிய அதிகாரபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமானது. ஏனெனில் இது கலைத்தொழில் துறையாக மட்டுமல்லாது பண்பாட்டு மரபுரிமை யாகவும் கொள்ளத்தக்கது என்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது.

இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் கலை ஆர்வம், பகுதி வருமானம் என்பவற்றுக்கும் அப்பால் தம்பெற்றோர் செய்த கலைப்பணி அதனைக் கைவிடக்கூடாது, தங்களை நம்பி யிருப்பவர்களைக் கைவிடக்கூடாது என்ற தன்னுணர்விலும் இயங்கி வருவதைத் தெளிவாகக் காணமுடிகின்றது. அதிக வருவாய் அல்லது அதிக இலாபம் இல்லையேல் தொழிலை மூட்டை கட்டிவைக்கும் அல்லது முன்வராது போகும் நவீன வணிகப் பண்பாட்டுச் சூழல் கற்றுக்கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான செய்தி அல்லது வணிகக் கல்வியாக இது காணப்படுகின்றது.

கூத்தரங்கிற்கும் அப்பால் பல்வேறுபட்ட பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளதும் அழகியல் தோற்றப்பாடுகளை வலுப்படுத்துகின்ற, பாரம்பரிய மரபுரிமைகளைக் காவுகின்ற ஒரு கலைமரபு அது தொழில் முறையாகவும் இயங்கிவரும் பின்புலம் அறிந்து வலுப்படுத்தப் படுவது காலத் தேவையாக இருக்கின்றது.

கூத்தரங்கு மற்றும் பல்வேறுபட்ட பாரம்பரியக் கலை மரபுகளுக்கும் ஒப்பனைக் கலைஞர்களாக இயங்கும் இவர்கள் அவற்றுக் கும் அப்பால் நாடகங்களுக்கும் ஒப்பனைக் கலைஞர்களாக பணிபுரிபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

குறிப்பாக வரலாற்று, இலக்கிய நாடகங்களுக்கு இவர்கள் இலகுவாகவே தம்மைத் தகவமைத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சமூக நாடகங்கள் மற்றும் நவீன நாடகங்கள் வரை ஊடுருவி வந்து சாதித்த, சாதிக்கின்ற கலைஞர்களும் இம்மரபில் காணப்படுகின்றார்கள்.

உள்ளூர்த் தெய்வக் கோயில் மரபுகள் எவ்வாறு ஆகமக்கோயில் மரபுகளாக மாற்றம் கொள்கின்றனவோ அவ்வாறே கூத்தரங்கின் ஒப்பனைக் கலை அதன் பொருளாதார பல வீனத்தாலும் தொடர்ச்சியான அழிவுகளுக்கு உள்ளாவதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்ப துடன் சினிமாவில் தொடங்கி சின்னத்திரையின் செல்வாக்குக் காரணமாக காண்பியக்

கோளாறுகளுக்கு உள்ளாகி இருப்பது போருக்கும் இயற்கை அனர்தங்களுக்கும் மேலான அனர்த்தமாகி இருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தான் கலைப் புலமையாளர், கலை விமர்சகர், கலை ஆய்வாளர்கள் என இயங்குபவர்கள் மேற்படி கலை மரபுகளின் பாரம்பரியங்கள் பற்றிய புரிதல்களுடனும் பாரம்பரிய அரங்கில் மேற்படி நிலைமை பற்றிய புரிதலுடனும் விழிப்புணர்வுடனும் இயங்கிவரும் கூத்தர்கள் கூத்து ஆர்வலர்களுடன் இணைந்து இயங்குவது அவசியமாகிறது.

இச்சந்தர்ப்பத்தில் பண்பாட்டு அரசியல் பற்றிய உரையாடலின் அவசியம் உணரப்பட வேண்டியதாக இருக்கிறது.

இந்த இயக்கம் பண்பாட்டு மரபுரிமைகள், பண்பாட்டு அடையாளங்கள் என்பவற்றை சிதைக்கும் உலகமயமாக்க மென்வலுக்கரமான இலத்திரனியல் ஊடக மேலாண்மையை எதிர்கொள்ளும் நடவடிக்கை ஆகும்.

அதற்கும் அப்பால் உள்ளூர் அடையாளங்களுடன் கூடிய சமூகஞ்சார் கலை மரபுகளின் உருவாக்கம் என்பது நவகாலனியங்களுக்கு மாற்றான கட்டுப்பாடுகள் களைந்து சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் கொண்டாடுகின்ற சமூகப் பண்பாட்டு உருவாக்கத்திற்கான கலைச் செயற்பாட்டுக்களமாகின்றது. இதற்கான எண்ணக்கருவையும் முறையியலையும் ஈழச் சூழல் சார்ந்து கூத்து மீளுருவாக்கச் செயற்பாடு வழங்கிவருகின்றது. கூத்து மீளுருவாக்கம் பற்றிய வாசிப்புக்கள் இதனைத் தெளிவுபடுத்துவதாக இருக்கும்.

இந்நிலையில் கூத்து ஒப்பனைக் கலைசார்ந்து தேடல்களும் தெரிவுகளும் வலுவாகவே நிகழ்ந்துவருவது காணப்படுகின்றது. ஆனால் இத்தேடல்களும் தெரிவுகளும் மிகப் பெரும்பாலும் தற்காலச் சின்னத்திரைத் தொடர்கள் பார்த்தும் புராண, இதிகாச நாடகத் தொடர்களின் பாதிப்புக்களாலும் தீர்மானிக்கப்படுபவையாகக் காணப்படுகின்றன.

இது குறித்த சமூக விமர்சனங்களும் கூத்தரங்கில் வலுவாக இருந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இந்த இடத்தில் மரபுத் தொடர்ச்சிக்கும் நவீன "கண்கவர்" காட்சித் தோற்றத்துக்கும் இடையிலான ஊடாட்டங்களுக்கும் இடையில் பங்கேற்பது சமூக அரசியல் முக்கியத்துவம் உடையது. பல்வகை அல்லது பன்மைப் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைத்து பண்பாட்டு ஓர்மைக்குள் கொண்டுவர முயலும் பிராந்திய மற்றும் உலக வணிக சக்திகளது காளவாயில்களில் இருந்து மீளும் பண்பாட்டுச் செயல்வாதங்களுடன் தொடர்புடையது இது. குறித்த பிரதேசங்களுக்கான ஆற்றுகை முறைமைகள், ஆற்றுகை மரபுகள், ஆற்றுகை மற்றும் எழுத்துப் பனுவல்கள் வித்தியாசங்கள் கொண்டவை. தனித்துவங்களை உடையவை. உதாரணமாக தமிழகக் கூத்தும் ஈழக்கூத்தும் ஆற்றுகை முறைகளிலும் காண்பியத் தோற்றப்பாடுகளிலும் வித்தியாசங்களைக்கொண்டவை. மேலும் உள்நாட்டிலும் பிரதேசங்களுக்கிடையில் நுண்ணியதான வித்தியாசங்களைக்கொண்டவையாகக் காணப்படுவது இக்கலை மரபுகளின் பண்புகளாகவும் காணப்படுகின்றது.

எனவே கூத்தரங்கின் ஒப்பனைக் கலை மரபுகள் பற்றி அறிதலும் புரிதலும் அதன்வழி இயங்குதலும் ஆழ்ந்தகன்ற பரிமாணங்களைக் கொண்டவை. இதற்கு மேற்படி கலைமரபில் தொடர்ச்சியாக இயங்கி வருபவர்கள் பொருளாதார ரீதியாகவும், கலைத்துவ ரீதியாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக கருத்தியல் ரீதியாகவும் வலுப்படுத்திக்கொள்வதற்கான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டி இருக்கிறது.

இன்றைய நிலையில் இத்துறைசார் கலைஞர்கள் மதிப்பிற்குரிய பாரம்பரியக் கலைஞர்களாக மாண்புடன் செய்யப்படுகிறார்கள். இதன் அடுத்த கட்டங்கள் பல. பண்பாட்டு மரபுரிமையாகவும் உள்ளூர்க் கலைத் தொழிற்துறையாகவும் இக்கலை மரபின் சமூகப் பண்பாட்டு முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்படுவது மேற்படி முன்னெடுப்புக்கள் எல்லாவற்றிற்குமான அத்திவாரமாக அமையும்.

முதற்கட்டமாக இக்கலைத்துறையை உள்ளூர்க் கலைத் தொழிற்துறையாக அதிகார பூர்வமாகப் பதிவுசெய்து கொள்வது அரசின் நேரடி ஆதரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு களையும் அரச அங்கீகாரத்தையும் வழங்கு வதாக இருக்கும்.

பாரம்பரியமாக இத்தொழிற்துறையில் ஈடுபட்டுவரும் கலைமரபினரை அடையாளம் காணுவது மிகவும் எளிதானது. எண்ணிக்கை யிலும் இவர்கள் மிகவும் குறைவானவர்கள். கூட்டுறவு முறை மூலமாக மேற்படி கலைத் தொழிற்துறையை வலுப்படுத்துவது பொருத்த முடைய நடவடிக்கையாக இருக்கும்.

இவற்றை எல்லாம் நோக்கங்களாகக் கொண்டே கிழக்குப்பல்கலைக்கழக நுண் கலைத்துறையினராலும், உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டாளர்களாலும் கடந்த ஐந்து வருடங்களாகத் தொடர்ச்சியான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒப்பனைக் கலைஞர்கள் மட்டுமல்லாது பாரம் பரியக் கலை வாத்தியங்களை உருவாக்கும் இணைக்கும் கலை மரபினருடனும் இவ்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தவகையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் கடந்த ஐந்து வருடங் களாக நடத்திவரும் பாரம்பரிய அரங்க விழா மிகப்பெரும் சந்திப்புக்களமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தாராளமய நுகர்வுப் பண்பாட்டுச் சூழலிலும் போட்டியும் வெற்றியும் இலாபகரமாக மாற்றி அமைக்கப்பட்டு, வலுப் படுத்தப்பட்டு வரும் உலகமயப் பண்பாட்டுச் சூழலிலும் உள்ளூர் அறிவுதிறன் பண்பாடுகளின் கூட்டுறவுப் பண்பாட்டின் வலுவாக்கம் என்பதும் பூதச் சக்திகளை எதிர்கொள்ளும் சாதார ணர்களது சரித்திரங்கள் ஆகும். இந்த உலகின் மனிதகுல விடுதலை மட்டுமல்லாது எல்லா உயிர்களது இருப்பும் இந்தச் சமூகப் பண்பாட்டுச் செயல்வாதத்தின் வலுவான இருப்பிலும் இயக்கத்திலும் தங்கி இருக்கின்றது என்பது விளங்கிக்கொள்ளப்படவேண்டியது.

## முத்தமிழ் விழா போட்டி முடிவுகள் - 2015

### பாடசாலை மட்டப் போட்டிகள்

**கட்டுரை**

1ம் இடம் - எம்.ஜெ.பாத்திமா ஸீனியா - மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி
2ம் இடம் - பு.ஜனோதா - மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி
3ம் இடம் - ச.நிலக்ஷலா - மட் / விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்

**பேச்சு**

1ம் இடம் - ம.சதிஸ்னி - மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி
2ம் இடம் - க.யோகேஷன் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை
3ம் இடம் - ச.ஹேரஷங்கி - மட் / விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்

**விவாதம்**

1ம் இடம் - மட்/ இந்துக் கல்லூரி
2ம் இடம் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை
3ம் இடம் - மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி

தமிழரின் பழம்பெரும் பாரம்பரியக்கலை கூத்துக்கலையாகும். அன்றுதொட்டு இன்றுவரை தமிழர் மத்தியில் பெரும்மதிப்புபெற்று வழங்கிவரும் கலையாக இது திகழ்கின்றது. அண்ணாவியார், நடிகர்கள் (ஆடுபவர்கள்), பக்கப்பாட்டுக்காரர்கள், உடை ஒப்பனைக் கலைஞர்கள் ஆகிய அனைவரினதும் பங்களிப்பை இணைத்துக் கொண்ட ஒரு கூட்டுக் கலைவடிவமாக கூத்து விளங்குகிறது. அதில் பங்கு கொள்ளும் அனைவரும் தத்தமது பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதே இதனது வெற்றிக்குக் காரணமாய் அமைகின்றது. அந்த வரிசையில் ஒப்பனைக்கும் தனியிடம் உண்டு. இக்கூத்துக் கலைக்கு ஒப்பனையானது எவ்விதம் துணைபுரிகின்றது என்பதை அறிய வேண்டுமெனில் "கூத்தில் ஒப்பனை" எனும் பகுதி தனித்து நோக்கப்பட வேண்டும்.

ஒப்பனை என்பது ஆதிகாலம் தொட்டு மக்கள் மத்தியில் வழக்கில் இருந்து வரும் ஒரு அம்சமாகும். ஆதி மனிதன் வேட்டைக்குச் செல்லும் போது மிருகங்களை இலகுவாக வேட்டையாடுவதற்காகவும், அதாவது தன்னை விலங்குகளிலிருந்து வித்தியாசம் காட்டாமல் இருப்பதற்காகவும் முகம், கை, கால் மற்றும் உட லில் வண்ணங்களையும், கோடுக ளையும் வரைந்து கொண்டான். இதற்காக இயற்கையிலிருந்து பெற்றுக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்தினான்.

காலப்போக்கில் இது வளர்ச்சியடைந்து இன்று நாடக ஆற்றுகை ஒன்றின் வெற்றிக்குத் துணைபுரியும் ஒரு பகுதியாக இவ்வொப்பனையானது காணப்படுகின்றது.

அந்தவகையில் கூத்தில் ஒப்பனையானது எவ்விதம் ஊடுருவிச் சென்றிருக்கின்றது என்பதனை ஆராயுமிடத்து கூத்தின் வெற்றிக்கு ஆடலும், பாடலும் எந்தளவு முக்கியமோ அதே அளவு ஒப்பனையும் முக்கியம் பெறுகின்றது என்றே கூற முடியும்.

வடமோடி, தென்மோடி ஆகிய கூத்துக்களை மையமாக வைத்து நோக்குமிடத்து இவற்றினது முக ஒப்பனையினை எடுத்துநோக்கினால் பாத்திரத்துக்கு பாத்திரம் வேறுபட்டுக் காணப்பட்டாலும் அடித் தள ஒப்பனை ஒன்றாகவே இடப்படும். ஒப்பனை இடுவதற்கென பிரத்தியேக ஒப்பனைக் கலைஞர்கள் இருப்பர். ஒப்பனை செய்யும் முன்



செல்வி.லாவண்யா மகாதேவா

# கூத்தில் ஒப்பனை

முகத்தில் வியர்வை இல்லாது நன்றாக சவர்க் காரமிட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும். பின்னர் துடைத்து விட்டு நேரடியாகவே மாத்து இடுதல் வேண்டும். இங்கு "மாத்து" என்பது முத்து வெள்ளை எனப்படும் ஒரு வகையான தூள், பொடி ஆகும். பச்சை, வெள்ளை, கறுப்பு, சிவப்பு, நீலம் ஆகிய ஐந்து வண்ணங்களில் மாத்திரமே இதனைப் பெற்றுக்கொள்ளலாம். முதலில் ஒப்பனை செய்பவர் தம் இரு கைகளையும் நீரில் நனைத்து முத்து வெள்ளை எனப்படும் வெள்ளை நிறப் பொடியைக் கைகளில் ஒற்றி எடுத்து அதனை நன்றாக இரு கைகளிலும் பரவி, ஈரத்தன்மையுடன் அப்படியே முகத்தில் தடவ வேண்டும். சிறிது நேரத்தில் அது காய்ந்ததும், கைகளால் நேர்த்தியாகப் பரவி சமநிலைப்படுத்த வேண்டும். பின் வெள்ளை நிறத்துடன் சிவப்பைக் கலந்து இளஞ் சிவப்பு நிறத்திற்கு எடுத்து அதனையும் தண்ணீரில் குழைத்து இலேசாக இரு கண்களுக்கும் பூசிக்கொள்ள வேண்டும். கன்னங்களை மிகத் தெளிவாகவும், வேறுபடுத்தியும் காட்டுவதற்காக இதனை இடுவர்.

மேலும் கண்புருவங்களை அடர்த்தியாகக் காட்டுவதற்காக கறுப்பு நிறத்தூளை தண்ணீரில் குழைத்து புருவங்களுக்கு மேல் கைகளால் பூசுவர். பின் உதட்டுக்குச் சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துவர்.

இதில் முக்கியமாக குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், இரு கன்னங்களிலும் இடப்பட்டிருக்கும் இளஞ்சிவப்பு நிறத்திற்கு மேலாக பளபளப்புத் தூள் ஒன்று தூவப்படும். இது "அபராக்" எனப்படும். சுத்தமான பருத்தி (cotton) துணியில் அபராக் எனப்படும் ஒரு வகைத் திண்மத் தூளைக் கொட்டி, அதனை முடிச்சாக கட்டி முகம், கை ஆகியவற்றில் ஏற்றிக் கொள்வர். அத்துணியினால் வடிகட்டப்பட்டு அத்தூள் முகத்தில் ஒட்டிக்கொள்ளும். "அபராக்" எனப்படுவது மலையிலிருந்து வடிந்து வந்து மண்ணில் விளையும் ஒரு வகைக்கல் என்றே அழைப்பர். இவ் அபராக்கினை மெதுவாக உரித்தெடுத்து நன்றாக 4, 5 நாட்கள் வெயிலில் காயவைக்க வேண்டும். காய்ந்ததும் அதனை மிகத் தூளாக இடித்தெடுத்து ஒரு காய்ந்த துணியில் போட்டு முடிச்சாகக் கட்டி பயன்படுத்துவர். அபராக் முடிச்சினை ஒரு கூத்திற்குப் பயன்படுத்தியதும், வெயிலில் காயவைத்து அடுத்த கூத்திற்கும் பயன்படுத்தலாம். ஒரு முடிச்சினை கிட்டத்தட்ட 5 - 7 கூத்துக்களுக்குப் பயன்படுத்தமுடியும். ஆனால் இன்றைய நிலையில் அபராக் எடுப்பது மிகச்சிரமம் எனக்கருதும் காரணத்தால் கடைகளில் பல வண்ணங்களில் கிடைக்கும் செயற்கையான colour dust எனப்படும் பளபளப்புத் தூள் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறாக ஆரம்ப ஒப்பனை இடப்பட்டு ஆண், பெண் என பாத்திரத்திற்கு ஏற்ப ஒப்பனை வேறுபடும். கூத்தில் அரசனுக்குரிய பாத்திரம் எனும் போது வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிறங்கொண்ட ஆரம்ப பூச்சினை இட்டு அதற்கு மேல் கறுப்பு நிறத்தாலான மீசை, அடர்த்தியான புருவங்கள் மற்றும் சைற் கட் என்பன வரையப்படும். உதட்டுக்கு சிவப்பு பூசப்படும். நெற்றியில் திருநீறு பூசி பொட்டு வரையப்படும். அரச பாத்திரம் ஆகையால் சூரியன், அரச இலை, வட்டவடிவம், மாங்காய் ஆகிய வடிவங்களில் பொட்டினை வரைந்துகொள்ளலாம்.

இதேபோல் அரசி ஒருவருக்குரிய ஒப்பனை எனும் போது ஆரம்பத்தில் முத்து வெள்ளை, இளம்சிவப்பு ஆகியவற்றை இட்டு, புருவங்களை சற்றுமெல்லியதாக கறுப்பு நிறத்தால் தீட்டி உதட்டிற்கு சிவப்பு பூசுவர். அத்துடன் நெற்றியில் புருவத்திற்கு மேல் வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தாலான புள்ளிகள் இடப்படும். மூக்கில் வெள்ளைப் பொட்டு வைத்து அதனைச் சுற்றி சிவப்புப் புள்ளிகளை வைத்து மூக்குத்தி வரைவர். இப்புள்ளிகள் வைப்பதற்கு ஈர்க்கு பயன்படுத்தப்படும். அரசிக்கு வட்டப்பொட்டு, அரச இலை வடிவப் பொட்டு வைத்து சுற்றி வெள்ளைப் புள்ளிகள் இட்டுக்கொள்வர்.

அடுத்து கிருஷ்ணர், இராமன் ஆகிய பாத்திரங்கள் பச்சை நிறமாத்தையும், சிவன் நீலநிற மாத்தையும், வேடன் கறுப்பு நிற மாத்தையும் இட்டுக்கொள்வர். யமன் நீல நிறமாத்து இட்டு கண்ணுக்குக் கீழ் வெள்ளை நிறக்கோடு வரைந்து கொள்ளும். அதேபோல் வேடன் கறுப்பு நிற மாத்துப் பூசி கண்ணுக்குக் கீழ் வெள்ளைக் கோடு வரைவர். இடையிடையே சிவப்பு நிறமும் பூசிக் கொள்வர். இவை தவிர பண்டாரம் (வயது முதிர்ந்தவர்), முனிவர், தூதன், தோழிமார், அனுமான் ஆகிய பாத்திரங்கள் சாதாரண முத்து வெள்ளையினையே இட்டுக்கொள்வர். அனுமானுக்கு சிவப்பு நிறமானது அதிகமாகவே பயன்படுத்தப்படும். வாய்ப்பகுதியை வேறுபடுத்திக்காட்ட சிவப்பு நிறம் அதிகம் பூசப்பட்டது. வேதாளம் எனப் படும் விசேடமான பாத்திரத்திற்கு வெள்ளை நிறக் கோரப்பற்கள் வெளியே தெரியும்படி வாயின் இருபுறமும் வரையப்பட்டு, மூக்கின் நடுவே சிவப்புக் கோடு வரையப்படும்.

ஆரம்ப காலத்தில் வண்ணப் பொடி களை தண்ணீருக்குப் பதிலாக ஆமணக்கு எண்ணெயில் கலந்து முகத்திற்குப் பூசுவர். இதனால் முகத்தில் பளபளப்புத்தன்மை ஏற்படு வதுடன் தொண்டை திறந்து நன்றாகப் பாடி நடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் தற் காலத்தில் இலகு கருதி தண்ணீர் குழைத்தே பயன்படுத்துவர். இறுதியில் ஒப்பனையினை நீக்கும் ஒப்பனை நீக்கியாக தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது. சிலநேரங்களில் தேங்காய்ப் பூவைக்கூடப் பயன்படுத்துவர். இரு கைகளிலும் எண்ணெயைத் தடவி லேசாக முகத்தில்த் தடவி மாத்தினை நீக்கிக்கொள்ள முடியும்.

இவ்வாறாக அக்காலம் தொடக்கம் தற்காலம் வரை கூத்தில் ஒப்பனையானது மிகவும் தனித்துவம்மிக்க ஒன்றாகக் காணப் படுகின்றது. கூத்தினது ஆடல், பாடல் என்பவற் றையும் தாண்டி ஒப்பனையும் தனக்கென தனியிடம் பிடித்துள்ளது எனலாம். ஆரம்பத்தில் இயற்கையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தினாலும், காலப் போக்கில் நாகரீக மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஒப்பனைப் பொருட்களிலும் சிறிது மாற்றம் ஏற்பட்டு, இன்று கூத்தானது தமிழரது சிறந்த, தனித்துவம்மிக்க, பாரம்பரிய கலை யாகத் திகழ்வதில், ஒப்பனைக்கும் சிறந்த இடம் உண்டு எனலாம்.

## நேர் கண்ட ஒப்பனைக் கலைஞர்கள் விபரம்

01) திரு. செ. வேலுப்பிள்ளை
தந்தை - செல்வநாயகம்
தாய் - கண்ணம்மை
சொந்த இடம் - வவுணதீவு
வசிக்கும் இடம் - கரவெட்டி
வயது - 63

02) திரு. ந. சந்திரசேகரம்
தந்தை - நல்லதம்பி
தாய் - வள்ளிப்பிள்ளை
இடம்- கன்னன்குடா

03) திரு. ஏ. நாகையா
தந்தை - ஏகாம்பரம்
தாய் - சந்தனப்பிள்ளை
இடம் - விளாவெட்டுவான்
வயது - 60


# ஓய்வு



சுந்தரமதி வேதநாயகம்

இரவில் மின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டதும் எங்கோ மறைந்து போனது போல் இருக்கும் கட்டிடங்களும் மரம் செடி கொடிகளும் மீண்டும் கதிரவனின் முகத்தைக் கண்டதும் புதிதாக தோன்றுவது போல் காட்சியளிக்கும். அதிகாலைப் பொழுதின் அழகும், மலர்களின் சுகந்தமும், இதமான தென்றலும், பறவைகளின் செல்லமான கீச்சொலிகளும் உமாவிற்கு ரொம்ப பிடிக்கும். அன்று சனிக்கிழமையாக இருந்தும், வேளைக்கே எழுந்து விட்டாள். கணவர் சங்கரும், மகள் பிரியாவும் உறங்கிக் கொண்டிருந்தனர். லீவு நாள் தானே நித்திரை கொள்ளட்டும் என்று நினைத்தவளாக வழமை போல் அன்றாட வேலைகளைச் செய்யத் தொடங்கும் முன் குளித்து பொட்டிட்டு சுவாமி அறைக்குள் சென்றாள். அங்கே முதல் நாள் வெள்ளிக்கிழமை பூக்களால் நிறைந்திருந்த சுவாமிப் படங்களில் இருந்த பூக்களை எடுத்து விட்டு அறையை சுத்தம் செய்தாள். பின் வீட்டின் முன்னால் பூத்திருந்த புது மலர்களை பறித்த வந்து வைத்த பின் விளக்கேற்றி எல்லோர் நலனுக்காகவும் வேண்டிக்கொண்டாள்.

உடலுக்கு நல்லது என்பதால் வெறு வயிற்றில் தண்ணீரை வயிறு நிறையக் குடித்து விட்டு வளவைக் கூட்டத் தொடங்கினாள். தேனீர்க் கோப்பையுடன் வந்த மகளைப்



பார்த்து, "இன்று லீவு தானே பிரியா! இன்னும் கொஞ்ச நேரம் நித்திரை கொண்டிருக் கலாமே?" என்றாள் உமா. "இல்லையம்மா! அலுவலக வேலை கொஞ்சம் முடிக்க வேண்டியுள்ளது" என்றவள் "அ...ம்...மா இஞ்ச கொஞ்சம் பாருங்களேன். என் அழகான ரோஜா பூத்திருக்கின்றது" ஆசையுடன் தடவி முத்தமிட்டாள்.

தாய் குடித்து விட்டு கொடுத்த தேனீர்க் கோப்பையுடன் உள்ளே சென்றவள் கழுவ வேண்டிய உடுப்புக்களுடன் குளியலறைக்குள் சென்று சாயம் போகும் உடைகளை வேறாக வும், மற்றைய உடைகளை வேறாகவும் ஊற வைத்தாள். பின் வந்து வீட்டை ஒழுங்கு படுத்திக் கூட்டி முடித்தவள் உடைகளை கழுவி குளித்து விட்டு தன் மடிக் கணினியை திறந்து வேலையில் ஆழ்ந்து போனாள்.

உமா முதல் நாள் இரவே தோசைக்கான மாவை அரைத்து புளிக்க வைத்திருந்தாள். சாம்பாரைத் தயார் செய்த பின் மகளுக்குச் சுடச்சுடத் தோசை வார்த்து விட்டு சாப்பிட அழைத்தாள். உமா தன் பின்னால் நிழலாடு வதை உணர்ந்து திரும்பிப் பார்த்த போது சங்கர் சிரித்துக் கொண்டு நின்றிருந்தான். "என்னப்பா? நீங்களும் எழுந்து விட்டீர்களா? இந்த கதிரையில் இருங்கள் ஒரு நொடியில் தேனீர் போட்டுத் தருகின்றேன்" என்றாள். "உமா நீ தேனீரைப் போடு முகம் கழுவி விட்டு வருகின்றேன்" என கூறிய படி எழுந்து சென்றவன் மீண்டும் வந்து கதிரையில் அமர்ந் தான். உமா கொடுத்த தேனீரை சுவைத்துக் குடித்தான்.

"சரி உமா! வளவிற்கு போகின்றேன்" "போங்க சங்கர் நானும் வருகின்றேன்." என்ற வள் விரைவாக சமையலறையை ஒழுங்கு செய்து விட்டு வளவிற்கு சென்ற போது சங்கர் கிணற்றில் இருந்து நீர் அள்ளித் தென்னை மரங்களுக்கு ஊற்றிக் கொண்டிருந்தான். "இந்த வேலைகளை எல்லாம் நீங்க ஏன் கஸ்டப்பட்டு செய்ய வேண்டும் ஒரு ஆளை கூலிக்கு வைத்து செய்யலாம் தானே" என்றாள். கவலையுடன், "உடல் பயிற் சியாக இருக்கட்டும் உமா! எம் வேலைகளை நாமே செய்தால் ஒரு ஆத்ம திருப்தி ஏற்படும்" என்றான். "வங்கியில் வேலை செய்து கைநிறைய சம்பாதிக்கும் நீங்க ஏன் கஷ்டப்பட வேண்டும்?" எனக் கேட்ட உமாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்த சங்கர் "எல்லோரும் நினைப் பது போலத்தான் நீயும் நினைக்கியாய். எனக்கு இப்போது ஐம்பது வயதாகி விட்டது. இன்னும் சிறிது காலத்தில் ஓய்வுக்கு சென்றுவிடுவேன். எமது மூத்தமகள் காயாவிற்கு வீடு கட்டி கல் யாணம் செய்து வைத்ததில் பெரிய தொகை செலவாகிவிட்டது. பிரியாவின் பல்கலைக்கழக படிப்பிற்கும் தேவைப்பட்டது. இன்று நல்ல வேலை கிடைத்துவிட்டாலும் நம் கண்ணோட ஒரு நல்ல வாழ்க்கையையும் தேடிக்கொடுக்க வேண்டுமே உமா. நிலை மட்டத்தோட நிற்கும் பிரியாவின் வீட்டைக் கட்டிமுடிக்க வேண்டுமென் பதற்காக வீட்டுக்கடன் இருபது இலட்சம் எடுத்து பதினெட்டுலெட்சத்துக்குள் கட்டியும் முடித்து விட்டேன். மிகுதி இருந்த இரண்டு இலட்சத்தில் இந்த வளவிற்குள் ஓர் பயனுள்ள அழகான தோட்டத்தை உருவாக்க வேண்டுமென நினைத்தேன். இப்போது சம்பளத்தில் கடன் காசு வெட்டப்படுகிறது.

வேலை செய்யும் காலத்தில் ஊழியர்க ளுக்கு கடன், ஊக்குவிப்புத்தொகை, மருத்துவச் செலவு, ஊழியர் சேமலாபநிதி இப்படி எத்தனையோ வசதிகள் இருப்பதால் வேலை செய்யும் காலத்தில் பணக்கஷ்டம் தெரிவதில்லை. ஆனால் ஓய்விற்குப் போனபின் பலரின் பிரச்ச னைகள் ஒரே மாதிரித்தான் உள்ளன. "ஏன்? என்ன பிரச்சனை சங்கர்?" "கதையை ஆறுத லாகச் சொல்லுறன். இதோ தென்னை மரங்க ளுக்கிடையே வெட்டிவைத்துள்ள குழிகளுக்குள் மரக்கன்றுகளை எடுத்து வந்து, உன் ராசியான கையால் வைத்து வா" என்றான். உமாவும் சொன்னபடியே செய்தாள் குழிகளை மூடி முடித்த சங்கரிடம் "வேலை நாட்களில் தான் சாப்பிட்ட பாதி சாப்பிடாத பாதியென்று ஓடுவீர் கள். இன்று சுடச்சுட தோசை சுட்டுத் தருகி றேன்." கூறிமுடிக்கு முன் "வா...வா... முதலில் அந்த வேலையை முடிப்போம்" என்றான்.

இருவரும் சிரித்தபடி வீட்டிற்கு சென்றனர். அன்று பின்னேரம் சங்கர் மீண்டும் வளவிற்குள் சென்று விட்டான். சிறிது நேரத்தின் பின் தேநீரை எடுத்துக் கொண்டு உமாவும், பிரியாவும் அங்கே சென்றனர். காலையில் நட்ட மாமரக் கன்றுகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்த சங்கரிடம் வந்த பிரியா, "அப்பா! நல்ல உடற்பயிற்சிதான். குளித்து விட்டு நிற்பது போல் நிற்கிறீர்களே. இந்தாங்க தேநீரை குடித்துவிட்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நானும் அம்மாவும் இந்த தோட்டத்தைச் சுற்றி ஓடிவிட்டு வருகிறோம். என்..ன அம்மா?" என்றவாறு தாயின் பக்கம் திரும்பினாள். "ஐய்..யய்யோ எனக்கு உன் னோடு ஓட முடியாது. பிரியா! வேணுமென்றால் விரைவாக நடந்து வருகின்றேன்." "சரி..சரி கதைத்துக்கொண்டிருக்காமல் இடத்த காலி பண்ணுங்க என்றான் சங்கர்." சிறிது நேரத்தில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வந்த பிரியா, "அப்பா... யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பது பெரியோர் வாக்கு. சிறியோராகிய என் வாக்கு என்ன தெரியுமா?" "சொல்லு கேட்போம்" என்றான் சங்கர். "நீங்கள் பெறும் துன்பங்களைப் பெறுக இக் குடும்பம்" "நான் பெறும் என்ன துன்பங்களை நீங்கள் பெறப் போகிறீர்கள்." என்று சங்கர் கேட்கவும், வேலைகளைப் பிரித்து எடுப்போம் எனறாள் பிரியா!

உமாவும் அவ்விடத்திற்கு களைத்துப் போய் வந்தாள். எதை பிரிக்க போகிறாய் எனக்கேட்டாள். "அம்மா நாம் வேலைகளை பிரித்தெடுப்போம்" என்றாள். "அப்பா நீங்க முப்பது தென்னை மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றுங்க. இருபது மாமரங்களுக்கும் அம்மா ஊற்றட்டும். ம்!... வல்லாரை, அகத்தி, வாழை, முருங்கை, மரங்களுக்கு நான் பொறுப்பு." "க..ள்..ளி வாழை மரங்கள் கிணற்றடியைச் சுற்றி நிற்பதால் நீரூற்றத் தேவையில்லை. தென்னை மரங்களைச் சுற்றி நிற்கும் வல்லாரை பொன்னாங்காணி மரங்களுக்கும் நீர் தேவையில்லை. முருங்கை அகத்தி பூக்கத் தொடங்கிவிட்டது." "சரி..சரி அப்பா கத்தரி வெண்டி மிளகாய்க்காவது நான் ஊற்று கின்றேனே அப்..பா" என்றாள் பிரியா. "பின்ன நான் ஊற்றப்போகின்றேன் என்றா சொன்னேன். அதற்கும் உன் பூமரங்களுக்கும் நீயே ஊற்று அதோட பலா மரங்களையும் சேர்த்துக்கொள்" என்றான் சங்கர். கிணற்றில் தண்ணீரை அள்ளி இரு வாளிகளுக்குள் ஊற்றினான். உமாவும், சங்கரும் ஆளுக்கு ஒன்றாகத் எடுத்துச் சென்று மரங்களுக்கு ஊற்றத் தொடங்கினார்கள். பிரியா குழாயைப்பூட்டி தண்ணீர் அடிக்கத்தொடங்கினாள். "மகள் நேற்றுத்தான் கூட்டுப்பசளை போட்டிருக்கிறேன். ஆழமாக தண்ணீரை ஊற்று நிலத்தை மட்டும் ஈரமாக்கிவிட்டு வந்து விடாதே. என்ன?" என்றான் பகிடியாக "போ..ங்..க அப்பா. அந்த சோம்பேறி வேலையெல்லாம் நான் செய்ய மாட்டேன்" என்று சிணுங்கினாள் பிரியா.

"சரி வேலையை சீக்கிரம் முடிங்க. இன்று கல்லடிக் கடற்கரைக்குச் சென்று வருவோம்." "காற்றாடவா அப்பா!" "இல்ல... மூவரும் இம்மி அடிக்க." அம்மாவும் மகளும் சிரிப்பதைப் பார்த்து விட்டு, "சிரித்தது போதும் நீங்க போய் வெளிக்கிடுங்க. எனக்கு இன்னும் கொஞ்சம் வேலை உள்ளது முடித்து விட்டு வருகிறேன்" என்றான்.

"அப்பா மறந்து விட்டேன் என் மோட்டார் சைக்கிளில் பெற்றோல் கொஞ்சம் தான் உள்ளது" என்றாள். "என் மோட்டார் சைக்கிளுக்கும் பெற்றோல் அடிக்க வேண்டும் பெற்றோல் போத்தலை எடுத்து பையில் போட்டு வை, வருகிறேன்" என்றான் சங்கர். சிறிது நேரத்தில் பிரியாவும் உமாவும் வெளிக் கிட்டு நிற்பதைப் பார்த்துவிட்டு சங்கரும் குளித்து உடை மாற்றிக்கொண்டு வெளியே சென்றான். வாங்கி வந்த பெற்றோலை பிரியா விடமும் கடற்கரையில் கொறிப்பதற்கு வாங்கி வந்த கச்சான் கடலைகளை உமாவிடமும் கொடுத்தான். மூவரும் கிளம்பிச் சென்றனர். மூத்த மகள் காயா பேரனையும் வரச் சொல்லி தொலைபேசியில் சொல்லியிருந்தாள் உமா. எல்லோரும் வந்து சேர்ந்ததும் ஒன்றாக அமர்ந்து பலதையும் பற்றிக் கதைத்துக்



கொண்டு வாங்கிப் போயிருந்த நொறுக்குத் தீனிகளைச் சாப்பிட்டு மகிழ்ந்தனர். பேரன் பிரதீப் குட்டி அங்கு மிங்கும் பந்தடித்து விளையாடிக்கொண்டிருந்தவன் ஓடி வந்து எல்லோரையும் கரைக்குச் சென்று காலை நனைத்து விளையாட அழைத்தான். எல்லோருமே கோர்வையாக கையைப் பிடித்துக் கொண்டு அலையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது உமா காயாவிடம் கூறினாள், "இன்று இரவிற்கு எங்களுடன் சாப்பிட்டு விட்டு போங்க மகள். இரவைக்கு உப்பு மா செய்வோம்" என்றாள். வீட்டிற்கு வந்ததும் மூவருமாக சேர்ந்து விரைவில் இரவுச் சாப்பாட்டைச் செய்து முடித்தனர். ஒன்றாக அமர்ந்து தொலைக்காட்சியில் அன்றைய செய்திகளைக் கேட்ட வண்ணம் சாப்பிட்டனர். பிரதீப்பிற்கு நித்திரை வந்து விட்டது அம்மா நாங்கள் சென்றுவருகிறோம் என விடைபெற்றுச் சென்றனர் காயா குடும்பத்தினர்.

நாட்கள் யாருக்கும் காத்திராமல் மிக வேகத்தில் பறந் தோடியது. பிரியா திருமணம் முடித்து ஒரு குழந்தைக்கும் தாயாகி விட்டாள். சங்கர் தோட்டத்தின் நடுவே வைக்கோலால் வேய்ந்து கூடாரம் ஒன்று அடித்து கல் இருக்கைகள் செய்து வெள்ளை மணல் கொட்டி பூச்சாடிகளை வளைத்து வைத்திருந்தான். பார்க்க மிகவும் அழகாக இருந்தது. அதில் உமா பிரியாவின் மகளை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். சங்கரும் இவர்களின் விளையாட்டை ரசித்தவாறு அமர்ந்திருந்தான்.

சங்கருடன் வேலை பார்த்த அமீர் அங்கே வந்திருந்தான். "வா மச்சான் இரு", என கல் இருக்கையைக் காட்டினான். "நலமாய் இருக்கிறாயா? கொஞ்சக் காலமா ஆளையே காணமுடியவில்லையே?" "வாங்க அண்ணா" என உமா வரவேற்றாள். "மூத்த மகளுடன் கொஞ்ச நாள் சென்று தங்கினேன். என் மனைவி பாத்திமா மௌத்தானதிற்கு பிறகு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை சங்கர். ஓய்வூதியத் தொகைக் காசில கொமினிகேசன் கடை ஒன்று கொழும்பில் போட்டன். எந்த லாபமும் இல்ல." "ஏன் மச்சான்?" என வினவினான் சங்கர். "கடைவாடகை, மின்சாரக் கட்டணம், உதவி ஆட்களுக்குக் கூலி இப்படி எவ்வளவோ செலவுகள் கடைசில வரியையும் கூட்டி விட்டாங்க. ஆரம்பதில் நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது. இயந்திரம் தானே அடிக்கடி திருத்தவேண்டி வந்தது. வைரஸ் அது இது என்று ஏகப்பட்ட பிரச்சினைகள் கடைசியாக அரை விலைக்கே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு எந்த லாபமும் இல்ல. நம் ஊருக்கே வந்து விட்டேன். சரி உனது தொகைப்பணத்தை எடுத்து என்ன செய்தாய் சங்கர்"? என அமீர்

கேட்டான். "சின்னமகள் பிரியாவின் கலியாணத்திற்கு சரியாக இருந்தது. கடன் எடுத்ததால் ஓய்வூதியப்பணமும் சரி அரைவாசிதான் வருகிறது. தோட்டத்தால் மாதம் இருபது ஆயிரம் வரை கிடைக்கிறது. ஓய்வு காலம் பனிப்போரில்லாமல் போகிறது." "என்ன மச்சான் பனிப்போர்...?"

"அது தான் ஓய்வூதியம் கிடைத்த பின் நம்மில் பலர் அனுபவிக்கும் மனப் போராட்டங்கள் மன அழுத்தங்களைத்தான் சொல்கிறேன்". "விளங்கவில்லையே? கொஞ்சம் புரியும் படி சொல்லன்" என்றார் அமீர். "வேலை பார்க்கும் காலங்களில் நல்ல வசதிகள் சலுகைகள் கிடைப்பதால் வாழ்க்கைச் சக்கரம் பிரச்சனையில்லாமல் சுழலுகின்றது. படிப்படியாக வீடு, குடும்பம், பிள்ளைகள், அவர்களின் படிப்பு, திருமணம் என்று வரும் போது பலர் கடன்பட்டுத்தான் சமாளிக்கிறார்கள். ஓய்வூதியம் பெற்ற அனைவரிடமும் கேட்டுப்பார் மிச்சம்மீதி உள்ளதா? எனக்கேட்டால் பலருக்குப் பூச்சயமாகவேயுள்ளது. ஒவ்வொருவரின் அனுபவமும் வெவ்வேறாக இருக்கும்." "உண்மை தான் மச்சான் இன்று ஓய்வூதியம் பெற்றவர்களின் வாழ்க்கையும் ஒவ்வொரு சரித்திரமாகவே உள்ளது. சிலர் குடும்பம், பிள்ளைகளுக்காக அனைத்தையும் கொடுத்து விட்டு அரைவாசி ஓய்வூதியத்தில் வாழ்கின் றார்கள். மூப்பு, பிணி, மரணம் அது வேற. இன்னும் சிலர் கார், வான் வாங்கி ஓடுகிறார்கள். அதுவும் சிறிது காலம் தான். சிலர் வேறு நிறுவனங்களில் வேலை செய்கிறார்கள். இன்னும் சிலர் கடை வைக்கிறார்கள். இப்படி எத்தனையோ பேர் எத்தனையோ முயற்சிகள். அதற்காக எல்லோரின் நிலையும் இதுதான் என்று கூறவில்லை. புத்தியாகச் சீவிப்பவர்களும் உள்ளனர். ஓய்வு காலத்தைப் பயனுள்ளதாக மாற்றிக் கொண்டவர்களும் உள்ளனர்". "எப்படி சங்கர்?" என ஆர்வமாகக் கேட்டான் அமீர். "சமூகசேவை, கற்பித்தல், பகுதிநேர விரிவுரை யாளர்கள் வேலை பார்க்கும் இளைய தலை முறையினரை வழிகாட்டிச் செல்பவர்கள், ஓய்வூதியம் பெறும் எமக்காக நலன்புரிச் சங்கங்களை அமைத்து அதன் முன்னேற்றத் திற்குப் பாடுபடுபவர்கள், மற்றும் இலக்கிய துறை ஆன்மீகத்துறை என நல்லபடியாக வாழ்பவர்களும் உள்ளனர். ஆனால் நூற்றுக்கு எண்பது வீதமானவர்கள் ஓய்வுக்குப் போன பின்பும் ஏதாவது கடன் கிடைக்குமா? என எதிர்பாரப்பவர்களாகவே உள்ளனர். காரணம் விசம் போல் ஏறிக்கொண்டு போகும் விலை வாசி. பத்தாம் திகதி சந்தோசமாகச் சென்று ஓய்வூதியம் எடுக்கிறோம். 30ந் திகதிக்குள் மின்சாரக்கட்டணம், தொலைபேசிக்கட்டணம், கடைக்காசு, சிலருக்கு வீட்டு வாடகை பலருக்கு கொண்டாட்டங்கள், சீட்டு, மரணவீடுகள், விழாக்கள், இது போதாதென்று நோய்களும் வந்து சேர்ந்து கொள்கின்றன. அடுத்த 10ம் திகதி வருவதற்குள் நாய்படாப்பாடுதான்.

நாம் யாருக்காக பணத்தையெல்லாம் செலவழித்தோமோ, அந்த பிள்ளைகளுக்கு கூட மனமிருந்தாலும் பெற்றோருக்கு உதவ முடியாத நிலை. அதை பிழையா? சரியா? எனச்சொல்ல வரவில்லை. அவரவர் வாழ்கையை, வேலையைப் பார்ப்பதற்கே நேரம் இன்றி காலில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமா மச்சான்? சிலரின் பிள்ளைகள் வெளிநாட்டு வேலை, மேல்படிப்பு என்று சென்று இடையில் பணத்தை மட்டும் செலவழித்து விட்டு மீண்டும் ஊருக்கே வந்து சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். பலரின் வாழ்க்கை அனுபவக்கதைகளை அறிந்த பின் தான், ஐந்து வருடத்திற்கு முன்னே இந்த தோட்டத்தை உருவாக்கிப் பராமரித்தேன். எந்தக் கேள்வி கணக்கும் இன்றி இன்று பயன்தருகின்றன. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த உமா சொன்னாள் "அமீர் அண்ணா! இவர் அடிக்கடி என்ன சொல்லுவார் தெரியுமா? பெற்றால் தான் பிள்ளையா? வளர்த்தாலும் பிள்ளை தான். நன்றியுள்ள பிள்ளைகள் என்பார்". சங்கர் சிரித்துக் கொண்டே "தென்னம் பிள்ளைகளைத்தான் சொல்கிறாள்" என்றான்.

"நீ சொன்ன அனைத்தும் உண்மை

சங்கர். என்னையே எடுத்துக் கொள்ளேன். இரத்தமுத்தம், நீரழிவு, கொழுப்பு எல்லா நோயும் என் உடலில் இருப்பிடமாக இருக்கிறது. பிள்ளைகளுக்காக அனைத்தையும் செலவழித்தன் நன்றாகப் படிக்கவைத்தேன். மூவரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நான் தனித்துவிட்டதாக உணர்கின்றேன். தனிமை கொடுமையாக உள்ளது". கூறும் போதே அழுதுவிட்டார் அமீர். மனவேதனை அதன் தாக்கங்களின் வெளிப்பாடே இந்தக்கண்ணீர் என்பதை உணர்ந்த சங்கரும், உமாவும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். "எ...ன் ம... னைவி...யை" மிகுதியைச் சொல்லமுடியாமல் திணறிய அமீரின் முகத்தைப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருந்தது. இருவருக்கும், கண்கள் சிவந்து போனது. கைகளால் முகத்தைப் பொத்தியபடி, உடல் குலுங்க அழும் அமீரை ஆதரவாக அணைத்துக் கொண்டான் சங்கர். மனப்பாரம் குறைய நன்றாக அழவிட்டான். "எ..ன் உ..யி..ரு...க்...கு...ம் மேலாக நே.. சி..த்தேன். என்னை பிரியாமல் வாழ்ந்தவள் இன்று நிரந்தர...மாக பிரிந்து சென்று விட்டா..ள். பல தடவை சாக முயற்சித்தேன். அதுவும் முடியவில்லை. மனமாற்றத்திற்காக கொழும் பிலிருந்து பார்த்தேன். இயந்திரமான நகர வாழ்க்கை வெறுத்துவிட்டது. அல்லாவை நினைத்துக் கொண்டு ஊருக்கே திரும்பி வந்து விட்டேன். மகளுடன் இருக்கிறேன். மகளும், மருமகனும் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். பேரன் பாடசாலைக்குச் சென்று விடுவான். வந்து சாப்பிட்டு விட்டு வகுப்பிற்கு ஓடிவிடு வான். மகளும், மருமகனும் சாப்பாட்டைக்கட்டிக் கொண்டு சென்று விடுவார்கள். சாப்பாடு, இருக்கும். சாப்பிட்டேனா? சாப்பிடவில்லையா? கேட்...க யாரும் இ..ல்..ல.. பாத்திமாவை நினைத்துக் கொள்வேன். சாப்பிடவே பி..டி..க் காது." மீண்டும் மௌனம்.

பேச்சை மாற்ற நினைத்த சங்கர் "மச்சான் இந்தத் தோட்டத்தால தனிமை என்பதே எனக்குத் தெரிவதில்லை. உமா பிள்ளைகள் இருந்தாலும், இங்கேயுள்ள ஒவ்வொரு மரத்தையும் ஒவ்வொரு உயிராகவே நினைக்கிறேன். இந்த அமைதி அழகான இந்தச் சூழல் பறவைகளின் இன்னிசை எல்லாம் இன்பமாகவே இருக்கிறது அமீர்". "பார்க்க விளங்குகிறது சங்கர். அன்று பார்த்தது போலவே இன்றும் இருக்கிறாய். வா! தோட்டத்தைச் சுற்றிப்பார்ப்போம்". இருவரு மாகச் சுற்றிப் பார்த்த பின் தோட்டத்தில் காய்த்திருந்த மாதுளம்பழம், பப்பாசிப்பழம் சிலவற்றைப் பறித்துக் கொடுத்தான் சங்கர்! "உண்மையிலேயே இந்தச் சூழல் மனதிற்கு மிகவும் சந்தோசமாக உள்ளது. என்னிடம் இதைவிடப் பெரிய வளவொன்று சும்மாதான் கிடக்கிறது. இப்படிச்செய்யலாம் என்ற எண்ணம் எனக்கு வரவேயில்லை. நான் இறந்தால் என் ஓய்வூதியம் யாருக்கும் கிடைக்காமல் போய்விடும். ம்... காலங்கடந்த பின் ஞானம் வந்தாலும் நான் வாழும் வரை ஓர் அழகான இதைப்போன்ற பயனுள்ள தோட்டத்தை உருவாக்கி என் சந்ததிக்கு விட்டுச்செல்ல விரும்புகிறேன் சங்கர்! என் ஓய்வு காலமும் பயனுள்ளதாக இருக்கும் என நிச்சயமாக நம்புகிறேன். ஆனால் உன் வாழ்க்கை ஒரு தொடர் கதைதான். உனக்குப்பின் உன்மனைவி பிள்ளைகள் பயனைப் பெறுவார்கள். ஒவ்வொரு மரமும் பூத்துக் காய்த்துப் பயன் கொடுக்கும் போது உன்னை நிச்சயம் மறக்க மாட்டார்கள் இறந்தால் கூட வாழ்ந்துகொண்டி ருப்பாய். மச்சான் சங்கர் ஓய்வின் பயன் அதன் மகத்துவம் இன்றுதான் விளங்கியது. இன்னும் கொஞ்ச நாளில் இறந்து விடுவேன் என நினைத்திருந்தேன். ஆனால் இப்போது புது இரத்தம் என் உடலில் பாய்வது போல் உணர்கின்றேன். மனப் போராட்டங்களிலிருந்து விடுபட்டு அமைதி கிடைத்துள்ளது. பனி சூரியனைக்கண்டு மறைந்து விட்டது சங்கர்.! இன்ஸா அல்லா" என்றவாறே சங்கர் உமா இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டார் அமீர். "ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகின்றது........." என்று முணுமுணுத்தவாறு மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறந்த அமீரை மனநிறைவுடன் பார்த்த உமா தம்பதிகள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

# அநுபவம்



கித்துளர் குலம்

ஆசை கனவுகளுடன் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த போதும் பிரிவின் துயரம் ஒருபுறம், ஏழ்மையின் இயலாமை மறுபுறம் வெளிநாடு சென்றாவது வாழ்வில் ஒரு விடியலைத் தேடிக்கொள்வோம். மற்றவர்களைப் போல நாமும் சொந்தமாக ஒரு வீடு, சொந்தமாக ஒரு வாகனம் என்று சந்தோசமாக வாழ வேண்டும் என்ற கற்பனையோடு பறந்துகொண்டிருந்த சந்திரன் சற்று கீழ் நோக்கி பார்வையைச் செலுத்திய போது சிறு புற்களும், கற்களும் போல கட்டிடங்கள் தெரிந்தன. அப்பொழுது அவனுக்கு தன் கடைசி மகனின் நினைவு வந்தது.

"அப்பா அந்தா பறக்கிற விமானத்தில் நாமளும் போக ஏலாதா அப்பா?"

"எனக்கு முடியுமெண்டா நான் வெளிநாட்டுக்குப் போய் காசு கொண்டு வந்து ஒரு புது வீடு கட்டி அதில ஒரு டீ.வி பூட்டி அம்மா அப்பா எல்லாருக்கும் புதுப்புது உடுப்புகள் வாங்கிக் கொடுப்பன்." என்று தன் மழலைச் சொற்களால் கூறிய வார்த்தைகளை அசைபோட்டுப் பார்த்த வலி கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர்த் துளிகள் உருண்டு விழ வேகமாக அதைத் துடைத்த படி அக்கம்பக்கம் அவசரமாய்ப் பார்த்தான். நல்லவேளை யாரும் பார்க்க வில்லை. அவரவர் ஏதேதோ எண்ணம் கவலைகளில் இருப்பார்கள், என்னையா பார்ப்பார்கள் என்று தனக்குள்

எண்ணியபடி மீண்டும் தன் வீட்டு நினைவுக்குத் திரும்பினான்.

இளம் வயதிலேயே திருமணம் முடித்தபடியால் நான்கு குழந்தைகளுக்குத் தகப்பனாகி அதிலும் இரண்டு குமருகள். அடுத்தவள் எட்டாமாண்டு. கடைசி ஆண் பிள்ளை இப்பொழுது தான் பாலர் பாடசாலை. வருமானம் போதவில்லை. அதைவிட சந்திரனு டைய வயது முதிர்ந்த தாயாரும் இவனது பொறுப்பிலேயே இருந்தார். மாமியார் மருமகள் சண்டை எதுவும் இல்லாத வகையில் சந்திரனின் மனைவி ரதி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள். குடும்பத்திலுள்ள ஒரே பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனை மாத்திரமே. இதனால் எப்படியும் தனது குடும்ப நிலையை உயர்த்திட வேண்டும் என்ற துடிப்போடும் வெறியோடும் சந்திரன் கட்டார் நாட்டிற்கு விமானத்தில் பறந்துகொண்டிருந்தான்.

அன்று கடைக்குச் செல்லும் போது தற்செயலாக ஒரு வெளிநாட்டு முகவர் ஒருவரைச் சந்தித்தான். அவர் ஏற்கனவே சந்திரனுக்கு அறிமுகமானவர்தான் வெளி நாட்டுப் பொருட்களை விற்பதற்காக அடிக்கடி ஊர்ப்பக்கம் வருபவர்.

“தம்பி சந்திரா.... கட்டார்ல நல்ல வேல ஒண்டு இருக்கு. பத்துப்பேர் தேவைப்படுது. நீ இங்க இருந்து வீணா ஏன் கஸ்டப்படுறா? இப்பிடியே இருந்தா உன்ட குமருகள எப்படி கரசேக்கப்போறா? உன்ட குடும்பத்த எப்படி நடத்தப்போறா? யோசிச்சிப்பாரு. வெளிநாடு போனா அந்தா ரெண்டு வருசம் ஓடிப் போகும். பிறகென்ன? நீ ராசா தான். நான் உனக்குச் சொல்றன். எட்டு மணித்தியால வேல. நாலு மணித்தியால ஓவர் டைம். கூட்டிக் கழிச்சுப் பாத்தா அறுபதாயிரம் எடுக்கலாம். எனக்கு நீ இப்ப ஒரு லச்சம் மட்டும் தா. பிறகு சம்பளத்த எடுத்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாத்தாவன். நாம என்ன தெரியாத ஆக்களா?”

அவரது பேச்சு சந்திரனை வீழ்த்தி ஆசையை உருவாக்கியது. வீடு திரும்பி மெதுவாக தன் மனைவியிடம் ஆலோசனை வடிவில் கதையை எடுத்தான்.

“நிறையப் பேர் இப்பிடித்தான் வெளிநாடு போய் கஸ்டப்பற்றாங்க. சம்பளம் இல்லாம் திரும்பி வாறாங்க. நாமளும் ஏன் அப்பிடி கஸ்டப்படோணும். ஏதோ இருக்கிறதக் கொண்டு நல்லா வாழுவம்” என்றாள் ரதி.

“முகவரும் அப்பிடி மோசமானவர் இல்ல. கனக்கப்பேர அனுப்பி இருக்கார். பொய் சொல்ற பழக்கமெல்லாம் அவர்ட்ட இல்ல. நாமளும் எத்தன காலம் தான் இப்பிடி கஸ்டப்படுற? வீட்டில ரெண்டு குமருகள். அடுத்தவளும் இப்பவோ எப்பவோ எண்டு இருக்காள்.”

ஒருவாறு மனைவியை இணங்கவைத்தா யிற்று. ஆசையோடு வளர்த்த ஆறு மாடுகளில் மூன்று விலையாகியது. மனைவியின் கழுத்திலிருந்த ஒரே தங்கச் சங்கிலியும், இரண்டாவது மகளின் தோடும் அடவுக்குப் போனது. முகவருடன் இரண்டு முறை கொழும் புக்குப் போனதில் இருப்பு சிறிது குறைந்தது. இரண்டு முறை மெடிக்கல் செய்த படியால்த் தான் இப்படி ஆகிவிட்டதாக முகவர் கூறினார். என்ன செய்வது? சந்திரன் யோசித்தான். மனைவியின் ஆலோசனைப்படி வட்டிக்குப் பணம் தரும் பார்வதி அக்காவிடம் இருபத்தி ஐயாயிரம் வாங்கி ஆகிவிட்டது. ஆனால் ஒன்றுக்கு ஒன்று வட்டி இருபத்தி ஐந்திற்கு இருபத்தி ஐந்து வட்டி, மொத்தம் ஐம்பதாயிரம் ரூபாய் திருப்பித் தரவேண்டும் என்ற ஒப்பந்தமும் எழுதியாகிவிட்டது. வெளிநாடு செல்ல என்றால் வட்டிக்காரர்கள் தயங்காமல்த் தருவார்கள்.

தன் கடைசி மகன் தன்னை வழி அனுப்பும் போது “அப்பா வரக்குள்ள எனக்கு சைக்கிளும், குடையும், சொக்காவும் வாங்கி வா...” என்று கூறிய வார்த்தைகள் நினைவில் வருடிய போது புதிதாக சப்பாத்து அணிந்ததால் கால்கள் இரண்டும் விறைத்து வீங்கியதைப் போல் உணர்ந்து சற்று நேரம் சப்பாத்துக்களை கழற்ற எண்ணி குனிந்த போது ஒரு அறிவித்தல் விடுக்கப்பட்டது. “நாம் இப்போது கட்டாரை வந்தடைந்து விட்டோம் எல்லோரும் இருக்கைப் பட்டிகளை அணிந்துகொள்ளுங்கள்.”

புதிய தேசம் புதிய முகங்கள் புரியாத பாசை. சற்றே குழப்பம். போகப் போக சரியாகிவிடும் சமாதானம் கூறினான். முன்னால் செல்பவர் களைப் பார்த்து ஒருவாறு சுதாகரித்துக்கொண் டான். ஒருமாதம் ஒருவாறு வேதனையோடு ஓடிவிட்டது. முகவர் கூறியபடி அங்கு வேலை தரப்படவில்லை. மேசனுக்கு உதவியாளாக வேலை. முகவருக்குத் தெரியப்படுத்திய போது ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும். போகப் போக வேறு வேலைக்கு மாற்றுவார்கள் என்றார்.

சம்பள நாள் வந்தது. இந்த மாதம் எப்படியாவது பார்வதி அக்காவின் பணத்தில் அரைவாசியையாவது அடைத்து விட வேண்டும் என்று எண்ணியவாறு நின்றான். "சந்திரன்" பெயர் கூப்பிடப்பட்டது. எழுநூறுறியால் வழங் கப்பட்டது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தடுமாறி நின்றான். பாசைப் பிரச்சனை. பதறு கிறான். அரைகுறை பாசை தெரிந்த ஒருவர் உதவுகிறார். பதில், மாதச் சம்பளம் 900 றியால். சாப்பாட்டுக்கு 200 போக மிகுதி 700 என்று பதில் கிடைக்க முகவருக்கு தொடர்பை ஏற்படுத்த முயன்று தோல்வியுற்றான். முகவரின் தொலைபேசி நிறுத்தப்பட்டுள்ளது என்று பதில் வர மனைவிக்கு தொடர்பு எடுத்து முகவர் பற்றிக் கேட்ட போது அவர் இப்போது அந்தப்பக்கம் வருவதே இல்லை என்று கூறி பார்வதி அக்காவின் தாண்டவத்தையும் கூறி வைத்தாள்.

இரண்டாவது மாதமும் வந்தது. இம்முறை மேலதிகமாக 100 றியால் கூட்டி இருப்பதாக எண்ணூறு றியால் கொடுத்தார்கள். சிறிது மகிழ்ச்சி. தனது மனைவியிடம் கதைக்க நினைத்து தொலைபேசி எடுத்த போது, மறுபுறத் திலிருந்து அழைப்பு வர பார்த்தான் தனது மனைவி எடுக்கிறாள்.

"என்ன ரதி? ஏன் கோல் எடுத்தாய்?"

"நம்மட மூன்றாவது வயதுக்கு வந்துட்டா. இப்ப என்ன செய்யுறது? நீங்களும் இல்ல", சற்று அமைதியாய் இருந்த சந்திரன் "சரி நான் காசு அனுப்புறன் பார்த்து செலவுகள குறைச்சு செய்" என்றான்.


இந்த மாதமும் வட்டிப் பணம் கொடுபடவில்லை. பார்வதி அக்காவிடம் ஒருவாறு பேசி மகளின் விடயத்தால் தப்பியாகிவிட்டது. அடுத்து இருபது நாட்கள் ஓடிவிட்டன. வீட்டிலிருந்து காதிலே ஈட்டி பாய்ந்தாற் போல ஒரு சேதி. தன்னை ஈன்றெடுத்த தாயார் இறந்து விட்டார் என்பதுதான் அது. வேதனையால் துடித்தான். அவனுடன் வேலை செய்தவர்கள் யாவரும் தமிழ்த் தெரியாதவர்கள். சந்திரன் பைத்தியம் பிடித்தவன் போலானான்.

மற்றவர்களும் இவனின் நிலை கண்டு கைப்பாசைகள் மூலம் தெரிந்து கொண்டு அனுதாபத்தை மட்டும் வழங்கினார்கள். சம்பளத்துக்கு இன்னும் பத்து நாட்கள் உள்ளன. சென்ற மாதச் சம்பளப் பணமும் மகளின் சடங்கிற்கு செலவாகிவிட்டது. மீதமாயிருந்த பசுமாடுகளிலொன்று விலையாகி தாயின் இறுதிச் சடங்கிற்கு செலவானது. வீட்டிற்கு அழைப்பை எடுத்து பேசுவோம் என்று எடுக்கும் போதெல்லாம் கவலையான கதைகளையும் கஸ்டங்களையுமே கேட்பது வாடிக்கையாகிப் போனது.

வெளிநாட்டிற்கு வராமல் அங்கேயே இருந்திருந்தால் மாடுகளும் இருந்திருக்கும், கடனும் வந்திருக்காது என்று கூறிய மனைவி, அடுத்த முதலாம் மாதம், கடைசி மகனை பாடசாலைக்குச் சேர்க்க வேண்டும். அதற்கு மொரு செலவு இருக்கிறது என்று கூறி வைத்தாள்.

ஒருவாறு பார்வதி அக்காவின் கடனில் அரைவாசி கட்டியாகிவிட்டது. ஆனால் பகுதி பகுதியாகக் கட்டுவதால் வட்டிக்கு வட்டி என்று புதிய கணக்கினைப் போட்டு மொத்தமாக ஒரே தடவையில்க் கட்டினால் மட்டுமே உண்டு. அரைவாசியைக் கட்டினால் மேலதிக வட்டி. இது பார்வதி அக்காவின் விஞ்ஞாபனம். எதுவுமே பேச முடியாத நிலை. வேதனை, வலி, கஸ்டத்தை யாரிடம் கூறுவது?

"வெளிநாட்டில புருசன் இருக்கான். நல்லா உழைக்கிறான். இங்க இவள் இல்ல இல்ல எண்டு நாடகம் நடிக்கிறாள்" இது ஊரவரின் பொறாமை கலந்த வாழ்த்து. அவர்



இங்கிருந்து கூலி வேலை செய்த போது எவ்வளவு நிம்மதியாய் வாழ்ந்தம். இப்ப எத்தனை வேதனை? எத்தன பிரச்சனை கடவுளே முருகா நீ தான் அப்பா ஒருவழி காட்டணும். கண்களைத் துடைத்தபடி பெருமூச்சு விட்டாள்.

"என்ன புள்ள புருசன் காசு அனுப்பிட்டானா? இனி என்ன உனக்கு? டீ.வி, போன் எல்லாம் வெளிநாட்டில இருந்து வரும். உங்கபாடு பரவால்ல. " இது வழியால் சென்ற பழனி அண்ணனின் குத்தல் வசனம்.

கொதிக்கும் வெயிலில் சீமேந்து கலவையைப் போட்டு வண்டியில் வைத்துத் தள்ளிச்சென்றான் சந்திரன். (கட்டாரின் வெயில் அங்கு சென்று வந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்).

"சூரா.. சூரா.." என்றான் அந்த போர்மன். இவனுக்குப் புரியவில்லை.

"என்ன சேர்?" என்று சைகையால்க் கேட்டான்.

"குவிக்...குவிக்..." என்றான்.

ஓரளவு விளங்கி சந்திரன் ஓகோ, சூரா என்றால் "கெதியாக" என்பது போல என விளங்கிக் கொண்டு மேலும் ஐந்து பைக்கட் சீமேந்தைக் கலப்பதற்குத் தயாராகினான். புரியாத பாசை பேசும் அவனின் எஜமானர்கள் கொழுத்தும் வெயிலிலும் அவனை சிறிதும் இரக்கமின்றி வாட்டி எடுத்தனர்.

என்னதான் வேலையாக இருந்தாலும் அவனது நினைவெல்லாம் தன்வீடு, மனைவி, மக்கள் என்றே சுற்றியது. என்ன நாடு இது? இதைவிட எமது நாடு எவ்வளவோ நல்லதே. இனிமேல் வெளிநாட்டு ஆசையே வேண்டாம். எமது நாட்டிலே எவ்வளவோ தொழில் இருக்க இங்கு வருவது கூடாது. கைத்தொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்று எவ்வளவோ தொழில் இருக்க நான் இங்கு வந்திருக்கக்கூடாது. அப்படியே வருவதானாலும் கல்வி கற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் ஒரு தொழிலைக் கற்றிருக்க வேண்டும் என்று அன்று கல்வி கற்காமல் விட்ட தவறை இன்று உணர்ந்தவனாக வண்டில் தள்ளி காய்ச்சிப் போன தனது கைகளைப் பார்த்த வண்ணம் தனது பன்னிரெண்டு மணி நேர வேலையை முடித்து மாலை 06 மணிக்கு அவனது அறைக்குச் சென்று குளிர்ப்பதற்காக ஒரே ஒரு குழாய் பூட்டப்பட்ட குளியலறையில் வரிசையில் நிற்கும் மற்றவர்களுடன் தானும் சேர்ந்து கொண்டான்.

**றிங்...** றிங்... எனத்தன் கைபேசி ரீங்காரமிடக் கலாபூஷணம் காத்தமுத்து அண்ணாவியார் அதைத் தூக்கித் தன்காதிலே அணைத்தபடி "ஓம்...ஓம்...அப்பா தான் பேசிறன் புள்ள..சொல்லு புள்ள.."

"அப்பா..நானும் அவரும் வெளிக்கிட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிறம். எப்படியும் இண்டைக்கு மத்தியானம் பன்ரெண்டரை மணிக்கு வீட்டுக்கு வந்திடுவம் அம்மாட்டச் சொல்லிப் பகல் சாப்பாடு சமைக்கச் சொல்லுங்கப்பா"

" நல்லது மகளே .... கார்லதானே வர்றீங்க" "ஓமப்பா... ஓம் ...மறக்காமச் சொல் லுங்க" "சரி...சரி.. எண்ட பேத்தி எப்படியிருக்காள் "சரி அவளுக்கென்னப்பா...நல்லாச் சந்தோஷ மாய்ச் சிரித்துக் கொண்டே ஜொலியத்தான் இருக்காள் "கவனமாப் பார்த்து வாங்க புள்ள... அப்ப நான் வைக்கிறன் புள்ள..."

"பவளம்.....பவளம்...எங்கிருக்கிறா..? மகள் சொன்ன செய்தியைச் சொல்ல மனைவியை அழைத்தார் கலாபூஷணம் காத்தமுத்து அண்ணாவியார்..

"வாறன்...வாறன்.." என்றவாறே வந்த மனைவியைக் கண்ட அவர் " இந்தாப்பாரு ...புள்ளயும் புருஷனும் வாறாங்களாம். கார் வெளிக்கிட்டுத்தாம். மத்தியானச் சாப்பாட்டுக்கு ஒழுங்கு பண்ணு. நான் மார்க்கட்டுக்குப் போய், நல்ல மீனாப் பார்த்து அதோட கூட புள்ளக்கு புடிச்ச மரக்கறிகளையும் வாங்கித்து வாறன்." என மனைவியிடம் கூறிவிட்டு மார்க்கட்டை நோக்கி நடந்தார்.

மார்க்கட் கேற்றடியில் நாவற்பழம் விற்கும் சிறுவன் அவரைக் கண்டவுடன் "ஐயா...ஐயா..ஒரு சுண்டு நாவற்பழம் எடுங்கையா...எடுங்கையா..." எனக்கூறிக் கூவியபடியே நிழல் போல் அவரையே பின் தொடர்ந்தான்.

அவனது குரல் கம்மிக்கட்டி வரண்டு போன தொண்டையிலிருந்து வருவதை ஊகித்த கலாபூஷணம் ஒரு நிமிடம் அவ்விடத்தில் நின்று நிதானித்து அவனையே



வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

கனகாலமாய் எண்ணையையே காணாத தலைமயிர் பரட்டையாய்ச் செம்பாட்டு நிறமாகியிருந்தது. ஒட்டியுலர்ந்த கன்னங்கள், ஒடிசலாய்ச் சுள்ளி சுள்ளியாய்ச் சூம்பிப் போயிருந்த கை கால்கள், கசங்கிப் பழுப்பேறிப் போயிருந்த சேட்டும் நாலைந்து இடங்களில் கிழிந்து தைக்கப்பட்டிருந்த கால்சட்டையுமாய்க் கண்கள் மட்டும் சற்றுப் பெரியதாய் உயிர் பொலிவுடன் பளபளத்தன. இச்சாயல்கள் அனைத்தும் அவனையொரு பரம ஏழையெனப் பறைசாற்றிக்கொண்டிருந்தன. தன்னை ஆச்சரியத்தோடு நோட்டமிட்ட கலாபூஷணத்தைப் பார்த்து அவனும் மலங்க மலங்க முழித்தான்.

அவன் கையில் சற்று நீளமான ஒரு பனையோலைப்பை தொங்கிக்கொண்டிருந்தது. அதிலிருந்து தான் நாவற்பழத்தைச் சுண்டினால் மொண்டு அளந்தெடுத்து அவரிடம் நீட்டினான்.

"வேணாம் மனே.." அவரொரு ஹாட் பேசன். அது மட்டுமல்ல அந்தச் சூழ்நிலையில் நாவற்பழம் சுவைக்கும் ஆர்வமும் அவருக்கில்லை.

அவரது பதில் அவனுக்கு எதிர்பாரதொரு ஏமாற்றத்தைக் கொடுத்தது. சடுதியாய் அவரை விலத்திக் கொண்டு நடந்தவன் முன்னால் வந்துகொண்டிருந்த ஒரு பெண்ணிடம் மிகவும் தயை கூர்ந்து "நாவற்பழமம்மா ...வேணுமாம்மா..." என வினாவினான். அப்பெண்ணும் கூட அச்சிறுவனைச் சட்டை செய்ததாக தெரியவில்லை.

மேலும் அவ்வழியால் வருவோரும் போவோரும் கூட அச்சிறுவனிடம் நாவற்பழம் வாங்குவதாகத் தெரியவில்லை. ஆதலால் அப்பிஞ்சு நெஞ்சம் நொந்து வெந்து கனத்துத் துயருறலாயிற்று. கீறல்பட்டு ரத்தம் கசிந்தது.

"உலகமறியாப்பிள்ளை. பிரம்மாவின் படைப்பில் இத்தனை இரகசியமா....? இயற்கையின் இரகசியம் மறைச் சக்தியின் விதியா....விளையாட்டா விபரீதமா..? இதை என்ன என்றுதான் கூறுவது..? மானிடர்க்குப் புரியாத புதிர்கள் ....பெற்றோரை நச்சரித்து மிட்டாய், சொக்கலேற், ஐஸ்கிறீம், பூந்தி, அல்வா, தேன்குழல், தொதல், என்றெல்லாம் பலப்பல தினுசுகளில் இனிப்புக்களை வாங்கி ரசித்துப் புசித்துச் சுவைக்கும் இப்பால்ய பருவத்தில் இப்படிப் பொறுப்பாக..... வீட்டில் என்ன தொல்லையோ, தொந்தரவோ... இப்பிள்ளை பள்ளி சென்று படிக்கும் பிஞ்சு வயதிலே சிட்டுக் குருவி தன் தலையிலே பனம்பழம் சுமக்கும் சாகசமா இது..? இவனொரு தகப்பன் தின்னியா..? இல்ல...அப்பன் பொறுப்பில்லாமல் கோயில் மாடாய் ஊர் மேயும் பேர் வழியா..? குடிகாரனாகக் கூட இருக்கலாம். அல்லது இவனைப் பெற்று விட்டுத் தலைமறைவாகிய தறுதலையாகவும் கூட இருக்கலாம்" இவ்வாறு கலாபூஷணத்தாரின் மனதில் படர்ந்த பச்சாதாப உணர்வு மடை திறந்த வெள்ளமெனப் பெருகிட தான் வாங்க வந்த சாமான்களையெல்லாம் வாங்கிக் கொண்டார்.

அனைத்தையும் வாங்கிக்கொண்டவர் இரு கைகளிலும் அவற்றைக்கொண்ட சொப்பிங் பைகளைக் காவியபடி மறுகேற்றால் வெளியே வந்தார்.

அவ்வேளையிலும் கூட அப்பழம் விற்கும் சிறுவன் அக்கேற்றடியிலும் தனது வியாபாரத்தைச் செய்து கொண்டிருந்தான்.

அச்சிறுமைப்பட்ட சிறுவனிடம் ஒரு சுண்டு நாவற்பழமாவது வாங்கலாமா என எண்ணிய கலாபூஷணம்

"தம்பி ..." என அழைத்த போது வேறொருவர் தயக்கமேதுமின்றி எவ்வித விலை விசாரிப்புமின்றி ஐந்து சுண்டு நாவற்பழங்கள் வாங்கினார். இக்காட்சியைக் கண்டபோது ஏசி மண்டபத்துள்ளே புகுந்தது போல கலாபூஷணம் அவர்களின் மனம் குளிர்ந்தது. பின் சூழலின் கவனக் கலைப்பான்களிலிருந்து விடுபட்டு மிகவும் லேசான அவர் தன் கைப்பேசியிலே நேரத்தைச் சரி பார்த்தார். நேரம் பத்து மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. மேலும் தாமதிக்காமல் வீட்டை நோக்கி விறு விறு என்று நடந்தார்.

அவர் அச்சிறுவனை அன்று பிற்பகலில் தான் குடியிருக்கும் வீதியில் மீண்டும் சந்திக்க நேரிட்டது.

அந்நேரம் அவன் கைகளில் விளையாட்டுப் பம்பரங்கள் வைத்திருந்தான்.

அவரைக் கண்ணுற்ற சிறுவன் அவரை நெருங்கி வந்து பம்பரம் வாங்கல்லையா ஐயா..? என்றான்.

அவர் ஒரு இருபது ரூபாத்தாளைக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவன் மூன்று பம்பரங்களை எடுத்துக் கொடுத்து விட்டு , இரண்டு ரூபாயை மீதியாய் அவரிடம் கொடுத்தான். அவரோ அவரது வீட்டாரோ பம்பரம் கிறுக்கி விளையாடும் வயதில் இல்லை. ஆனாலுமென்ன ..? சிறுவனை அவனது வறுமையெனும் அநர்த்தத்திலிருந்து ஓர் அங்குலமேனும் கைதூக்கி விடும் தந்திரோபாயமாகவே அப்படிச் செய்தார். கலாபூஷணம் அச்சிறுவனைக் குறுக்கு விசாரணை செய்தார்.

"தம்பி எந்த ஊர்..?

"திராய்மடு ஐயா..

"எங்கே படிக்கிறாய்..?

"பாரதி வித்தியாலயத்தில் ஐயா.."

"எத்தனையாம் தரம்..?

"ஏழாம் தரம் ஐயா.."

"படிப்பிலே கெட்டிக்காரனோ..?

மனதுக்குள்ளே அழுது கொண்டிருக்கும் அச்சிறுவன் மனம்விட்டுச் சிரித்தான். அக்கள்ளங்கபடமற்ற வெள்ளைச் சிரிப்பிலே அவனுக்கு பிறப்பிலிருந்தே தொடரும் அநர்த்தங்களினால் உண்டான ஆறாத ரணங்கள் மருந்து தேடுவது அவருக்குப் புரிய நெடுநேரம் செல்லவில்லை.

"இந்த வயதில் படிப்பும், வியாபாரமுமாய் திரிகிறீரே தம்பி.. உனக்கு அம்மா.. அப்பா.."

அவனது கண்கள் சிவந்து கலங்கின. அப்பிள்ளையின் கள்ளமில்லா வெள்ளை வதனம் மழைமேகமாய்க் கறுத்தது. உதடுகள் விம்மி விம்மி துடித்தன. அவன்பட்ட இனம் புரியாததொரு அவஸ்தையைக் கண்ணுற்ற கலாபூஷணம் அவனது ஆழ் மனதிலே உறங்கிக்கொண்டிருந்த அநர்த்தங்களைப் பேரவலங்களை நினைக்கவைத்துவிட்டோமோ எனத்தனக்குள்ளே ஒருவித குற்றவுணர்வுக் குள்ளானவராய் அவ்விடத்திலிருந்து சற்றுத் தள்ளி ஓரமாய் ஒதுங்கினார்.

ஆனால் அச்சிறுவன் தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டவனாய் அவரை நெருங்கி வந்து "அம்மா நான் வயிற்றில் இருக்கும் போது சுனாமிப் பேரலையினால் அடித்துச் செல்லப்பட்டு அதிஷ்டவசமாய்க் காப்பாற்றப்பட்டு பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாராம். அங்கே அவர் அவருடைய உயிருக்காக போராடிக் கொண்டே எனக்கு உயிர் கொடுத்து என்னைப் பெற்றிருக் கிறார். அம்மா என்னைப் பெற்றுவிட்ட மறு நிமிடமே அங்கேயே இறந்து விட்டாராம் ஐயா.." எனக் கூறித் தேம்பித் தேம்பி அழுது புலம்பினான்.

அவனை "அழாதே தம்பி..." என்று ஆறுதல் கூறித் தேற்றினார் கலாபூஷணம் .

அழுதழுது வீங்கிய கண்களும், சிந்திய மூக்குமாய் விகாரமாகக் காட்சியளித்த அச்சிறுவன் கண்களைத் தன்னிரு கைகளாலும் துடைத்துக் கொண்டவனாய் ஏதேதோ சொல்ல முனைந்தான்.

"ஐயா.." என்று மீண்டும் அலறத் தொடங்கிய அச்சிறுவன் "என்னுடைய ஒரு அண்ணன் பாடசாலை விட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது ஆள் அடையாளமற்ற ஆயுதந்தாங்கியவர்களால் வெள்ளை வேனில் கடத்திச் செல்லப்பட்டான். இன்று வரை அண்ணனுக்கும் என்ன நடந்ததென்று எங்களுக்கு தெரியாதையா..?" என்று கூறி விட்டு மீண்டும் ஏங்கி ..ஏங்கி ..அழுதான்.

மீண்டும் "ஐயா.." என விழித்தவன் "என்னுடைய அப்பா கடைசிக்கட்டப் போரின் போது எங்கிருந்தோ வீசப்பட்ட செல் விழுந்து எங்கள் கண் முன்னாலேயே துடிதுடித்துப் பலியானார்." என விக்கி விக்கி கூறினான்.

"இப்ப திராய்மடு சுனாமி வீட்டுத் திட்ட வீட்டில் தான் வசிக்கிறம். சின்னம்மாதான் எங்கள பார்க்கிறவ. கூடவே O/L பாஸ் பண்ணிய இன்னுமொரு அண்ணனும் , A/L பாஸ் பண்ணின ஒரு அக்காவும் வேலை வெட்டியொன்றும் இல்லாமல் இருக்கி றாங்கய்யா.."

இவ்வாறு சிறுவனுக்கேற்பட்ட பயங்கர அனர்த்தங்களையெல்லாம் 'அ' முதல் . ̇.

வரை விலாவாரியாக கேட்டறிந்த கலாபூஷணம் மறுகணம் பேச்சு மூச்சற்றதொரு அனர்த்தத்துக் குள்ளாகியவராய்த் திக்குமுக்காடினார்.

மூன்று வயிறுகளுக்கு தீனி போட வேண்டும். அவனது படிப்புச் செலவு வேற. அற்பராசன் அவன் இவ்வளவுக்கும் மாடாய் மாய்ந்து ஓடாய்த் தேய்ந்து சம்பாதிக்க முடியுமா..?

இவ்வாறெல்லாம் சிந்தித்துத் தெளிந்த கலாபூஷணம் தன் அனுபவ அறிவையும், படிப்பறிவையும் ஒருங்கு சேர்த்து உள்ளீடாகக் கொண்டு தனது மனதுக்குள்ளேயே ஓர் அனர்த்தமுகாமைத்துவத் திட்டமொன்றை அதிரடியாக வடிவமைத்து வெளியீடாக பெற்றுக்கொண்டார்.

அத்திட்டத்தின் படி அச்சிறுவனின் அண்ணனை ஒரு அரசுசாரா அமையமொன்றில் சுப்பவைசராகவும், அவனது அக்காவைப் பெண்கள் அபிவிருத்திப் பணியகத்தில் ஒரு தலைமைத்துவ வதிவிடப் பயிற்சியாளராகவும் இணைத்துவிட்டார். அத்தோடு அவனது அண்ணனை காணாமல் போனோரைத் தேடும் ஆணைக் குழுவுக்கு முறையிட்டுக் கண்டு பிடித்துத் தருவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

இதற்கெல்லாம் மேலாக அச்சிறுவனை அவரது வீட்டாரின் அனுசரணையோடும் அனுமதியோடும் அவரது வீட்டிலேயே தங்க வைத்துப் பாடசாலை சென்றுவர ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

இவ்வேற்பாடுகள் அனர்த்தங்களினால் அனாதைகளாகியிருந்த அம்மூவரின் உலையாகக் கொதித்த வயிறுகளில் பாலோடு தேன் கலந்து வார்ப்பது போலிருந்தது.

முற்றும்

# மனிதன் என்றால் மனசாட்சி ஏற்குமா

அழகென்று ஆராதிக்கும் மேனி
அது வற்றி தோல் சுருங்க
அழகு குன்றும்
சிரசுக்கு மகுடம் சூடிய கருமுடியும்
வெள்ளுப்பாகும் தலை வழுக்கையாகும்

புன்னகை சிந்திய முத்துப்புற்கள்
பலமிழந்து உதிர்ந்து போகும்
வாய் பொக்கையாகும்
வார்த்தைகள் மழலையாகும்
வீறு கொண்ட நடை தளர
ஊன்று கோல் உதவிநாடும்

அண்டி வாழ்ந்த உறவுகள் அகன்று போகும்
இயலாமை வந்து வாட்டும் வாழ்ந்தென்ன பயன்
என்று
மனம் சலிக்கும்
வாழ்க்கையின் முடிவு நாளை
இவை உணர்த்தும்



இயற்கை போதிக்கும் பல போதனைகள்
உணரா கனவுலகில் வாழும் மனிதன்
மனம் படர வழிவிடுவான்
அழுக்குகளை தன்னுள் சேர்ப்பான்
உத்தரிப்பு வந்த போது
மரணத்தை வலிந்தழைப்பான்

இதுதான் வாழ்க்கை என்றால்
அதற்குள் பல தேடலுண்டு
வாழ்ந்தோம் என்றார் மனிதர்
எதனை வாழ்வென்றுரைக்கின்றார்
மனிதன் என்கிறார் தன்னை
மனச்சாட்சி ஏற்குமா அதனை

**மு.வாமதேவன்**
புதுநகர்

## கவிஞர் கலாபூஷணம் பொன்னுச்சாமி தவநாயகம்

### நீல மயிலே!

நீண்ட தோகை விரித்தாடும்
நீல மயிலே வேலனையே
தூக்கிச் சுமந்து வருவாயா
துதிக்கக் காட்சி தருவாயா?

### சேவல்களே!

காவற்காரன் போல் சாமம்
காட்டி மக்கள் கண்விழிக்கக்
கூவும் வர்ணச் சேவல்களே
குடிகள் மெச்சுங் குரல்கொண்டாய்!

### வெள்ளைக் கொக்கே

அக்கம் பக்கம் பாராது
அளவு மீனைக் குறிபார்க்கும்
கொக்கே உனது கொள்கையினைக்
கொள்ளும் மனிதன் சாதிப்பான்.

### காக்கைகளே!

'காகா' வென்றே வெறுத்துவிடக்
கத்திக் குழப்புங் காக்கைகளே
'ஆகா' வென்ன ஏமாற்றம்
அரசிய லாள ரானீரா?

### தாராவே!

அன்னம் போலத் தாராவே
அசைந்து நடப்பாய்ப் பெண்களிலே
உன்னைப் போல நடப்பாரும்
உண்டே நானும் பாடிடுவேன்!

### நாயாரே!

நனறிக் குனது இனமென்று
நாடும் மக்கள் நன்கறிவர்
ஒன்றித் திழிவின் நாயென்று
ஒதுக்க நினைப்போர் கீழோரே!



### தென்றல் காற்றே!

தேகந் தொட்டுச் சிலிர்த்தோடும்
தென்றல் காற்றே காதலரின்
தாகங் கூறுந் தூதனெனத்
தகமைப் புலவர் பாடுகிறார்.

### மண மலரே!

காலை விரியும் மணமலரே
கானம் பாடும் கருவண்டுன்
கோலங் கண்டு குதித்தாடும்
கூடி நீயுங் குனிந்தாடு.

### மழை முகிலே!

மாரி கால மழை முகிலே
மண்ணைக் காணும் மகிழ்ச்சியிலே
தாரையாக நீர் சொரிவாய்த்
தரையுங் கொண்ட தவிப்பாற்றும்.

### வட்ட நிலவே!

வட்ட நிலவே வானத்தின்
வடிவுக் கரசி வதனத்தின்
கட்டு மழகுக் குனைச்சுட்டிக்
காட்டிக் கவிதை பாடுகிறேன்.

# முத்தமிழ் விழா
# திறந்த மட்டப் போட்டி முடிவுகள்

**நாடகம்**

1ம் இடம் - அரங்க நீரூற்று, மட்டக்களப்பு.
2ம் இடம் - ஹரி சிறுவர் இல்லம், கல்லடி, மட்டக்களப்பு.
3ம் இடம் - மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி

**கரகம்**

1ம் இடம் - மட் / அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம்
2ம் இடம் - திமிலைதீவு வடிவேல் மகேந்திரன் குழுவினர்,
கிருஷ்ணன் கோயிலடி, திமிலைதீவு, மட்டக்களப்பு.


**கவிதை**

1ம் இடம் - கவிஞர் கலாபூஷணம் பொன்னுச்சாமி தவநாயகம்,
லயன்ஸ் 7ம் குறுக்கு, 515/150, திருமலை வீதி, மட்டக்களப்பு.
2ம் இடம் - திருமதி.விஜயபிறௌபி ஹேமானந்தன்,
39/10, கணக்கப்பிள்ளை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு.
3ம் இடம் - தி.சிவலிங்கம், 24/19, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.

**சிறுகதை**

1ம் இடம் - வேலுப்பிள்ளை புவனேஸ்வரன்
இல.01, சூரியா வீதி, மட்டக்களப்பு.
2ம் இடம் - மு.மோகன்ராஜ், தரிசணம் விழிப்புலனற்றோர் பாடசாலை,
42/32, சுவாமி நடராஜானந்தா வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு
# கிராமியச் சொற்கள்



**திருமதி. சாழினி மதனகுமார்,** கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்

| | கிராமியச் சொற்கள் | அவை ஒத்த சொற்கள் | சொல் தொடர்புபட்ட வசனம் |
|---|---|---|---|
| 01 | கருக்கல் | மாலைபட்டநேரம், அந்திப்பொழுது | கருக்கல் பட்ட நேரத்திலே எங்க போற? |
| 02 | வெள்ளாப்பு | விடியற்சாமம், அதிகாலை, வைகறை | விவசாயி வெள்ளாப்பு நேரத்தில வயலுக்குச் போறது வழக்கம். |
| 03 | மூசாப்பு | மழைக்குணம், மந்தாரம் | வானம் மூசாப்பா இருக்கு. மழ வரும். |
| 04 | ராவு | இரவு | இந்த ராவுல எங்க போற? |
| 05 | வெட்டாப்பு | வெளித்தல் | மழ பெய்யுது. வெட்டாப்பு விழுந்தா வயல வெட்டலாம். |
| 06 | ஒல்லி | மெலிவான, சுள்ளி | என்ன புள்ள இப்பிடி ஒல்லியா இருக்கா? |
| 07 | தொக்கை | பருத்த | தொக்கையா இருந்தால் பொல்லாத வருத்தங்கள்தான் வரும். |
| 08 | ஒசில் | வடிவில்லாத, அழகில்லாத | இந்த உடுப்பு உனக்கு ஒசிலாயிருக்கு. |
| 09 | கந்துமுறி | நெல் ஒன்றுடன் ஒன்று இணைந்து கிடப்பது. | வயலுக்குள்ள விளைந்திருக்கிற கந்து முறிகளை உழக்கி எடு மனே. |
| 10 | வைரப்பொலி | நல்ல நெல் | நெல்ல நல்லபடி தூசி இல்லாம தூற்றி எடுபுள்ள. |
| 11 | கணக்கன் | மரக்கால், பொய் சொல்லுபவன் | நெல்ல கணக்கனால் அளந்து கொடு. |
| 12 | குஞ்சுவாயன் | அரைக்கும் பாத்திரம் | நெல் அரிசிகளை குஞ்சுவாயன்ல போட்டு பதப்படுத்து. |
| 13 | வட்டை | வயல் செய்யும் காணி | வட்டையில மாடுகள் பயிரை நாசம் செய்யுது துரத்து புள்ள. |
| 14 | வரவை | நிலப்பரப்பு | இந்தா இருக்கிற வரவையில நீர தேக்கு மனே. |
| 15 | கீர்த்து | பல வரவைகளின் தொகுதி | இந்தமுற எத்தன கீர்த்து விதச்சிருக்கா? |
| 16 | வக்கடை | நீர்பாய வரம்பில் வெட்டப்படுவது | வயலில் தேங்கி நிற்கிற நீரை வக்கடையால வெளிய விடு. |
| 17 | முசுப்பாத்தி | பகிடி, வேடிக்கை, மகிழ்ச்சியைப் பிரதிபலித்தல் | எப்பவும் முசுப்பாத்திதான் இந்தக் கிளையலுக்கு. |
| 18 | மாய்மாலம் | நடிப்பு, புலூடா, பாசாங்கு | இவன் என்ன இப்படி புலூடாக்காரனா இருக்கான்? |

| | | | |
|---|---|---|---|
| 19 | பசப்பு | அலட்டுதல் | சும்மா தேவல்லாம பசப்பாத. |
| 20 | புலுடா் | புழுகு | நீ புலுடாக் கதை சொல்லாத. |
| 21 | கும்மாளம் | சந்தோஷமாக இருத்தல் | பாரன் கும்மாளம் கொட்டுறத. |
| 22 | கூத்தடித்தல் | விரும்பத்தகாத கொண்டாட்டம் | இந்தக் கூத்தடிக்க நான் வரல்ல |
| 23 | வளவள | அலட்டுதல் | எப்பவும் வளவள எண்டு இருக்காத. |
| 24 | அசட்டை | கவனமின்மை, பொருட்படுத்தாமை | அவள்ற அசட்டையால தான் பரீட்சையில சித்தியடையல்ல. |
| 25 | வால் பிடித்தல் | பின்னால் திரிதல் | என்ன விஷயமோ தெரியல்ல வால் பிடிச்சுத் திரியிறான். |
| 26 | கொம்புதல் | சத்தமிட்டு ஏசுதல் | என்ன கொம்பு கொம்புறான் பாரு. |
| 27 | மறுகா | பிறகு | மறுகா நான் போயிட்டு வாறன் |
| 28 | வெட்ட | வெளியே | நான் வெட்டைக்கு இறங்கப் போறன். |
| 29 | அங்கால | அந்தப்பக்கம் | அங்கால போனா நானும் அவனக் கேட்டதாச் சொல்லுங்க. |
| 30 | எங்கால | எந்தப்பக்கம் | என்ன மனே எங்கால போற நீ |
| 31 | அருட்டானியம் | கரைச்சல், தொல்லை | மற்றவனுக்கு ஏன் அருட்டானியம் கொடுக்கிற? |
| 32 | கக்கிசம் | கஸ்டம், துன்பம் | பணம் இல்லாட்டி எல்லாருக்கும் கக்கிசம் தான். |
| 33 | ஒத்துவாரம் | அலைக்கழிதல் | கந்தசாமிட வீட்ட கண்டு பிடிக்கிற ஒத்துவாரமாத்தான் இருக்கு. |
| 34 | கலத்தில் போடுதல் | பாத்திரத்தில் போடுதல் (மட்டக்களப்பு திருமணச்சடங்கின் போது இடம்பெறுவது) | கலத்தில போட்டாச்சா? |
| 35 | முறால் | திமிர் | அவளுக்கு சரியான முறால். |
| 36 | முகச்சாங்கம் | ஒருவரை ஒத்த சாயல் | சரியா உன்ட அப்பாட முகச்சாங்கமாத்தான் இருக்கா. |
| 37 | நமட்டு | கள்ளச்சிரிப்பு | என்ன ஒருமாதிரி நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறா? |
| 38 | குளறுதல் | அழுகை | வலியால குளறுறாள் கொஞ்சம் பாத்துக்கொள்ளு. |
| 39 | பறவாதி/ பறக்கா வெட்டி | அவால்தனம் உள்ளவர், ஆசை | எவ்வளவுதான் சாப்பாட்டக் கொடுத்தாலும் பறவாதியாத்தான் இருக்கான். |
| 40 | அரைவயிறன் | போதியளவு சாப்பிடாதவன் | கையில காசு இல்லாட்டி அரைவயிறுக்குத்தான் சாப்பிடோணும். |
| 41 | இறுக்கி | பலமாக, அமர்த்தி | கயிற இறுக்கிக் கட்டு. |
| 42 | நவிச்சி, நசிச்சி | அமர்த்தி, அழுத்தி | நல்லா நசிச்சாத்தான் சாதிக்கா மணக்கும். |
| 43 | ஆணம் | சொதி | சோத்துக்கு கொஞ்சம் ஆணத்த ஊத்தன் புள்ள. |

| | | | |
|---|---|---|---|
| 44 | மசக்கை | தலைச்சுற்று (கர்ப்ப காலத்தில் ஏற்படும் மயக்கம்) | கர்ப்ப காலத்தில மசக்கை ஏற்படுவது வழக்கம் தானே |
| 45 | செப்பு | பெட்டி, பேழை, பாத்திரம் | அந்தா இருக்கிற செப்பில வெத்திலய வைச்சுக் கொடு. |
| 46 | கொத்துக் கோப்பை | தேநீர் குடிப்பதற்கு பாவிக்கப்படும் பாத்திரம் | ஆச்சிக்கு அந்தா இருக்கிற கொத்துக் கோப்பையில தேநீரைக் கொடு. |
| 47 | இட்டுமம் | அகந்தை, இறுமாப்பு | ஒரு கலைஞனுக்கு இப்படி இட்டுமம் இருக்கக் கூடாது. |
| 48 | சுணை கெட்ட | ரோசம் இல்லாத | காசை வாங்கினா தாறதுதானே சுணை கெட்டவன். |
| 49 | நம்மட | நமது | நம்மட வீடு பக்கத்திலதான் இருக்கு |
| 50 | மனே | மகனே | நான் போயிட்டு வாறன் மனே |
| 51 | ஊட்ட | வீட்டிற்கு | உங்கட ஊட்ட நாய் நிற்குதா புள்ள. |
| 52 | கொட்டான் | கட்டையான, உயரம் குறைந்தவன் | என்ன இவன் கொட்டானா இருக்கான். |
| 53 | சோக்கா இருத்தல் | நல்லா இருத்தல், சுவையாக இருத்தல் | இந்தச் சாப்பாடு நல்ல சோக்கா இருக்கு. |
| 54 | நசுவுணி | அமுசடக்கி | நசுவுணியா இருக்கிறவர்தான் விஷயகாரர் |
| 55 | இளக்காரம் | கீழ்தரமாக நினைத்தல் | என்ன நீ இளக்காரமா நினைச்சிட்டியா? |
| 56 | ஒள்ளுப்பம் | கொஞ்சம், சிறுக, குறைந்தளவு | ஒள்ளுப்பம் கடைக்கு போய்ட்டு வா புள்ள. |
| 57 | இழுபறி | ஒரு விடயத்திற்காக இரண்டு பேர் பிரச்சனைப்படுதல் | கொம்புமுறி விளையாட்டில் இருபக்கச்சார்பினரும் இழுபறிப்படுவது வழமையாகும். |
| 58 | ஏலா | முடியாது | என்னால மரத்தில ஏற ஏலாப்பா. |
| 59 | இடுக்கு | சிறு இடைவெளி | மரத்தின் இடுக்குக்குள்ள குருவிக் குஞ்சு இருக்கிறது மனே தெரியுதா? |
| 60 | நசி நசிப்பு | மெதுவாக, ஆறுதலாக | வேலய நசி நசிப்பா செய்தா இப்போதைக்கு முடியாது மனே |
| 61 | அசடுவழிதல் | நகைப்புக்குரிய ஏமாற்ற நிலை | அவன் அசடு வழிய நின்றான் |
| 62 | இளித்தல் | பண்பில்லாத முறையில் சிரித்து சமாளித்தல் | செய்யுறத செய்து போட்டு இளிக்காத |
| 63 | ஒய்யாரம் | வசதியாக | ஒய்யாரமாக இருக்கிற வடிவப்பாரன் |
| 64 | கொள்ள | நிரம்ப, அதிகாமான | அக்காவோட எனக்கு கொள்ள பிரியம் |
| 65 | கிறுகி | சுற்றல் | பான் பாஸ்டா கிறுகுதும் இல்ல |
| 66 | அட்டு | அழுக்கு, ஊத்தை | நோய், நொடி இல்லாம வாழோணும் எண்டா அட்டு இல்லாம இருக்கோணும் |



கலைஞர் கௌரவம்

பெயர் :- **பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு**

பிறந்த திகதி :- **1947**

துறை :- **ஆய்வு**

மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு அவர்கள் ஓர் பெண்ணியவாதியாவார். கொழும்புப் பல்கலைக் கழக பட்டதாரியான இவர், தனது பட்டப்பின்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், சமூகக் கற்கை நிறுவகம் நெதர்லாந்திலும் நிறைவு செய்துள்ளார். தொடர்ந்து 1992ம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகவிருந்து பின்னர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக 2013ம் ஆண்டு வரை பணியாற்றினார்.

பேராசிரியை சித்திரலேகா அவர்கள் கவிதை, கலை இலக்கிய விமர்சனம், மொழிபெயர்ப்புப் போன்ற துறைகளில் ஆர்வமுடையவர். இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அதில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், பாரதி பெண்கள், காலம் கருத்து நிலை, பெண் - அனுபவம், இலக்கியம், பெண்களின் நிலம் முதலியவை முக்கியமானவை. இவை தவிர சொல்லாத சேதிகள் - பெண்களின் கவிதைத் தொகுப்பு, உயிர்வெளி பெண்களின் காதல் கவிதைகள், கவிதைகள் பேசட்டும் ஆகிய கவிதைத் தொகுதிகளையும் பேரழிவுக்கு பெண்கள் முகங்கொடுத்தல் - தென்னிந்திய அனுபவங்களும், சவால்களும் என்ற நூலையும் பதிப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு சூரியா பெண்கள் ஆய்வு வட்டத்தின் இணைப்புக்குழு உறுப்பினராகப் பணிபுரியும் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்கள் மட்டக்களப்பின் புகழ்பெற்ற இலக்கிய விமர்சகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கலைஞர் கௌரவம்

பெயர் :- **திருமதி.கத்தறீன் வயலற் சந்திரசேகரம் (வயலற் சரோஜா)**

பிறந்த திகதி :- **1951.05.30**

துறை :- **பல்துறை**

ஓய்வு பெற்ற பிரதி அதிபரான இவர் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், ஆய்வுக் கட்டுரைகள் என்பன எழுதுவது மட்டுமல்லாது ஒப்பனையாளர், வில்லிசையாளர், அறிவிப்பாளர், விமர்சகர், பேச்சாளர், பாடகர் என ஒரு பன்முகத் திறமைகொண்டவர். தனது இளமைக்காலம் முதல் இலக்கிய உலகில் கொண்ட ஆர்வத்தால் வயலற் சரோஜா, ஔவை சரோஜா, இனியபாரதி, லக்சுமிகாந்தன், சாணாக்கியன் எனும் புனைபெயர்களைத் தனதாக்கி எழுதிவருபவர். 1983ம் ஆண்டு பல்கலைக்கழக மாணவியாக இருந்த போது தனது முதலாவது படைப்பான "எண் சோதிட ஜோதி" எனும் நூலை வெளியிட்டார். இதனையடுத்து 1984ம் ஆண்டு "வாழ்க்கையை வளமாக்க வழியென்ன" என்ற உளவள நூலினையும், 2013ம் ஆண்டு "உளி" என்ற கவிதைத் தொகுதியினையும், 2000ம் ஆண்டு "கவின்கவி" என்ற நூலினையும் வெளியிட்டார். இதில் முதற்குறிப்பிட்ட இரு நூல்களும் தேசிய பத்திரிகைகளான வீரகேசரி, மித்திரன், தினகரன் என்பவற்றில் பிரசுரிக்கப்பட்டன.

மேலும் சாணக்கியன் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், தொண்டன் சஞ்சிகையின் துணை ஆசிரியருமாக இருந்த இவர் ஓர் சிறந்த நாடக ஆசிரியருமாவார். இவரால் "திரௌபதிசபதம்", "உன்னை நீ அறிவாய்","சிலம்பொலி" (சிலப்பதிகாரம்), "தணியாத தாகம்", "மண்டோதரி புலம்பல்", "அம்பிகாவதி அமராவதி" போன்ற நாடகங்கள் இயற்றப்பட்டு மேடையேற்றப்பட்டன. இதில் "அம்பிகாவதி அமராவதி" நாடகம் அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரின் இலக்கியப் புலமைக்காக 2013ம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷணம்" விருதும் 2014ம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "வித்தகர்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் "கவிக்குயில்", "சகலகலாவல்லி" போன்ற பட்டங்களையும் தனதாக்கியுள்ளார்.

சிறந்த எழுத்தாளரான இவர் தினக்குரல், தினகரன், மித்திரன் போன்ற பத்திரிகைகளுக்கும், தொண்டன், கூர்மதி போன்ற சஞ்சிகைகளுக்கும் இன்றும் தனது ஆக்கங்களை எழுதிவருகின்றார்.

மேலும் 2002ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழ் எழுத்தாளர்களது புத்தகக் கண்காட்சிக்காக அழைக்கப்பட்டு அங்கு சென்றதுடன்' அங்குள்ள "தீபம்" தொலைக்காட்சிக்கு தனது நேர்காணலை வழங்கினார். அத்துடன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அறுபதாவது ஆண்டு விழாவில் ஒரு மணித்தியாலம் சுருதி இசைக் குழுவினருடன் இணைந்து பல்சுவைப் பாடல்களைப் பாடி அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



கலைஞர் கௌரவம்

பெயர் :- **திரு.பெரியதம்பி வினாசித்தம்பி ஜெயராஜா**

பிறந்த திகதி :- **1941.11.27**

துறை :- **சித்த வைத்தியம்**

ஓய்வு பெற்ற அதிபரான இவர் அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தை, தந்தையின் தந்தை என்போர் புகழ்பெற்ற வைத்தியர்களாவர். அந்த வகையில் இவர்களது தலைமுறையில் இவர் மூன்றாவது தலைமுறை வைத்தியராவார். இவ்வைத்தியத் துறையில் கொண்ட ஆர்வத்தால் தனது முப்பதாவது வயதிலிருந்து இவ்வைத்தியத் தினைச் செய்து வருகின்றார்.

இதுவரை ஏறக்குறைய 35000இற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு வைத்தியம் செய்துள்ளார். முறிவு, விஷம் தவிர்ந்த ஏனைய நோய்களுக்கு சர்வாங்க முறைப்படி வைத்தியம் செய்து வருகின்றார்.



கலைஞர் கௌரவம்

பெயர் :- **திரு.துவான் ஆரிப் சராவூடீன்**

பிறந்த திகதி :- **16.06.1937**


துறை :- **சித்த வைத்தியம்**

இவர் சித்த வைத்தியத்துறையில் மட்டுமல்லாது ஆயுள்வேத வைத்தியம், யுனானி வைத்தியம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றவர். பரம்பரையாக கடந்த 50 வருடங்களாக இவ்வைத்தியத்தினைச் செய்து வருகின்றார். இவரது தந்தையும் சிறந்த வைத்தியராவார். தனது ஆரம்பக் கல்வியை மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கற்கும் போதே இவ்வைத்தியத் துறையில் கொண்ட ஆர்வத்தால் தந்தையிடமிருந்த யுனானி வைத்தியம் தொடர்பான புத்தகங்கள், மணிமந்திர வைத்திய சேகரம் போன்ற பல வைத்தியம் தொடர்பான புத்தகங்களை படிப்பதில் ஆர்வம் காட்டினார். மேலும் திரு.இஸ்தோகு பிரான்சிஸ், கணேஷ முதலியார் போன்றோரிடமிருந்தும் வைத்தியம் தொடர்பான அறிவைப் பெற்றார்.

பொதுவாக அனைத்து நோய்களுக்கும் மருந்து செய்வதில் தேர்ச்சி பெற்றவர். விஷக்கடி, குன்மநோய், முறிவு, வாதம், ஒதம், மனநோய், கர்ப்ப சம்பந்தமான நோய்களுக்கு மருந்து செய்வதில் தேர்ச்சி பெற்றவர். இதுவரை அண்ணளவாக ஒரு இலட்சம் பேர்வரை இவரிடம் வைத்தியம் செய்துள்ளனர்.

"மித்திரன் வாரமலர்", "நவமணி" பத்திரிகைகளில் நீரிழிவு, அஸ்துமா, குன்ம நோய் தொடர்பான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

கலைஞர் கௌரவம்



பெயர் :- **திரு.சிதம்பரப்பிள்ளை நவராசா**
பிறந்த திகதி :- **28.07.1952**
துறை :- **கூத்து ஒப்பனைக் கலைஞர்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுவயதிலிருந்தே கூத்தின் மேல் கொண்ட ஆர்வத்தால் தனது பதினேழாவது வயதிலிருந்து,
01. இராமர் நாடகம்
02. பிரம்ம இராட்சதன் யுத்தம் ஆகிய இரு கூத்துக்களையும் ஆடியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 1980ம் ஆண்டு காலப்பகுதியில் ஒப்பனைக் கலையில் கொண்ட ஆர்வத்தால் கூத்து, நாடகங்களுக்கு ஒப்பனை செய்வதிலீடுபட்டு வருகின்றார். அதுமட்டுமன்றி கூத்து, நாடகங்களுக்கான உடைகள், ஆபரணங்கள் தயாரிப்பதிலும் தேர்ச்சிபெற்றவர். மகாபாரதம், இராமர் நாடகம், பிரம்ம இராட்சதன் யுத்தம் ஆகிய கூத்துக்களுக்கு ஒப்பனை செய்தது மட்டுமன்றி, உடைகளையும், ஆபரணங்களையும் வடிவமைத்துள்ளார்.

1993ம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழாவில் இவரால் பழக்கி அரங்கேற்றப்பட்ட நாடகம் இரண்டாமிடத்தைப் பெற்றது. இராவணேசன் நாடகம் இவரால் நெறியாழ்கை செய்யப்பட்டு மயிலம்பாவெளி, சந்திவெளி, மட்டக்களப்பு சித்தி விநாயகர் ஆலயம், எல்லை வீதி வைரவர் ஆலயம், திருச்செந்தூர் போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்டவர்களுக்கு மட்டுமன்றி யாழ்ப்பாணம் போன்ற வெளி இடங்களிலுள்ள கலைஞர்களுக்கும் ஒப்பனை செய்துள்ளார். இவை தவிர மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி, மட்/ இந்துக் கல்லூரி, மட்/ அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் விஷேட நிகழ்வுகளிலும் ஒப்பனையாளராக பணியாற்றியுள்ளார்.

# சிறுகதைகளின் கதை

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யுடன் எமது மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையிலிருந்து கிடைக்கப் பெற்ற அறுவடையே அடுத்துவரும் சில பக்கங்களில் இடம்பெறுகின்றது.

நவீன தொழில் நுட்ப சாதனங்களின் தாக்கத்தால் வாசிப்புத் திறன் குறைந்து வருவது அனைவராலும் உணரப்பட்ட ஒருவிடயமாகும். எனவே இதனை மனதில் வைத்தும் குறிப்பாக சிறுகதைப் பயிற்சிப் பட்டறையின் அவசியம் கருதியுமே இப்பயிற்சிப் பட்டறை ஒழுங்குசெய்யப்பட்டது.

ஒவ்வோரு பாடசாலைகளும் பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்து எமக்கு வழங்குவதில் சிரமத்தை ஏற்படுத்தாத போதும், பயிற்சிப் பட்டறையின் போது நாம் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஏனெனில் பயிற்சிப்பட்டறைக்கு சமூகமளித்த 28 மாணவர்களில் பாதிப்பேருக்கும் அதிகமானோருக்கு சிறுகதை வாசிப்பதிலோ எழுதுவதிலோ எவ்வித நாட்டமும் இருக்கவில்லை. எனினும் எமது வளவாளர்களான பேராசிரியர். செ.யோகராஜா அவர்களும், கவிஞர் திரு.த.மலர்ச்செல்வன் அவர்களும் சிறந்த படைப்புகளை எமக்குப் பெற்றுத்தர வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டனர். அவ்வாறு மாணவர்களால் எழுதப்பட்ட சிறுகதைகள் சில எழுத்தாளர்களிடம் வழங்கப்பட்டு அவற்றிற்கான கருத்துக்களும் பெறப்பட்ட பின்னர் இறுதியாக 05 மாணவர்கள் மட்டுமே இறுதிக்கட்ட பயிற்சிப்பட்டறைக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். இறுதிக்கட்ட பயிற்சிப் பட்டறையை நடாத்தி இம்மலரில் இடம்பிடித்துள்ள சிறுகதைகளை எமக்கு வழங்கியவர் கவிஞர். திரு.த.மலர்ச்செல்வன்.

அந்தவகையில் இச்சிறுகதைப் பயிற்சிப் பட்டறைக்கு அனுசரணை வழங்கிய எமது கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும், எனக்கு சிறந்த ஆசானாகவிருந்து அறிவுரைகளை வழங்கிய பிரதேச செயலாளர் திரு.வெ.தவராஜா அவர்களுக்கும், வளவாளர்களாகக் கடமையாற்றிய பேராசிரியர்.செ.யோகராஜா மற்றும் கவிஞர்.த.மலர்ச்செல்வன் அவர்களுக்கும், எமக்கு பங்குபற்றுனர்களைத் தயக்கமின்றி வழங்கிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும், பங்குபற்றிய மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.தர்ப்பணா ஜெயமாறன்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.

கொட்டி வைத்த தயிரைப் போல ஆடாமல் அசையாமல் வானத்தில் இருந்தது நிலா. மூத்தம்மையைக் காணாத நான் "மூத்தம்மேய்.. மூத்தம்மேய்.." எனக் கூப்பிட்டேன். அவட சத்தத்தைக் காணல்ல. கொஞ்சம் சுணங்கி வீட்டுக்குள்ளே இருந்து வெளிய வந்தா. வீட்டுக்கு முன்னால் இருந்த மஞ்சோனா மரத்தில பக்கிள் கத்துற சத்தம் கேட்டது. உடனே மூத்தம்மா வீட்டுக்குள்ள போய் சிரட்டையில நெருப்புத் தணல் எடுத்து வந்து உப்புக் கல்ல நெருப்புத் தணல்ல தூவினா. அது வெடிச்சுது. பிறகு பக்கிள் கத்துற சத்தம் இல்ல. கொஞ்சம் சுணங்கி பக்கத்து வீட்டு மஞ்சனி அக்காச் சிர மாமரத்தில கத்திற சத்தம் கேட்டது. மூத்தம்மா பாயை எடுத்துக் கொண்டு போய் மஞ்சோனா மரத்துக்குக் கீழ குந்தினா. நானும் தங்கச்சியும் போய் அவட விலாவுல குந்திக் கொண்டோம்.

பின் தூரத்துல ஆக்காண்டி கத்திக் கேட்டுது. அப்ப மூத்தம்மா சொன்னா "யான வயலுக்குள்ள வருதாக்கும். அது தான் ஆக்காண்டி கத்துது" எண்ட உடனே நான் மூத்தம்மாட்டே கேட்டன்.

அப்ப ஏன்கா பக்குள் கத்துறது ?

அதுக்கு அவ சொன்னா"

அதுவாட யாரண்டான

சாகப் போறாங்க எண்டா பக்கிள் கத்தும்"

அதுக்கு நான் சொன்னன் "அப்பெண்டா எண்ட அம்மா சாகப் போக்குள்ள பக்கிள் கத்திரிந்தா அம்மாவ கொண்டு ஓழிச்சிரிக் கலாமே" எண்டன். அதுக்கு அவ சிரிச்சா.

# மூத்தம்மா

**செல்வன்.ற.விதுர்சன்**
மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை



பக்கத்து ஒழுங்கைக்குள்ள தியாகு மாமா போற தெரிஞ்சிச்சி. அவர பாத்ததும் எனக்கு ஒரு ஞாபகம் உடனே வந்திச்சி. அது என்னண்டா ஒரு நாள் நானும் மூத்தப்பாவும் தியாகு மாமாவும் தேன் எடுக்கப் போன ஞாபகந் தான். அது பெரிய கத. உடனே முத்தப்பாவை பார்த்தேன். அவர் மாட்டு வண்டில இருந்து எழுந்து சென்று மாட்டிற்கு புக வைச்சிக் கொண் டிருந்தார். அப்ப மூத்தம்மா என்னட்ட கேட்டா, "என்னடா கடுமையா யோசிக்கிற?"

"ஒண்டுமில்லக்கா" எண்டேன்.

பின் தங்கச்சியப் பார்த்தன் அவள் மூத்தம்மாட மடிக்குள்ள நித்திர கொண்டிருந்தாள். தங்கச்சிய எடுத்து தோள்ள போட்டுத்து பாய சுத்தித்து வீட்டுக்குள்ள போனா. நானு அவட வெத்தில வட்டாவ தூக்கித்து உள்ள போனன். என்னைய அவ கட்டில்ல படுக்க வைச்சி போட்டு, வேப்பம் பட்டய தண்ணில ஊற வச்ச உடனே நான் நினைச்சன்" நாளைக்கு காலைல மூத்தப் பாவும் தியாகு மாமாவும் கையையும் காலையும் புடிக்க வேப்பம் பட்ட ஊற வச்ச தண்ணிய மூத்தம்மா எனக்கு பருக்குவா" எண்டு. இருக் கும் போது நித்திர கொண்டுத்தன். உடனே அம்மா புகையா வந்தா. என்னக் கூப்பிட்டா. நான் உடனே மூத்தம்மேய் எண்டு சொல்லிக் கொண்டு அவட பக்கத்தில போய் படுத்துத்தன். விடிஞ்சித்து. சல சல எண்டு சத்தம் கேட்டுச்சி. பாத்தா மூத்தப்பா வாளி நிறைய தண்ணி கொண்டு வந்து எனக்கு ஊத்தினாரு. நான் துள்ளித் துடிச்சு எழும்பினன். மூத்தம்மா மூத்தப்பாவுக்கு கொம்பினா. ஏனெண்டா படுகையையும் நனச்சி என்னையையும் நனச்சிப் போட்டாரு.

பிறகு மூத்தப்பாட மாட்டுவண்டில்ல குளத்துக்கு குளிக்கப் போனன். குளிச்ச பிறகு ஆண்டாங் குளத்தில இருக்கிற வயலுக்கு வக்கட கட்ட மூத்தப்பா என்னய கூட்டித்துப் போனாரு. மூத்தப்பாட ஊரு ஆண்டாங்குளம். மூத்தம்மாட ஊரு கட்டுமுறிவு. அதுதான் அவருக்கு ஆண்டாங்குளத்தில் வயல். போய்த்து வரக்குள்ள குளக்கட்டு ஓரத்தில பனம்பழம் புறக்கித்து வந்து மூத்தம்மாட்ட குடுத்தன். அவ அதை அடுப்புக்கு ஓரத்தில வச்சா. இப்படித்தான் அம்மா சாகிறதுக்கு முதல் நாள் பின்னேரம் பனங்காப்பாணியும் சோறும் தந்தவ ஞாபகம் இரிக்கி எனக்கு.

ஒருநாள் மூத்தம்மா காலயில எழும்பி சிவத்தாள் மாட்டில பால் கறக்க போனா. ஒருநாளும் இல்லாத போல அது பால் கறக்க விடல்ல. ஏனோ தெரியாது. பிறகு மூத்தம்மா வந்து என்ன பள்ளிக்குப் போக தயார் செய்து போட்டு இருவது ரூவா காசி தந்து விசுமண்ட கடயில குளிச வாங்கி வரச் சொன்னா. பிறகு குளிச வாங்கி வந்து குடுக்க என்றுமில்லாத போல என்ன கட்டிப் புடிச்சி கொஞ்சிப் போட்டு படுத்துக்கொண்டா.

"என்ன மூத்தம்மா" எண்டு கேக்க

"காச்சல்றா" எண்டு சொன்னா .

வருத்தம் வந்து படுக்காத மனிசி அண்டைக்கு படுத்துக்கொண்டா. பள்ளிக்குள்ள இடைவேளை நேரம் கந்தசாமிர முந்திரியந் தோட்டத்தில முந்திரியம் பழம் திண்டு கொண்டி ருந்தேன். அப்போது சுதாகர் ஓடி வந்து "வாடா உண்ட மூத்தப்பா வந்திரிக்காரு" எண்டான்.

நான் ஓடிச் சென்றன். அவர் பெரிய சேர்ற றூமுக்கு பக்கத்தில நின்றார்.

"என்ன?" என்டு நான் கேக்க " வாடா மனே வீட்ட போவம்" எண்டு தளதளத்த குரல்ல சொன்னார்.

அப்ப உடனே நான் அவரோட போனன். தூரத்தால போக்குள்ளயே வீட்டுக்கு முன்னால பெரிய சனக் கூட்டம். எனக்கு ஒண்டும் தெரியல்ல. வீட்டுக்குள்ள போனன்.

ராசா அண்ணன் சிவபுராணம் பாடிக் கொண்டிருந்தார். "மூத்தம்மேய்" எண்டு கத்தி னேன். சித்தப்பா என்னப் புடிச்சித்தார். புறகு மூத்தம்மைய முன்னுக்கு ராசா அண்ணனும், சாந்த அத்தானும் பின்னுக்கு ரவி சித்தப்பாவும், கந்தசாமி அண்ணனும் தூக்கித்து சவக்காலை க்கு கொண்டு போனாங்க. நான் பின்னால ஓடினன்.

"நீ சின்னப்பிள்ள வராத" என்றார் சித்தப்பா. நான் ஆருக்கும் தெரியாம பதுங்கிப் போய் நடக்கிறத பார்த்துக் கொண்டிருந்தன். மூத்தம்மாவ மடுவுக்குள்ள வச்சி மண் போட்டு மூடினாங்க. சே..இது என்ன வாழ்க்கடா என நினைச்சி மண்ணில் அடிச்சன் மண் சிதறிச்சி அப்ப "அம்மா" எண்டு கத்தித்து ஓடும் கன்றைப் பார்த்து முறைச்சது எண்ட முகம்.



# நினைவுகள்




**பிரவீனா அருணகிரிநாதன்**
மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி



"ச்சீ....ஏன் தான் இன்னைக்கு விடிஞ்சதோ தெரியல்ல.." எண்டு சொல்லிக்கிட்டே அப்பாவின்ட சத்தத்தைக் கேட்டு எழுந்திருக்கின்றேன். இண்டைக்கு செய்ய வேண்டிய வேலைகளை லிஸ்ட் பண்ணும்போதே தல சுத்தி தலயே கீழ விழுற மாதிரி இருந்திச்சு. அப்படின்னா இன்னைக்கு உண்மையிலேயே விழுந்திடுமா? என்ன பைத்தியக்காரத்தனம். இது தலயாவது கீழ விழுறதாவது. ஏன் என்ட கை எல்லாம் இப்படி நடுங்குது. பேசாம அப்பாகிட்ட சொல்லிட்டு ஸ்கூலுக்கு போயிருவமா? அப்பா இதெல்லாம் வேணாம் எண்டுட்டாரு எண்டா. ஸ்கூல் முடியுற நேரத்துக்கு வீட்ட போயிரலாம் எண்டு பாரதி சொன்னானே. அது ஒன்றும் பிரச்சனையாகாது என பல எண்ணங்கள் என் கண் முன்னே விரிந்து கொண்டே செல்கின்றன.

அம்மா என்கூட இருந்திருந்தா அப்பாட்ட கதச்சிருப்பா. "அம்மா இப்ப எங்கம்மா இருக்கிற. எங்கிட்ட எப்ப வருவ. அப்பா சொன்னாரு நீ இன்னும் கொஞ்சக் காலத்தில எங்கிட்ட வந்திருவன்னு. உண்மையா? அப்படின்னா எப்ப வருவ?". நான் கேட்ட எந்தக் கேள்விக்கும் என்ட அம்மா விட சொல்லல்ல. சிரிச்சுக்கிட்டே இருந்தா வழமைய மாதிரி அம்மாக்கு முன்னுக்கு சந்தணக் குச்சிய அப்பா கொழுத்தி வைச்சிருந்தாரு. அதில இருந்து வர்ற புக கொஞ்ச நேரத்தில மறயுற மாதிரி என்னோட இருந்த அம்மா என்னோட கண்ணுக்கு முன்னாலே வராம மறஞ்சிட்டா.



தோழில் புத்தக சுமையை மாட்டிட்டு அப்பாக்கு பை சொல்லி ப்ரெண்டோட ஸ்கூலுக்குப் போய்கிட்டு இருக்கின்றேன். என்னோட படிக்குற சில பையன்கள் சைக்கிளில போறத பாக்கக் குள்ள எனக்கும் சைக்கிள் ஓடணும் போல இருக்கு. அதுதான் இன்னைக்கு ஓடப் போறோமே. பிறகு என்னத்துக்கு இப்ப கவலப் பட. பாரதியோட பக்கம் திரும்பி "பாரதி நீயும் இண்டைக்கு டீச்சர் கிட்ட போக வருவ இல்ல". "ஓம் ஓம் நான் எண்ட அப்பா அம்மாகிட்ட கேட்டுட்டன். எனக்கு அடுத்த கிழமையே சைக்கிளும் வேண்டி தருவாங்க. உண்ட அப்பா என்ன சொன்னவர்." "எண்ட அப்பாவா?... அப்பா என்ன சொன்னவர் எண்டா...." என்னுடன் கதை வளர்ப்பதை விரும்பாத பாரதி முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

இண்டைக்கு ஸ்கூல்ல பாஸ்டா சைக்கிள் ஓட்டுறவங்களுக்கு முதல் பரிசும், நிறைய சொக்கிலட்டும் கிடைக்கும் எண்டு டீச்சர் சொன்னாங்க. எனக்கு நிறைய சொக்கிலட் வேணும். இன்னைக்கு சைக்கிள் ஓட்டுறவங்கள எல்லாரேயுமே ஏதோவொரு குரூப்பிலயும் சேர்த்துக்குவாங்களாம். அவங்க தான் எப்பவுமே சைக்கிள் ஓட்டுவாங்க என்றும் டீச்சர் சொன்னாங்க. எனக்கு சைக்கிள் ஓட்ட ரொம்பவுமே பிடிக்கும். என்னோட ப்ரெண்ஸ்சோட சைக்கிள நான் நிறையத்தரம் வேண்டி ஓட்டி இருக்கன். ஆனா எல்லாத் தரமும் கீழ விழுந்திருவன். என்னோட ப்ரெண்ட்ஸ் எல்லாம் கைதட்டி சிரிப்பாங்க.

அவங்கள பேஸ் பண்ண முடியாம கிளாஸ் ரூமுக்கு ஓடுவன். அங்கிருந்து கால பாக்கக்குள்ள தான் காலால தோல் உரிஞ்சு ரெத்தம் வழியுறது விளங்கும். கால் நோகும். அப்பாகிட்ட சொல்லலாமுன்னா மத்தவங்க பைக்க நீ ஏன் வேண்டி ஓடின எண்டு கேப்பார். ஏசுவார். பயத்தில் எத்தனையோ நாள் காயத்த அப்பாகிட்ட காட்டாம தலகாணிக்குள்ள தலயப் புதச்சு வச்சிட்டு அழுவன். அப்பெல்லாம் நம்ம அம்மா கூட இருந்தா ஏசாம மருந்து போட்டு விட்டிருப்பா எண்டு தோணும்.

அம்மா என் பக்கத்தில் இருந்தா எனக்கு பிடிச்சதெல்லாம் சமைச்சுத் தருவா. என்ன பாட்டுப்பாடி தூங்கவைப்பா. எனக்கு பிடிச்ச விஷயங்கள தெரிஞ்சு வச்சுக்கிட்டு அதன்படி நடப்பா. அம்மா நீ எப்ப வருவ? என்னோட ப்ரெண்ஸ் எல்லாருக்கும் அம்மா இருக்கு. எனக்கும் அம்மா வேணும் அன்னைக்குக் கூட நீ கனவுல வந்தப்போ நான் சைக்கிள் ஓட்டுறதப் பாத்து நீ கைதட்டி சிரிச்சுக்கிட்டே என்ன வந்து கட்டிப்பிடிச்சு கொஞ்சின. உண்மையில நீ எப்ப என்ன கொஞ்சப்போற?

ஸ்கூலின் பெல் சத்தம் கேட்க எல்லாருமே என்ன தள்ளி விட்டுட்டு ஸ்பீடா ஸ்கூலுக்கு ஓடிற்றாங்க. நான் லேற். டீச்சர் அடிக்குறதுக்கு பிரம்ப எடுத்தா. ஆனா அடிக்கல்ல. நல்ல நேரமா பாத்து பிரின்சிபல் டீச்சர கூப்பிட்டுட்டா. நான் தப்பிச்சுட்டன். ரொம்ப சந்தோஷம்...ஆ.. இல்ல இல்ல ஒருவேள டீச்சர் அடிச்சிருந்தா நான் அழுறதக் கேட்டு எனக்கு மருந்து போட்டு விட நீ ஓடி வந்திருப் பியா அம்மா?. நான் பிழ செஞ்சிட்டன். நீ

வருவா எண்டா எத்தன அடியும் வேண்டிருப்பன் அம்மா... நீ இப்ப வராட்டி பரவால்ல. நீ எப்ப வருவா எண்டாவது சொல்லு. இல்லாட்டி அப்பாகிட்ட நீ என்ன எப்பிடி பார்த்துகிட்டியோ அதமாதிரி பாத்துக்கொள்ளச் சொல்லும்மா. அப்பா எனக்காக எனக்காக எண்டு சொல்லிச் சொல்லி எண்ட முகத்தக் கூட பாக்காம வேலைக்குப் போறாரு. அப்பா ஒருநாள் கூட என்னத் தூக்கிக் கொஞ்சினதே இல்லம்மா. இரவுல தூங்கக்குள்ள பேய்க் கனவெல்லாம் வரும் போது உன்ன நினைச்சுக்குவன். அம்மா பயமெல்லாம் ஓடிப்போயிரும். அதுக்குப் பிறகு என்னோட கனவுல நீயும், அப்பாவும் என்னோட விளையாடுவீங்க. எனக்கு சைக்கிள் ஓட்ட சொல்லித் தருவீங்க.

"அஞ்சலி....." பாரதி என்னை அழைத் தான். சைக்கிள் ஓட்டப்போட்டி தொடங்கப் போகுதாம். நானும் ஒரு போட்டியாளன். எனது நண்பியின் சைக்கிளுடன் களத்தில் நிற்கின்றேன். இப்போட்டியில் கிப்ட் எடுத்திட்டு அப்பாகிட்ட கொண்டு போய் காட்டினா கட்டாயம் சைக்கிளொன்று வேண்டித் தருவார். அம்மாவும் அப்பாகிட்ட சொல்லி இருப்பா.

விசில் சத்தம் கேட்டதும் சைக்கிள் ஓட்ட வேணும். விசில் சத்தம் கேட்டிட்டு. சைக்கிள் ஓட்டப்போறேன். ஆ.....சைக்கிள் மிதி படுகுதில்லயே. "அம்மா..." திரும்பியும் கீழ விழுந்திட்டன். அன்னைக்கு கனவுல நான் கீழ விழுந்தப்போ அம்மாவும் அப்பாவும் பதறிப் போய் ஓடிவந்து என்னத் தூக்கினாங்க. ஆனா இப்போ என்னத் தூக்கி விட ஒருவரும் இல்ல.

"அம்மா......" காலால் இரத்தம் பீறிட்டுப் பாயுது. என்னோட கால துடச்சிவிடக்கூட ஒருவரும் இல்ல. அம்மா நீ எப்ப வருவ? கனவுல மட்டும் தான் வருவியா? இப்ப வரமாட்டியா? நான் அழுறது உனக்குக் கேட்கல்லயா? நீ வரமாட்டியா?

காலை இழுத்து இழுத்து நடக்கின்றேன். "அப்பா...... அம்மா......கனவுல நீங்க வர்றத விட நனவுல வந்தாத்தான் எனக்கு சந்தோசம். எப்ப வருவீங்க?........"

# பிரதேச மட்ட தேசிய இலக்கிய விழா – 2015

கனிஷ்ட பிரிவு

| போட்டியின் தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| கவிதை எழுதுதல் | 1ம் இடம் | ஸ்ரீநிதி செல்வரெட்ணம் | மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| | 2ம் இடம் | ச.பிரியந்தினி | மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| | 3ம் இடம் | வேல்வேந்தன் பிரியங்கா | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதிவித்தியாலயம் |
| கட்டுரை எழுதுதல் | 1ம் இடம் | கி.தீப்திகா | மட்/மகாஜனக் கல்லூரி |
| | 2ம் இடம் | யோகேஸ்வரன் டஷானி | மட்/மகாஜனக் கல்லூரி |
| கவிதை பாடல் | 1ம் இடம் | பாலகாந்தன் கிஷாந் | மட்/சிவானந்த தேசிய பாடசாலை |
| | 2ம் இடம் | சுரேந்திரநாதன் அபிலாஷ் | மட்/சிவானந்த தேசிய பாடசாலை |
| | 3ம் இடம் | ரவீந்திரன் வியாகிஷ் | மட்/சிவானந்த தேசிய பாடசாலை |



# மினி


என்.கஜனியா
மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி


நீண்டகாலமா எனக்கு கிளி வளர்க்க வேணும் என்று எண்ணம். அது தானாகத் தோன்றவில்லை. என்னுடன் படிக்கும் சாந்தி ஒரு கிளி வளர்க்கிறாள். அவளும் அந்தக் கிளியும் செய்த வேடிக்கையான நிகழ்வுகளை என்னிடம் சொல்லுவாள். அதே போல் நானும் ஒரு கிளியை வளர்க்க வேணும் என்று தோன்றியது.

சாந்தி அவளது கிளிக்கு மீரா என்று பெயர் சூட்டி இருந்தாள். அவள் அதுக்கு ஏன் இந்தப் பெயர் வைத்தாளென்று தெரியவில்லை. ஆனாலும் அப்பெயர் சிறிதாகவும், அழகாகவும் இருந்தது. நானும் இதேபோல்த்தான் நான் வளர்க்கவிருக்கும் கிளிக்கு பெயர் வைக்கவேண்டுமென்று முடிவெடுத்தேன்.

என்னுடைய அப்பாவுக்கென்றால் இப்படிப்பட்ட செல்லப் பிராணிகள் வளர்ப்பதில் விருப்பமில்லை. ஆனாலும் நான் கேட்டால் ஒத்துக்கொள்ளுவார் என்ற நம்பிக்கையுடன் வேலைக்குப் போன அவர் வரும்வரை அம்மா கடைக்குப் போய்ட்டு வரச் சொன்னதைக் கூட மறந்துவிட்டு அப்பாவின் மோட்டபைக் வரும் சத்தத்தை எனது காதுகள் தேடிக் கொண்டிருந்தன. கண்கள் வாசலைப் பார்த்த படியே இருந்தன. மனமோ கிளி பற்றிய எண்ணத்துடனும் ஒருவித மயக்கத்துடனும் குழம்பிக் கிடந்தது. கடிகாரத்தைப் பார்த்தேன் அப்பா வரும் நேரம் சரி. அவர் வருவார் என்று ஒரு சந்தோசம் இருந்தாலும் அவரிடம் இதை எப்படிக் கேட்பது என்று சொல்லிப்பார்த்துக்கொண்டேன்.

அப்பாவின் மோட்ட பைக் சத்தம் கேட்கிறது. திடீரென எழுந்து வீட்டு வாசல் கதவுக்கருகில் இருக்கும் கதிரையில் தான் இளைப்பாற வருவார் என்ற ஏதோ நம்பிக்கையுடன் அக்கதிரைக்கருகில் நின்றுகொண்டிருந்தேன். அப்பா வந்து முகம் கை, கால் கழுவிவிட்டு நான் நினைத்தபடியே அக்கதிரையில் வந்து அமர்ந்துகொண்டார். அவர் என்னுடைய அப்பா என்பதாலோ

நான் ஏதோ அவரிடம் கேட்க நிற்கிறேன் என்பதைப் புரிந்துகொண்டு "என்ன வேணும் சொல்லு" என்றார். அவரே சொல்லச் சொன்ன பிறகும் எப்பிடி ஆரம்பிப்பது என்று தெரியாமல் சிறிது மௌனத்துக்குப் பின்னர் "அப்பா என்ட பிரெண்ட் சாந்தியத் தெரியுமா?" என்று கேட்டேன். " ஓம் அவளுக்கென்ன?" என்று கேட்டார். "இல்லப்பா. அவள் ஒரு கிளி வளர்க்காள். அதே போல எனக்கும் ஒரு கிளி வேணும்" என்று சொன்னதுதான் தாமதம் ஏதோ ஒருபக்கம் பார்த்துக்கொண்டிருந்தவர் திடீரெனத் திரும்பி என்னைப் பார்த்து "எனக்குத் தெரியும். ஏற்கனவே நீ அந்த சாந்திட கிளியப் பத்தி சொல்லக்குள்ளயே. எப்பயாவது இப்பிடிக் கேட்டுட்டு வந்து நிப்பா எண்டு. இப்ப படிக்குற நேரத்தில உனக்கு எதுக்குக் கிளி?" என்று சொல்லி நிறுத்தினார். நான் பேச எடுக்கும் போதே "இன்னும் மூண்டு மாதத்தில சோதன வரப்போகுது. அதுக்குப் படிக்காம இப்ப என்னத்துக்கு, இந்தக் கிளி எல்லாம் வேணாம்" என்று சொல்லி சட்டென முடித்தார். நான் மெதுவாக அவரிடம் "ப்ளீஸ்.. இந்தக் கிளியால நான் படிக்க மாட்டன் எண்டு எப்பிடி சொல்லுறீங்க? நான் முழுநாளும் கிளியோடயா இருக்கப்போறன்? ப்ளீஸ் எனக்கு எப்பிடியாவது கிளி கட்டாயம் வேணும்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டேன்.

என்ன நினைத்தாரோ தெரியல்ல எனக்கு கிட்ட வந்து "சரி சரி நான் கிளி வாங்கித்து வாறன். ஆனா சோதனையில மார்க்ஸ் குறைஞ்சா பிறகு என்னைப்பத்தி தெரியும்." எண்டு சொன்னார். நான் மார்க்ஸ்ஸை ப் பத்தி ஒண்டும் நினைக்கல்ல. அவர் கிளி வாங்கித்து வாறன் என்று சொன்னது மட்டும் தான் எனது காதில கேட்டது.

அன்றிரவு நித்திரைக்குப் போன பின்னும் கிளியின் எண்ணம்தான் எனது மனது பூராகவும் ஓடிக்கொண்டிருந்தது. பிறகு எப்பிடி தூங்கினன் என்று தெரியல்ல. மறுநாள் காலைல வெளிய போய்ப் பார்த்தன். அப்பாவின் பைக்கைக் காணல்ல. வேலைக்குப் போயித்தார் வரக்குள்ள கிளியோடதான் வருவாரெண்டு முழுமையாக எண்ணியிருந்தன். பள்ளிக்குப் போய் சாந்தியிடம் அப்பா கிளி வாங்கித் தாறன் எண்டுத்தார் எண்டு மிகவும் சந்தோசத் துடன் சொன்னன். சாந்தி "நீ கிளிக்கு என்ன பேர் வைக்கப்போற?" என்றாள். அப்பதான் எனக்கு அந்த எண்ணம் வந்தது. நன்கு யோசித்த பின் ஒரு அழகான பெயரைக் கண்டு பிடித்துவிட்டேன். அப்பெயரை நான் சாந்தியிடம் சொல்லவில்லை. அப்பெயரை ஒரு இரகசியம் போல வைத்திருந்தேன்.

பாடசாலை விட்டுப் போனதும் மணி ரெண்டு. அப்பா வர இன்னும் நாலு மணித்தியா லங்கள் இருக்கு. அதுவரைக்கும் என்ன செய்யுறது எண்டு தெரியாம ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தேன். ஆனாலும் எனது மனம் இடைஇடையே கிளி பற்றிய நினைவுகளுக்கும் சென்றுவரும். ஒருவாறு நேரம் கழிந்து ஆறு மணியாகிவிட்டது. அப்பாவின் பைக் சத்தத்தை வழமைபோல் எனது காதுகள் அறிந்துவிட்டன. விரைவாக வெளியே வந்து அப்பாவின் கைகளைப் பார்த்தேன். ஒரு சிறிய கிளிக்குஞ்சு ஒரு கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்தது. அது பிறந்து கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக இருக்கலாம் என்று ஏதோ எனக்குள் கணித்துக்கொண்டேன்.

சட்டென்று கூட்டை அப்பாவிடமிருந்து வாங்கி "இந்தக் கிளி எனக்கு மட்டும்தான் சொந்தம். இதை யாரும் தொடக் கூடா" என்று சொல்லிவிட்டு எனது அறையின் அருகே கொண்டுபோய் வைத்தேன். அது பாவமென்று எனக்குத் தோன்றினாலும் அதற்கு மேலாக கிளியுடன் இருந்த விருப்பம் அதை எல்லாம் பொருட்படுத்தவில்லை. நான் அந்தக் கிளிக்கு சிறியதாகவும் அழகாகவும் மினி என்று பெயரிட் டேன். நாட்கள் செல்லச் செல்ல மினியும் வளர்ந்து வந்தது. அதனுடன் எம்மிருவருக்கும் இடையில் இருந்த பாசமும் வளர்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் அம்மா சொன்னா

"பின் வீட்டில இருக்கிற நாய் வீட்டுக் கோழி ரெண்டைப் பிடிச்சு கொண்டுட்டு இனிமேல் ஒரு கோழியையும் வளவுக்கு வெளியால விடுறல்ல" என்று சொன்னா. இதைக் கேட்டதும் எனக்கு மினியைப் பறக்க வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும் போய்விட்டது.

சிறிது காலத்துக்குப் பிறகு அந்த நாயைப் பற்றி ஒரு பேச்சுமில்லை. நான் அந்த நாயைப் பற்றி மறந்தே போய்விட்டேன். மினி நன்கு வளர்ந்து விட்டது. இப்ப எல்லாம் அது நன்றாகப் பேசவும் பழகிவிட்டது. அது என்னுடைய பெயரைத்தான் அதிகமாகச் சொல்லும். அன்றொருநாள் மினிக்குச் சாப்பிடப் பழங்களைக் கொடுத்துவிட்டு கூண்டுக் கதவை மூடாமல்ப் போய்விட்டேன்.

சில நேரத்துக்குப் பிறகு கூண்டைப் பார்த்ததும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கூண்டுக்குள் மினியைக் காணவில்லை. அப்பா அப்பா எனக் கத்திக்கொண்டே அப்பாவிடம் சென்று சொன்னேன். சொல்லும் போதே எனது கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது.

அப்பா திடீரென்று பின் வீட்டினுள் சென்றார். அவர் ஏன் அங்கு சென்றாரென்று எனக்கு அப்போது புரியவில்லை. அந்த நாயைப் பற்றி நான் மறந்திருந்தாலும் அப்பா மறக்க வில்லை. அவர் திரும்பி வரும் போது அவர் முகத்தைப் பார்க்கும் போதே எனக்குப் புரிந்து விட்டது. அவர் என்னிடம் கூறும் முன்னரே எனது கண்களிலிருந்து கண்ணீர் பீறிட்டுக்கொண்டு வந்தது. அதே கணம் எனது மனமும் உடைந்து உதிர்ந்துவிட்டது.

எனது மினியைக் கொன்ற நாய்க்கு எனது கையால்த் தான் சாவு என்பது மட்டும் எனது எண்ணத்தில் ஓடியது.

---



## மறந்திடுமா உன் நினைவுகள்

என்னிதயம் உனக்கே சொந்தம் என்றேன்
எங்கோ நீதான் பறந்துவிட்டாய்
தஞ்சம் என்றே உன்னை நாடி வந்தேன்
தரணியில் நீயும் எங்கு சென்றாய்

சொல்ல நினைக்கும் வார்த்தைகளை
சொல்லாமல் நானே விட்டுவிட்டேன்
பறவைகளைப் போலே சிறகிருந்தால்
பறந்து வராமல் இருப்பேனோ?

மறந்திட எண்ணும் நினைவுகளை
மறக்கவோ என்னால் முடியவில்லை
விதியிருந்தால் நாம் சேர்ந்திருப்போம்
வேலவனே வந்து துணைபுரிவான்.

**திருமதி. நந்தினி ஜெகதீஸன்**
(சோலை நந்தா)

# மறையாதவை



**கமிலா தேவசகாயம்**

மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை



அவள் பார மூட்டையை சைக்கிளில் சுமந்துகொண்டு கவலைகளை மனதில் சுமந்து கொண்டவளாய் மெல்ல மெல்ல நகர்கிறாள். அகலமான பாதைகள் தனக்கு வழிவிடக்கோரி கீச்சலிடும் வாகனங்கள். மாலைப் பொழுது வேலை முடிந்தது, வீடு செல்கின்றோம் என்று ஆறுதலடைந்து செல்லும் ஊழியர்கள். புரியாத புன்னகையில் வீடு நோக்கி சிட்டாய்ப் பறக்கும் மாணவர்கள். எல்லோர் முகத்திலும் ஒருவித மகிழ்ச்சி இல்லை, ஒருவித ஆறுதல் என்றே சொல்லலாம். ஆனால் இவளின் முகத்தில் மட்டும் சொல்ல முடியாத துயர். துயரை மறைத்தவளாய் காற்றை எதிர்த்துக்கொண்டு விரிந்து கிடக்கும் அந்தப் பாலத்தின் வாயினுள் செல்ல முயற்சிக்கின்றாள்.

பாலத்தின் கீழ் அமைதிப் பாட்டிசைக்கும் ஆறுகள் நீலக் கம்பளத்தை விரித்தாற் போல் அவ்வளவு அழகாய் காட்சியளித்தன. தூரத்தில் சவுக்குகளும், தென்னைகளும் நீல வானில் வரைந்த ஓவியங்களாக அவளுக்குத் தெரிந்தன. மாலை சூரியன் தனது வேலைக்கு ஓய்வைக் கொடுத்து வீடு திரும்புகிறான்.

அவளும் தனது சோகத்தை மறைக்கத் தான் பார்க்கின்றாள். இருந்தும் காற்றுக் கூட அதை வெளிப்படுத்தச் சொல்லி தூசை வாரி அவள் கண்களில் எறிகின்றது. காற்று அவளை அறைந்து செல்ல அவளும் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு முன்னேறு கின்றாள். பாலத்தைக் கடக்க அவள் முயற்சித் தாலும் அவளின் கடந்த கால நான்கு மாதங்கள் மறக்கமுடியாத காலங்கள் அவை. இதுபோதும் எனக்கு என்று அவள் நிறைவடைந்தது அந்தக் காலத்தில்த்தான். அவள் எதிர்பார்த்த உறவுக ளின் பாசங்கள் அவளை வெகுவாய் ஆக்கிர மித்தது அந்த நான்கு மாதத்தில்த்தான். சைக்கிள் ஏதோ முன்நோக்கிச் சென்றாலும் அவள் இன்னும் அந்த நினைவிலிருந்து விடுபடவில்லை.

இரண்டாம் தவணை முடிவுப் பரீட்சை புள்ளிகளைப் பார்த்து இடிந்து போனாள் சுமதியின் அக்கா. "என்னப்பா ஆயிச்சு நல்லா படிச்ச புள்ளதானே....திடீரெண்டு இப்பிடி மார்க்ஸ் எடுத்திருக்காள்."என்று அவளின் அக்காவின் ஆதங்கக் குரலொலி வீடெங்கும் ஒலித்தது. நிலைகுலைந்து போனாள் சுமதி. எதை சொல்வது? எதை செய்வது எனத் தெரியாமல் மௌனங்கள் தான் இப்போதைக்குச் சொத்து. நாற்காலிதான் நண்பன் என்று வாயடைத்துக் கொண்டு இருந்தாள். "சே.....இனி ஒண்டும்

எனக்கு செய்ய ஏலா....எனக்கும் வயது போய்ட்டு. இதுகள் என்ன செய்யுதுகள் எண்டு எனக்குத் தெரியல்ல...." சுமதியின் அப்பாவின் அழுகை யில்லாக் குரல் புறுபுறுக்க அடுப்பங்கரையில் இயந்திரமாய் இயங்கும் தாயின் குரல் கூட சுமதிக்கு ஆறுதலாய் அமையவில்லை.

"உங்ககிட்ட எத்தின தரம் சொன்னன் கேட்டீங்களா? அவள நான் என்கூடி கூட்டிட்டுப் போகப் போறன்." அக்கா மீண்டும் மீண்டும் அப்பாவை நச்சரித்தாள். எனக்கோ மனதுக்குள் ஆனந்தம். அக்காவுடன் செல்லலாம். அங்க யாவது நல்லா படிக்கலாம் என்ற எண்ணங்கள் அவள் மனதில் ஒருபுறம் ஓடிக்கொண்டிருந்தன. அக்கா என்றால் சுமதிக்கு கொள்ள பிரியம். ஆனால் அவளுடன் வாழக் கிடைத்தது வெறும் பத்து வருடங்கள் மட்டும்தான். இருந்தும் சுமதியின் நினைவிலிருப்பது வெறும் இரண்டு வருடங்களே. சுமதி என்றும் இல்லாம இன்று தனது புள்ளிகளை குறைவாய் எடுத்ததற்குக் காரணம் அவள்தான், அவள் மட்டும்தான் என்று பொய் சொல்ல விரும்பவில்லை. அவ ளுக்குக் கிடைத்தது ஒருபுறமிருக்க அவளுக்கு கிடைக்காதவை தான் அவளை ஒருநிலைக்கு கொண்டுசேர்த்தது போலிருக்கிறது.

சுமதிக்குக் கிடைக்காதது பாசம். தாய் கூட அன்பைக் காட்டவில்லை. ஊக்கம் கூடக் கொடுக்கவில்லை. மற்றப் பிள்ளைகளை காட்டிலும் அவளைப்புறக்கணித்ததுதான் அதிகம். தந்தையும் அப்படித்தான். அவள் கொடுத்த அன்பிற்குப் பதிலாக அவளின் குடும்பம் அவளுக்குக் கொடுத்தது வெறும் பேச்சுக்களும், புரிந்துணர்வு இல்லாத கதைகளுமே.... அவளின் ஏக்கம் அன்பு ஒன்று மட்டுமே. அன்பு, அரவ ணைப்பு, அன்னை பாசம் அரைகுறையாகவும், தந்தை பாசம் தாகமுமாய் மாறி அவளின் வாழ்க்கையைத் தொங்கவிட்டு கேள்விக் குறியாக்கிவிட்டது.

சிறுவயதிலிருந்து அன்னையாய் அவளைப் பார்த்தது வளர்த்தது எல்லாம் அவளது அக்காதான். அவளும் கல்யாணம் என்று சொல்லி அவளை விட்டு போன பின் நடுக்காட்டில் விடப்பட்ட நிலையானது சுமதி யின் நிலை. காலப்போக்கில் எல்லாமே வெறுத்தது. வீட்டிலும் அவளை வெறுக்க வெறுக்க அவள் பித்துப்பிடித்தவள் போல் நடந்துகொண்டாள். வீடே அவளுக்கு சுடுகாடாய் மறுபுறம் நரகமாய் இப்படி வெறுக்கத்தக்க இடமாய் மாறியது. இப்படி இருக்க படிப்பா? எனக்கு எதுவுமே வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டாள்.

எப்படியோ அக்காவின் நச்சரிப்பைத் தாங்க முடியாமல் எல்லாவற்றிற்கும் ஒப்புக் கொண்டார் சுமதியின் அப்பா. அக்கா வீடு சென்ற சுமதிக்கு புது முகங்கள் என்று சொல்லா விட்டாலும் அவர்கள் காட்டிய பாசங்கள் அவ ளுக்குப் புதிதாய்த் தெரிந்தன. அம்மா உருவில் அக்கா. பாசம் பொழியும் அத்தான். உதவி என்னும் போது இல்லை என்று சொல்லாமல்ச் செய்யும் மாமனார் என்று பாசங்களுக்குக் குறைவில்லாமல் வாழ்க்கையைக் கழித்தாள்.

அங்கு சென்ற கொஞ்ச நாட்களிலே சுமதி பழைய சுமதியாய் வந்துவிட்டாள். அவளின் படிப்பு மாறியது. பாசங்கள் இல்லையென்று அழுத நாட்களை எல்லாம் படிப்பு என்று சொல்லி ஆனந்தமாக மாற்றினாள். அத்தான், அக்கா தந்த ஊக்கம் படிக்கக்கூடிய சூழல் தாராளமாய் வழங்கிய ஒத்துழைப்பு என்று அவளின் படிப்புக்கும், வளர்ச்சிக்கும் எல்லாம் நிறைவாய்க் கிடைத்தன.

காலங்கள் விரைந்தாலும் இடைஇடையே குடும்ப நினைவுகள் அவளில் அலைமோத தொலைபேசி அழைப்புக்கள் அவளை நோக்கி வந்தன. அந்த அழைப்புக்களை அவள் எதிர்பார்க்கவே இல்லை. இருந்தும் அவை வரும்போது எல்லாம் அவளை அழவைக்காமல் திரும்பி செல்வதில்லை. அவளின் ஆறுதல் எல்லாம் அவளின் அக்காதான். அவள் எல்லா வற்றையும் மாற்றினாள். அவளின் இறுதிக்கட்டப் பரீட்சையும் வந்தது. அந்த நான்கு மாதங்களில் தன்னால் இயன்றவரை இரவு பகலாக தன்னை தயாராக்கினாள்.

அவளின் உழைப்புக்கு தூணாக நின்ற அக்காவை அவள் என்றும் மறக்கவே யில்லை. எப்படியோ பரீட்சை முடிந்துவிடும்.

ஆந்தை போல் இரவிரவாய் முழித்துக்கொண் டிருந்த காலம் முடிந்தது. இனிக்கொஞ்சக் காலம் அக்காவுடன் சந்தோசமாக இருக்கலாம் என்ற அவளின் கனவுகள் எல்லாம் நனவா கியதோ இல்லையோ கானல் நீராய் கண்களில் மட்டுமே தெரிந்தது.

பரீட்சை முடிந்து அங்கு செல்வோம் இங்கு செல்வோம் அது, இது என்ற பலதரப் பட்ட கனவுகளுடன் அவள் வீடு சேரும் முன் அவள் பெற்றோரின் தொலைபேசி அழைப் புக்கள் அவளைத் தேடி நின்றன. "சுமதி உன்ன இண்டைக்கே வீட்ட வரட்டாம்" என அக்கா கூறியதும் சுமதி உண்மையாகவே உடைந்து போனாள். அந்தக் குரலொலிகளைக் கேட்டது காதாக இருந்தாலும் அந்தக் கணத்தை வெளிப்படுத்தியது அவளது கண்ணீரே..... அக்காவின் கண்களில் கண்ணீர் " ஏன் இப்பிடி உங்க அப்பா செய்யுறார்?" என்று திட்டிப் புலம்பும் உதடுகள். என்ன செய்யுறது?.... மாற்றங்களும் மாறுதல்களும் விரைவாய் என் வாழ்வை மாற்றிவிடுகின்றன என்று விம்மி விம்மி அழுதாள். அக்காவைப் பார்க்க பார்க்க இன்னும் அவள் அழத்தொடங்கினாள். தங்கையைப் பார்க்க முடியாமல் சொல்வதை எல்லாம் சொல்லிவிட்டு வெளியே கிளம்பி விட்டாள். "சே....அவ்வளவுதானா...." என்று அவள் நினைக்க....

சைக்கிள் வேகமாய் நகர்கிறது. குளிர்ந்த காற்று அவளை வருட சுயநினைவுக்கு வந்தாள். கண்களில் கண்ணீர் நிற்காமல் சொட்டுகிறது. ஒரு பெருமூச்சை விட்டு அந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பாலத்திலிருந்து வேகமாக இறங்கி அவள் சென்றுகொண்டிருக் கின்றாள்.





**அ.ஷம்யூலிஷா**

மட்/மகாஜனக் கல்லூரி

# பிரிவின் தேடல்

அப்பாடா! என்றபடி இருந்தது வீடு. வீட்டில் யாருமில்லை. வெறிச்சோடிப் போய் கனவு கலையாத கண்களைப்போலிருந்தது. அப்போ தான் ராஜி வேலைக்குப் போய்ட்டு வந்து மேலக் கழுவிப் போட்டு ஒரு சாஞ்ச கதிரையில் வந்து இருக்கிறாள். அதுவரை அவளுக்கு அந்த நினைவு வரவே இல்லை. திடீரென வாய்க்காலில் வெட்டிவிட்ட தண்ணி போல சல சலவென கண்ணீர் வரவே அவள் தனது சட்டையால் மூக்கைத் துடைச்சிக்கொண்டாள்.

"ச்சே.. என்ன வாழ்க்கை இது. கமலா இப்பிடிச் செய்வாளென்று நான் கனவிலயும் நினைக்கல்ல" என அவளது மனம் தாங்கமுடியாமல் பீறிட்டுக் கத்தினாள்.

மூணுவருசத்துக்கு முன் அவளுடன் ஒண்டாப் படிச்ச புள்ளதான் கமலா. அவள் திடீரெண்டு ஏதோவொரு குளிசையை விழுங்கி உயிருக்குப் போராடி வாட்டுக்கு வந்தாள். ஏன் அவள் அப்பிடிச் செஞ்சாள் என்று ஒருவருக்கும் உண்மை தெரியா. ஆனா அவள் அப்பிடிச் செஞ்சதுக்கு அவள்ற வீட்டுச் சுழலும் ஒரு காரணமா இருக்கலாம் என்று எண்ணியவளாய் விம்மி விம்மி கத்தினாள். அவள்ற கண்கள் காஞ்ச கொச்சிக்காய் பழுத்த மாதிரி இருந்துது. தொடர்ந்து பழைய நினைவுகளுக்குள் சென்றாள். கமலாட அப்பா சரியான குடிகாரன். அவர் அவள கல்லாணம் கட்டு எண்டு வற்புறுத்தியதாகவும் அவள் "அப்பா எனக்கு இப்ப வேணாம். நான் படிக்கோணும்" எண்டு சொன்னதாகவும் என்னிடம் வந்து சொன்னாள். அவள் அப்ப சொன்னது இப்பவும் என்ட காதில் இரஞ்சிகொண்டே இருக்கு எண்டு ராஜி மோட்டைப் பார்த்தாள். அதில ரெண்டு பல்லி ஏதோ பேசிக் கொண்டிருந்தது. அது என்ன சொன்னதுதெண்டு தெரியா. ஆனா மற்ற பல்லி தலய ஆட்டுவது தெரிந்தது. ஆனால் தன் இறுகிப் போன நெஞ்சைக் கலைக்க அவளால் முடியவில்லை.

திடீரென ஒரு மணிச் சத்தம் கேட்க அவள் பேயறஞ் சவளப் போல கண்ணத் தொறச்சிப் போட்டு போய்க் கதவைத் திறந்தாள். எதிரே பக்கத்து வீட்டு ராணி அக்கா வடிவா உடுப்பு உடுத்து வந்திருந்தா.



அவர் அவள கல்லாணம் கட்டு எண்டு வற்புறுத்தியதாகவும் அவள் "அப்பா எனக்கு இப்ப வேணாம். நான் படிக்கோணும்" எண்டு அவள் சொன்ன தாகவும் என்னிடம் வந்து சொன்னாள்.

"என்ன ராஜி ஒரு மாதிரியா இருக்கா. என்ன காச்சலா?" எண்டு கேட்டா.

அதற்கு அவள் "ஒண்டு மில்ல ராணி அக்கா". எண்டு முகத்தச் சுழிச்சுக்கொண்டு சொன்னாள்.

"சரி ராஜி வாவன் நாம ஒருக்கா சத்துருக்கொண்டானுக்குப் போய்ட்டு வருவம்" எண்டா. ராஜி அந்த ஊரைக் கேட்ட உடனே "அங்கயா? ஏன்?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

"இல்ல எண்ட மாமிட வீடு அங்கதான் இருக்கு. அவவயும் பாத்துக் கனநாள். அப்ப போய்ப் பாத்திட்டு வருவம் எண்டு பாத்தனான். அப்ப நீ வீட்ட சும்மாதானே இருக்க. உன்னக் கூட்டிட்டுப் போவமெண்டு நினைச்சனான்" எண்டு ராணி சொன்னாள். அப்போது ராஜியின் முகம் விகாரமடைந்து உடம்பு பதறி வேர்வை யால நனைஞ்சது. "என்னடா நான் இப்பிடி வருமெண்டு நினைக்கல்ல."எண்டு ஒரு நிமிசம் ஆடிப்போனாள். ஏனென்றால் கமலாட ஊர் அதுதான். அதுக்குப் பிறகு அவளப் பாக்கல்ல. இண்டைக்கு இப்பிடி வருமெண்டு அவளுக்கு தெரியாது.

கலியாணமாச்சா? இல்லையா? அவள் எப்பிடி இருக்காள் எண்டெல்லலாம் அவள்ற மனம் அடிச்சுக்கொண்டே இருந்தது. இருந்தும் அவளப் பாத்தா பாத்த உடனே அவளப் பாத்து நாக்கப் புடுங்குற மாதிரி நாலு கேள்வி நச்செண்டு கேக்கோணும் போலயும் இருந்தது. ராஜிக்குக் கொஞ்ச நேரம் என்ன செய்யுறஎண்டு தெரியாம இருந்தது. சரி அவள எப்பிடியாவது பாக்கணும் எண்டுட்டு ராஜி வெளிக்கிட்டுட்டுப் போனாள். அவளும் போகப் போக ஊரே மாறிப்போன போல இருந்தது. இந்த இடத்தில அவள எங்க போய்த் தேடுற? நான் அவள எப்பிடிப் பார்க்கிற எண்ட நினைப்பு புழுப் போல துடித்துக்கொண்டிருந்தது. ரெண்டு பேரும் வெகு தூரம் நடந்து ஒரு வீட்ட போனாங்க. அங்க அவங்க கொஞ்ச நேரம் இருந்திட்டு திரும்ப நடக்க தொடங்கினாங்க. அவங்க நடக்க நடக்க பாதை நீண்டு போற மாதிரி இருந்தது. பிறகு ராஜி ஒரு வீட்ட போய் கமலாவப் பத்தி விசாரிச்சாள். அவங்க அப்பிடி ஒரு ஆள் இருந்ததாக கேள்விப்படல்ல எண்டு சொன்னாங்க. திரும்ப அவங்க இன்னொரு வீட்ட போய்க் கேட்ட போது அவங்க மயிலம்பாவெளியில இருக்காங்க. ஆனா அவள் கலியாணம் கட்டி ரெண்டு பிள்ளைகள் இருப்பதாகவும் சொன்னாங்க. எண்டாலும் அவள் அத நம்பல்ல. ஏனெண்டா அவள அவள் பிரிஞ்சே ஒரு மூண்டு வருச மாகுது. அதுக்குள்ள எப்பிடி எண்டு நினைச்சுக் கொண்டு அவளைத் தேடிக் கண்டுபிடிப்பேன் எண்ட பிடிவாதத்துடன் நடையைக் கட்டினாள்.

# இலக்கு

"பாரதி...பாரதி..."

விடிந்தும் விடியாததுமாய் பாரதியோட அம்மா கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறா. பாதி காதில் விழுந்தும் அதக் கவனிக்காம பாரதி மறுபுறம் புரண்டு படுத்துக்கொண்டாள். அவள் கண்ணெதிரே தெரிந்த சுவரில் தான் ஏற்கனவே எழுதி வைத்த தனது இலக்கைக் கண்டதும் கண்கள் அகல விரிய விழித்துக்கொண்டாள். தான் நிச்சயம் ஒரு சிறந்த ஓவியராக வரவேண்டும் என்பது அவளது இலக்கு. ஆனால் காலத்தின் கட்டாயம் என்பதைவிட அவளது பெற்றோரின் கனவோ வேறாகி விட்டதால் அந்த இலக்கை நோக்கியும் பயணித்துக்கொண்டிருக்கிறாள் பாரதி.

ஸ்கூலுக்குப் போக சைக்கிளை எடுத்த பாரதியிடம் அவளது வழக்கமான கலகலப்பு தொலைந்துபோனதைக் கண்டுகொண்டார் அவளது அம்மா. "பாரதி நீ எதுக்கும் டென்ஷனாகாத.. மிஸ் உன்ன சுவரா வெக்ஷோப்புக்குப் போக விடுவாங்க... நீ கவனமா போய்ட்டு வா.." என்று ஆறுதல் சொன்ன அம்மாவிடம் கையசைத்து விடைபெற்றாள் பாரதி. போகும் வழியில் சைக்கிள் சில்லுப் போலவே அவளது எண்ணச் சில்லும் வேகமாய்ச் சுழன்றது.



"ச்சீ... ஏன் எனக்கு மட்டும் இப்பிடி? டீச்சரெண்டா எம்மை செதுக்குற சிற்பி எக்ஸ் ஸாமில பாஸ் பண்ணிட்டா அவங்க எல்லாம் பெரிய ஆக்களா? எனக்குத் தான் படிக்கவே வருகுதில்லையே. அப்பநான் என்ன பண்ணுற. எனக்கு படம் வரைய நல்லா வருகுதே. நான் அதவச்சி என்னோட லைபை பாத்துக்குவன். எனக்கு நல்லா படம் வரய வரும் எண்டு காட்டித்தந்தது ஒரு மிஸ் தான். ஆனா படம்படமா கிறுக்கிக்கிட்டே இருந்தா உன்னோட லைப் ஸ்பொயில் ஆகிரும்னு பயமுறுத் துறதும் ஒரு மிஸ்தான். ஏன் இப்பிடி மிஸ்களிலேயே பலரகம். இதுதான் அந்தக் காலத்திலேயே 'பறவைகள் பலவிதம்... அவை ஒவ்வோன்றும் ஒருவிதம்' என்று பாடி வச்சிட்டாங்களோ!" எனத் தன் உயிர்த் தோழியான காற்றுடன் கதை பேசி வந்தாள்.

செல்வி.
**பிரவீனா அருணகிரிநாதன்**



எனக்குப் பிடிச்ச மிஸ் எனக்காக என்னோட க்ளாசுக்கே வந்து மற்ற மிஸ்கிட்ட பெமிஷன் கேட்டாங்க. அப்பகூட அந்த மிஸ் "நான் இன்னைக்கு படிப்பிக்கிறதில நாளைக்கு எக்ஸாம் வைப்பன். அதில குறைய மாக்ஸ் எடுத்தா பாரதிய கிளாச விட்டு அனுப்புவன்...." என்று பல கெண்டிஷனோடதான் என்ன விட்டாங்க. "பாரதி...." நண்பிகளோடு அரட்டை அடித்துக்கொண்டிருந்த பாரதி தன்னை யாரோ அழைப்பது கண்டு திரும்பினாள். அவளோட நல்ல மிஸ் நிண்டு கொண்டு இருந்தாங்க. "போவமா? பாரதி..." என்று கேட்டபடியே மிஸ் நடந்தாங்க. "பாரதி.... நீ நல்லா படிக்கக் கூடிய புள்ள. இருந்தாலும் கொஞ்சக் காலமா நீ குறைய மாக்ஸ் எடுத்ததாலதான் உன்ட மிஸ் எரிஞ்சு விழுறாங்க. உன்னோட பேரண்சும் நீ நல்லா படிக்கோணும் எண்டுதானே விரும்புவாங்க?" எனப் பாரதிக்கு மிஸ் கூறிய ஆறுதல் மன சுமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து மனதை லேசாக்கிவிட்டதைப் போல் இருந்தது.

கொடுமையான கொழுத்தும் வெயிலில் குளிர்ச்சிக்கென நட்டு வைத்த மரங்களைக் கண்ணுக்கெட்டியவரை காணாததால் பாதையின் இருமருங்கையும் நிரப்பிய கட்டிடங்களின் விம்பத்தில் வளைவு நெளிவுகளோடு மிஸ்சும், பாரதியும் நடந்தார்கள். சேருமிடம் நெருங்கியது. ஒருபக்கம் மண்ணெல்லாம் அள்ளி, கொங்கிறீட் போட்டு பெரிய ஒரு ஓடை தெரிஞ்சாலும், மற்றப் பக்கம் சின்னனா ஒரு குட்டித் தரை பச்சையாய்த் தெரிந்தது. பரவால்ல இந்த இடத்தையாவது விட்டு வச்சிருக்காங்களே எண்டு எண்ணிக்கொண்டாள் பாரதி.

"நமக்கே இப்பிடி வெயில் எரிக்குதே.. அப்ப நமக்கு பின்னால இருக்கிற சின்னஞ் சிறுசுகளுக்கு..ப்பா நினைச்சாலே பயங்கரமா கிடக்குது" தனியே அமர்ந்து இவ்வாறு சிந்திக்கும் கணப்பொழுதில் பாரதியின் கைகள் ஒரு கிறுக்கலைத் தீட்டிவிட்டது. சில கணங்களின் பின், மனதில் இனம்புரியாத நெருடல் பாரதியைக் குத்திகொண்டே இருந்தது. ஏன் என்னால என்னோட இரண்டு இலக்குகளையும் அச்சீவ் பண்ண ஏலா? அடிக்கடி பாரதி தன்னிடமே கேட்டுக்கொண்டாள். மற்ற மாணவர்கள் திடீரென உரத்துக் கதைப்பதும், மீண்டும் மௌனமாகி விடுவதும் மாறிமாறி நடந்தாலும், சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு கடிகாரத்தின் முட்கள் நிசப்தத்தையும் சத்தமாக்கி ஓடும் போது மனித வாழ்வின் ஒவ்வோரு கணமும் வரலாறு படைப்பதற்கான பொன்னான கணம் என்பதை உணர்ந்தாள் பாரதி.

ஆசையோடு வந்திருந்தாலும், மனம் எங்கோ சென்றதால் அங்கு வந்தோர் கொட்டிய சொற்கள் கற்கள் கொட்டப்படும் சத்தத்திற்கு ஒப்பானது. போகப் போக பாரதியை அறியாமலே பாரதி பல சித்திரங்களில் லயித்தாள். அவளது ஆர்வம்தான் தூண்டியதோ என்னவோ? அவளை அறியாமல் வந்த ஈடுபாடு அவளைச் சுண்டி இழுக்க பல சித்திரங்களில் அவளது கைவண்ணம் நீண்ட நேரமாய் கதை பேசியது. நேரம் சுழன்றதை அறிந்தாலும் ஏதோவொன்று பாரதியைக் கட்டிப்போட்டது.

அறிவை வளர்த்திட தனியார் வகுப்புகளும் தேவை என எண்ணும் சமூகத்தில் பாரதி விதிவிலக்கானவள் அல்ல. நொடிப் பொழுதில் கற்றிடப் பிடித்த அனுபவப் பாடமும், கற்றிட வேண்டிய பாடமும் இருதலைக்கொள்ளி எறும்பாக பாரதியை நசுக்கிவிட்டன. பிடித்ததை விட்டு வேண்டிய வகுப்பிற்குச் சென்ற பாரதியின் உள்ளம் பாடத்தில் லயிக்கவில்லை. ஒரேயொரு கேள்வி அவளது ஆழ்மனதை துளைத்துக்கொண்டிருந்தது. "என்னால் என் இரு இலக்கையும் அடைய முடியாதா? ...." நிச்சயமாய் முடியும் என்றது ஆழ்மனம்.

மனத்தெளிவு அடைந்த பாரதி சுய நினைவு பெற்றாள். அன்றைய பாடமும் அவளுக்கு ஒன்றை உணர்த்தி நின்றது. $P+Pgh+1/2PV2=K$ கரும்பலகையில் எழுதப் பட்டிருந்த பாடம் வேறாயினும் அது அன்று பாரதிக்குக் கை கொடுத்தது. ஆம். K என்னும் மாறிலியானது வெற்றி தன்னம்பிக்கை + விடாமுயற்றி + அர்ப்பணிப்பில் தான் தங்கியுள்ளது. பாரதிக்கு அன்றையநாள் அவள் வாழ்வில் ஒரு பொன்நாள்.

பாரதியின் கனவுகள் நனவாகுமா? இல்லை கனவுகள் கனவாகவே போய்விடுமா? நிச்சயம் இல்லை. வெற்றி என்னும் வெளிச்சத்தை அடைய என்ன போராட்டம் நடத்தவும் பாரதி தயார்.

# பிரதேச மட்ட தேசிய இலக்கிய விழா – 2015

சிரேஸ்ட பிரிவு

| போட்டியின் தலைப்பு | பெற்ற நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| கவிதை எழுதுதல் | 1ம் இடம் | மேரிஜோஷ்னா இக்னேஷியஸ் விஜயா | மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| | 2ம் இடம் | வேர்ஜினி பெர்ணான்டோ | மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| | 3ம் இடம் | துவாரிகா சுகுமார் | மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை |
| கட்டுரை | 1ம் இடம் | இ.பிரதுஷன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி |
| | 2ம் இடம் | வ.சஜித் | மட்/புனித மிக்கேல் கல்லூரி |
| | 3ம் இடம் | ஞா.ஆக்காஷ் | மட்/புனித மிக்கேல் கல்லூரி |
| கவிதை பாடல் | 1ம் இடம் | அருணாகரன் ஜனுஜன் | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயம் |
| | 2ம் இடம் | ஜெகேஸ்வரன் பிரஷன்னா | மட்/சிவானந்த தேசிய பாடசாலை |
| பாடல் நயத்தல் | 1ம் இடம் | அ.யூலினா | மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்தாவித்தியாலயம் |
| | 2ம் இடம் | இருதயராஜ் யூட்சிதன் | மட்/மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயம் |

திறந்த பிரிவு

| போட்டியின் தலைப்பு | பெற்ற நிலை | பெயர் |
|---|---|---|
| பாடல் ஆக்கப் போட்டி | 1ம் இடம் | திருமதி. இந்திராணி புஸ்பராஜா |
| | 2ம் இடம் | திருமதி. அம்பிகா தெய்வராசா |
| | 3ம் இடம் | கலாபூஷணம் கார்த்திகேசு சிவலிங்கம் |
| நாட்டார் கலை கற்றல் போட்டி | 1ம் இடம் | திரு.வேலுப்பிள்ளை புவனேஸ்வரன் |
| | 2ம் இடம் | அம்பிகா தெய்வராசா |
| விவரணப் போட்டி | 1ம் இடம் | திரு. வேலுப்பிள்ளை புவனேஸ்வரன் |
| | 2ம் இடம் | அம்பிகா தெய்வராசா |
| கவிதையாக்கம் | 1ம் இடம் | செல்வி. ஸைலேந்திரிக்கா கிருபாகரன் |
| | 2ம் இடம் | கலாபூஷணம் பொன் தவநாயகம் |
| | 3ம் இடம் | திருமதி. இந்திராணி புஸ்பராசா |
| சிறுவர் கதைப் போட்டி | 1ம் இடம் | திருமதி. சுந்தரமதி வேதநாயகம் |

மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை
நடாத்தும் முத்தமிழ் விழாவும்

**"தேனகம்" சிறப்பு மலர் வெளியீடும் - 2015**

**இடம்**
**மட்/ மகாஜனக் கல்லூரி**

**காலம்**
**05.04.2016 – செவ்வாய்க்கிழமை**
**மு.ப 09.00 மணி**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதேச கலாசாரப் பேரவை**
**மண்முனை வடக்கு**

**தலைமை**

திரு.வெ.தவராஜா,
பிரதேச செயலாளரும், கலாசாரப்பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.

**பிரதம அதிதி**

திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்
அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்.

**சிறப்பு அதிதி**

பேராசிரியர் சி.மௌனகுரு

**கௌரவ அதிதிகள்**

கௌரவிக்கப்படும் கலைஞர்கள்

பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு

திருமதி. கத்தரீன் வயலற் சந்திரசேகரம்

திரு.பெரியதம்பி வினாசித்தம்பி ஜெயராஜா

திரு.துவான் ஆரிப் சராவூடீன்

திரு. சிதம்பரபிள்ளை நவராசா


முத்தமிழ் விழா சிறப்பு மலர் - 2015
கலாசாரப் பேரவை - பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு